புதுக்கோட்டை ஸமஸ்தான

யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம்௵ ஜனவரி௴ 25௳ [ந. 28.

பிரஸங்கம் **XXVIII.**

பொருளாதாரமும் யுத்தமும்.

இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் ஒரு விந்தையுண்டு. யுத்தத்திலிறங்கி யிருக்கும் இரு திறத்தார்களும் சண்டையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், திட்டங்கள் போட்டுக் கொண்டும், சட்டங்கள் அமைத்துக் கொண்டும் வியாபாரத் தூது கோஷ்டிகளையனுப்பி, வியாபார உடன்படிக்கைகள் செய்து கொண்டும், பொருளாதார சம்பந்தமான சபைகளைக் கூட்டிக்கொண்டு மிருக்கிறார்கள். மேலும் அணிகளை வகுத்துக் கொண்டு போர் முனையிலெதிர் நின்று சைனியங்கள் ஒன்றோடொன்று கை கலப்பதற்குப்பதிலாக, தொழிற்சாலைகளையும், கப்பல் கட்டுத்துறைகளையும், சேமித்து வைத்திருக்கும் ஆகார தள வாடங்களையும் சேதமாக்கி, கடலில் செல்லும் வியாபாரக் கப்பல்களையும் உடைப்பது விந்தையினும் விந்தை. முற் காலத்தில் போர் முனை வெற்றிக்காக வீரர்கள் சைனியங்களை ஒதுக்கிவிட்டுத்தனியே நின்று மல் யுத்தம் செய்ததாகக்கேட்டிருக்கிறோம். சரித்திரத்தில் ஆங்கில அரசனான ரிச்சார்டும், முஸ்லீம் வீரனான ஸாலதீனும், இம்மாதிரி ஈச்ச மரச்சோலையில் சண்டை செய்ததாக நாம் படித்திருக்கிறோம். அக்காலம் மாறிவிட்டது. இப்பொழுது யுத்தமானது சுரங்கங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வந்து விட்டது. என்ன பிரளயம். அங்காரகன் வேலையை விச்வகர்மா எடுத்துக் கொண்டு விட்டானோ?

இந்தப் பிரஸங்கத்தை எழுத ஆரம்பம் செய்யுமிச்சமயத்தில் என் முன்னே இன்றைய தினத்துச்சமாசாரப் பத்திரிகை இருக்கிறது. அதைப்படித்துப்பார்த்தால் என்னுடைய கட்டுரையைப்பற்றிய சமாசாரங்களே அதில் காணப்படுகின்றன. முதல் பக்கத்தில் "ரூர் கைத்தொழில் சாலைகளில் 500 பிரிடிஷ் விமான எதிர்ப்புகள்" 'யுத்தக்கப்பல்' 'நிலயங்களின் மேல் விமான எதிர்ப்பு' மற்றொரு இடத்தைப் பார்த்தால் 'கடன்-ஒத்தி மசோதா', 'அமெரிக்க-கப்பல் கட்டும்-திட்டம், அடுத்தபக்கத்தைத்திருப்பினால், 'பிடித்த நாடுகளில்-திட்டம்-போட்ட-கொள்ளை', 'யுத்த-திரவியம், யுத்த-சேமியம்', 'திட்டம் போட்ட பொருளாதாரம்' 'ஹிட்லர் அமைத்திருக்கும் அடிமை—வேலை, இவையெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயங்களாகத் தோன்றினாலும் நீங்கள் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டு அவைகளெல்லாம் நான் எடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தைப் பற்றிய ஒரே விஷயத்தில் ஒன்று படுவதைப் பார்ப்பீர்கள்.

பொருளாதார யுத்தம்

இது ஒன்றும் புதிதல்ல. மனிதன் யுத்தத்தில் பிரவேசித்த நாளாக முற்றுகை போடுவதும், கோட்டைக்குள்ளிருப்பவர்களைப் பட்டினி போடுவதும் சகஜம்தான். யுகங்களாக இக்காரியங்களை ராணுவ நிபுணர்கள் திட்டம் செயதும் சைனியங்கள் நிறைவேற்றியுமிருக்கின்றன. நெபோலியன் காலத்தில் பிரிடனது கடல் முற்றுகை போட்டது. அதற்கு யெதிராக ஐரோப்பிய-வியாபாரத்திலிருந்து பிரிடனை விலக்க நெபோலியன் யத்தனித்தான். ஆனால், சென்ற மகாயுத்தத்தில்தான் இந்த மாதிரியான யுத்தத்தின் பலம் வெளிப்பட்டது.

சென்ற யுத்தத்திலிருந்து தெரிந்துகொண்டது

1914—18 வருஷத்திய யுத்தத்தில் பிரிடன் பிரவேசித்தபோது அதற்குப் பெரிய பலமொன்றிருந்தது; அதாவது, அதனுடைய கப்பல் பலமும், அதற்குச் சொந்தமான கடற்கரை நிலயங்களும்தான். இந்த பலத்தைக் கொண்டு கடலிலிருந்தும், மகாசமுத்திரங்களிலிருந்தும் ஜெர்மன்கப்பல்கள் விரட்டப்பட்டன. முடிவில் ஜெர்மானியர்களுக்குத் தங்கள் கப்பல்களை உடைத்து அமிழ்த்தவும், நடுநிலைத்துறை முகங்களில் ஓடி ஒளியவும் நேரிட்டது. இல்லாவிடில் பிரிடன் இந்தக் கப்பல்களைப் பிடித்துக்கொண்டன. இதிலிருந்து ஜெர்மனிக்கு சாமான்களுடைய வரத்து அடியோடு நின்று, பஞ்சமேற்பட்டு, பிரஜைகள் மாண்டார்கள். நீர் மூழ்கி யுத்தம் பலிக்கவில்லை. இதிலிருந்து 1918-ம்வருஷம் நவம்பர் 11-ல் ஜெர்மனி சரணாகதி செய்துகொண்டது.

இதுவே பொருளாதார-யுத்தம். இம்மாதிரிப் போரால் மட்டும் வெற்றி வந்துவிடாது. ஆனால் இதன் உதவியால் போரானது சீக்கிரத்தில் முடிவுபெறும்.

பொருளாதார யுத்தமென்றாலென்ன?

இம்மாதிரி யுத்தத்தில் ஒரு தேசத்திலுள்ள எல்லா மனிதபலமும் யுத்த தளவாடங்களும், செல்வமும் உபயோகப்படும்.

பொருளாதார யுத்தமும், பாதுகாப்பும்.

இந்த யுத்தத்தால் ஒரு தேசம் தன்னையும் பாதுகாத்துக் கொண்டு பகைவனையும் எதிர்க்க முடியும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யுத்த-காலத்தில் செய்வதோடுகூட சமாதானக் காலத்திலும் கைக்கொள்ள வேண்டும். சமாதானக் காலங்களில இதற்கு வேண்டிய திட்டங்களைப் போட்டு, காரியங்களைத் திருத்தி அமைத்து, சாமான்களைச் சேகரித்து, பிறர் கையைப் பார்க்காதிருக்க உள்நாட்டுத் தொழில்களை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும. யுத்த காலத்தில் இவைகளை மேலும் அதிகப்படுத்தி, செல்வத்தை விருத்தி செய்து செலவைக்குறைக்க வேண்டும்.

பொருளாதாரமும் படையெடுப்பும்.

போர்புரியுங்காலத்தில் பகைவனை முற்றுகை போடுவதே பொருளாதார யுத்த மாகும். இதற்கு ஒரு தேசத்தைக் கப்பல்களால் சுற்றிவளைத்துக் கொண்டு சாமான்களுடைய வரத்தை நிறுத்திவிடலாம். அல்லது கடலில் செல்லும் வியாபாரக்கப்பல்களை நீர்-மூழ்கிகளைக் கொண்டுதாக்கலாம். அல்லது, விமானங்களைக் கொண்டு சாமான்கள் சேமித்திருக்கும் நிலயங்களையும், தொழிற்சாலைகளையும் ரஸ்தாக்களையும் தகர்க்கலாம். நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலிருந்து, ராஜ்யதந்திரத்தால் எதிரிக்குச் சாமான்கள் வராதபடி தடுக்கலாம்.

தற்காலத்திய யுத்தங்கள் நீடித்து நடக்கக்கூடியவை.

இக்காலத்து யுத்தங்களெல்லாம் எளிதில் நிற்கக்கூடியவை யல்ல. இக்காலத்தில் பலவந்தப்படுத்திப்பிரஜைகளனைவரும் சைனியங்களில் சேர்க்கப் படுகிறார்கள். ஸ்திரீகளுக்கும், ஏதாவது வேலை செய்ய, பலவந்த மேற்படுகிறது. யந்திர சாதனங்களால் போர் முனையானது விஸ்தாரப்பட்டு விட்டது. யுத்தமும், தரையோடு நில்லாமல், ஆகாயத்திலும் நீரிலும் நடை பெறுகிறது. ஏராளமாய்க்கடன் வாங்கி, நோட்டுக்களடித்து, பணமும் சேர்த்து வருகிறது. சமீபத்தில் நடந்த அபிசீனியா யுத்தம் சீக்கிரத்தில் முடிந்ததற்குக் காரணம் அபிசீனியர்களுக்கு ஆயுதங்களில்லாத குறைவுதான். ஆகவே இது பண்டைக் காலத்திய சண்டை போன்றது. ஸ்பெயினில் $2\frac{1}{2}$-வருஷங்கள் உள்நாட்டுக் கலகம் நீடித்தது. சீன யுத்தம் 43-மாதங்களாகியும் நின்றபாடில்லை. இருகக்ஷிக்காரர்களிடத்திலும் வேண்டிய ஆயுதங்களிருந்தால் தற்காலத்திய யுத்தங்கள் விரைவில் முடியமாட்டா.

பொருளாதார சாஸ்திரப் பயிற்சி.

இந்தக்காரணத்தாலும், யுத்தங்களை நடத்த "அளவிறந்த செல்வம் தேவையானதாலும், இதை ஒரு சாஸ்திரமாக, சமாதானக் காலங்களிலும் பயில வேண்டியிருக்கிறது. ஆகவே, பிரிடனில், யுத்தமாரம்பித்ததற்கு முன்னமேயே இது பயிலப்பட்டு, இப்பொழுது பிரத்தியேகமாக இதற்காக ஒரு மந்திரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜெர்மனிதேசத்தில் இது ஒரு சாஸ்திரமாக ஏற்பட்டு, இதைப்பற்றிய கிரந்தங்கள் ஏராளமாகயிருக்கின்றன. அதற்குக்காரணம் ஜெர்மனியின் அரசியல்தான். புராதனகாலத்தில் ஸ்பார்டா சமஸ்தானத்திலிருந்ததுபோல, பலகாலமாக ஜெர்மனியில் வியாபாரமும், தொழிலும் சைனியங்களுடைய சௌவுகரியத்தை முன்னிட்டேற்பட்டன. புதிய நாஸி—ராஜாங்கமேற்பட்டபிறகு சைனியம், வியாபாரம், தொழிலனைத்தும் உலகத்தை ஜயிக்க உபயோகப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

4-வருஷ—திட்டம்.

மேற்சொன்ன சாஸ்திரப்பயிற்சியிலிருந்துதான் 4-வருஷதிட்டமொன்றை ஜெர்மனியில் மார்ஷல் கோரிங் ஏற்பாடுசெய்தார். அதன் நோக்கம் 4-வருஷங்களுக்குள்ளாக, ஜெர்மனிக்கு யுத்தகாலத்தில் வேண்டிய எல்லாசாமான்களையும் உள்ளூரிலேயே செய்துவிட வேண்டுமென்பதுதான். உதாரணமாக, ஜெர்மனியில் ப்ரனஸ்விக்கென்ற பிரதேசத்தில் இரும்பு-சத்து உண்டு; ஆனால் அதில் இரும்பு பாகம் குறைவுதான். இருந்தபோதிலும் ஏராளமான ஆட்களைக்கொண்டு சத்தை எடுத்து, ஏராளமான நிலக்கரியைக்கொண்டு அதிலிருக்கும் இரும்பை யெடுக்கிறார்கள். கண்ணாடிக்குப்பதிலாக பீங்கானும், தாம்பிரத்துக்குப்பதிலாக அலுமினியமும் உபயோகிக்கப்படுகின்றன. நிலக்கரியிலிருந்து மண்ணெண்ணையும், ரப்பரும் எடுக்கிறார்கள். இவைகளெல்லாம் விநோதமாயினும் காரியத்துக்குதவமாட்டா; செலவுஜாஸ்தி-வேலை யதிகம், கூலியும், பணமுமில்லாத யுத்த, சமயங்களில் இது பாதிக்கும்.

யுத்தப்போக்கில்—கைத்தொழில்களால்—ஏற்பட்ட பிரளயம்.

1914-ம் வருஷத்திய யுத்தத்தைக்காட்டிலும் இப்பொழுது யுத்தம்செய்யக் கைத்தொழிலின் சகாய மதிகமாகவேண்டும். சென்ற யுத்தம் நடந்தபோது, தேசத்துமக்களனைவரையும் சண்டைக்கு அனுப்பிவிட வேண்டுமென்ற கற்பனையிருந்தது. இக்காலத்து அபிப்பிராயத்தில் சண்டைக்குப்போகக் கட்டாயப் படுத்தாது கைத்தொழில் செய்ய அனைவரையும் கட்டாயப்படுத்தவேண்டுமென்ற நோக்கம் வந்துவிட்டது. இதிலிருந்துதான் எதிரியைக்கொல்ல ஆயுதங்கள் கிடைக்கும். மிஸ்டர் சர்ச்சில், சிலதினங்களுக்கு முன் அமெரிக்கர்களுக்குச் சொன்னமாதிரி, அமெரிக்காவிலிருந்து சிப்பாய்கள் வேண்டாம், அங்கிருந்து விமானங்களும், கப்பல்களும், மற்ற ஆயுதங்களும்தான் வேண்டும். ஏடோ ஈடன் முதலிய பள்ளிக்கூடங்களில் விளையாடிவிட்டு யுத்தத்துக்குப்போனால் மட்டும் வெற்றிகிடையாது; ஆயிரக்கணக்கானவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்வதே அவசியம். எண்ணெயைக்கொண்டு யந்திரங்களையோட்டி யுத்தம் செய்வதென்றேற்பட்டது முதல் 100-வருஷங்களுக்கு முன்னால் நீராவியால் கைத்தொழிலில் பிரளயமேற்பட்டதுபோல, இப்பொழுது யுத்தத்திலுமேற்பட்டு விட்டது. 1918-ம் வருஷத்தில் ஜெர்மானியர் தோற்றது ஆயுதக்குறைவால்தான்.

இந்த யுத்தத்தில் போலண்டு தோற்றது வீர்யக்குறைவாலல்ல; ஜெர்மனியின் விமான, டாங்குகளின் பலத்தால்தான்; இரும்புக்கைத் தொழில்களில் முன்னேறிய தேசங்கள்தான் இனி யுத்தத்தில் வெற்றிபெறும், மற்றதேசங்களின் கதி அதோகதிதான்.

ஆகையால் இக்காலத்து யுத்தத்துக்கு, போர் முனையில் சிப்பாய்களும், உள் நாட்டில் தொழிலாளர்களும் வேண்டும். ஒரு சிப்பாய் போர் முனையில் சண்டை செய்யவேண்டுமானால் தொழிற்சாலையில் 5 பேர்கள் வேலை செய்து ஆயுதங்கள் தயாரிக்கவேண்டும். ஆகையால், தற்காலத்திய அபிப்பிராயத்தில் ஏராளமான தொழிலாளர்களை நியமித்துக்கொண்டு, சில பேர்களை மட்டும் ஆயுதங்களைப் பிரயோகிக்கப் போர் முனைக்கு அனுப்பினால் போதும்.

பொது மக்களுக்கு வேண்டிய கைத்தொழில்கள்.

ஆனால் யுத்த காலத்தில் யுத்த தளவாடங்கள் செய்வதோடு மட்டும் நிற்கக் கூடாது. பொது மக்களுக்கு வேண்டிய உணவு, உடுப்பு, வாசஸ்தலம், பொழுது போக்க வேடிக்கைகளெல்லாம் உண்டாக்கவேண்டும். அநாவசியமானவைகளை யுத்த காலத்தில் நிறுத்தலாமேயொழிய அவசியமானவைகளை நிறுத்தக் கூடாது. யுத்த காலங்களில் சிப்பாய்கள் தான் அவசியம், பொதுமக்களவசியம் இல்லை என்று தோன்றுவது சகஜமே. ஆனால், சண்டையிலிருப்பவர்களுக்கு ஆயுதங்களையும், ஆகாரத்தையும் தேடிக்கொடுப்பதற்காகவாவது பொது மக்கள் வேண்டாமா? பொது மக்களின் வெறுப்பேற்பட்டால் சைனியங்களுக்குச் சண்டையேது? வெற்றியடைந்து ஊருக்குத் திரும்பும் போது தன் பெண்டிரும் மக்களும் நோய் வாய்ப்பட்டு, பசியால், மடிந்து கிடந்தால் போர் வீரனுக்கு என்ன சந்தோஷம்? இந்த கதிதான் ஜெர்மனிக்கு 1918-ம் வருஷத்திலேற்பட்டது. யுத்த களத்தில் தோல்வியடைவதற்குள் உள் நாட்டில் கலகம் வந்து விட்டது. ஆகையால் ஜீவகாருண்யத்துக்காக இல்லாவிட்டாலும், சைனியத்தின் நன்மைக்காகப் பொது மக்களின் க்ஷேமத்தை, யுத்த காலங்களில் கோரவேண்டும்.

வியாபார சாமான்களும் செய்யப்படவேண்டும்.

யுத்த காலங்களில் வியாபார சாமான்களைச் செய்வதையும் நிறுத்தக்கூடாது. இதுதான் வரும்படிக்காதாரம். யுத்தத்தை நடத்த இரும்பாலடித்த குண்டுகளும் வேண்டும், பொன்னால் செய்த காசும் வேண்டும். யுத்தமென்ற குண்டோதரனுக்கு தங்கமென்பது தீனி. கப்பல்களுடைந்து போகும், இவைகளை வெளி நாடுகளிலிருந்து புதிதாய் வாங்க லக்ஷம் லக்ஷமாய்ப் பணம் வேண்டும். யுத்த, காலங்களில் வியாபாரங்கள் தயங்குமென்பது யாவருமறிந்தது. தொழிலாளிகளும் சண்டைக்கனுப்பப்படுவார்கள். வியாபாரம் குறைந்தால் வரும்படி குறையும். ஆகையால் வியாபாரத்துக்கு வேண்டிய சரக்குகளைச் செய்யும் தொழில்களையும் நிறுத்தக்கூடாது.

ஆகவே தற்காலத்திய யுத்தமெல்லாம் பொருளாதாரங்களுக்குள் ஏற்படும் யுத்தமே.

எந்த தேசத்துக்குத் தொழில் பலமும் செல்வ பலமுமுண்டோ அந்த தேசமே ஜெயிக்கும். எவர்களுக்கு யுத்த தளவாடங்கள் அதிகமாய்ச் செய்ய முடியுமோ அவர்களுக்கே வெற்றி. ஏற்கனவே செய்து வைத்திருக்கும் ஆயுதங்கள் குறையக்குறைய, புது ஆயுதங்கள் ஏராளமாய்ச் செய்யக்கூடிய தேசம் தான் முடிவில் பிழைக்கும்.

பொருளாதார திட்டங்கள்.

ஆகையால், சிப்பாய்களைப் பழக்குவதுபோல், ஆண், பெண் அனைவர்களையும் தொழில்களுக்குத் தயாரிக்கவேண்டும். இதற்குத் திட்டங்கள்போடவேண்டும். தொழில்கள் அரசாங்கமேற்பார்வையில் நடக்கவேண்டும். சாதாரணத்தொழிற்காரர்கள் யுத்த தளவாடங்கள் செய்ய மாற்றப்படவேண்டும். தொழில்களை ஒன்று சேர்த்து, வேண்டியபடி அமைத்தாகவேண்டும், தொழில் முதலாளிகள் அதிக லாபத்தையடையாமலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தாமலும், துரோகம் செய்யாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். பண்டங்கள் வீண் போகாதுதடுத்து, அளவிட்டுக்கொடுத்து, பணக்காரர்கள் போகங்களை கவனியாது செலவை மட்டுக்கட்டச் சொல்லவேண்டும். இது விஷயத்தில் ஜெர்மனியானது கேவலமான காரியங்களைச் செய்கிறது. ஆட்டிறைச்சிக்குப்பதிலாக நாயினிறைச்சி. சட்டையும், செருப்பும் கடிதத்தாலும், சாக்கடையிலிருந்து பிராணிகளுக்குணவும், எச்சலிலிருந்து கொழுப்பும், களிமண்ணிலிருந்து சவுக்காரமும், செய்கிறது.

வியாபாரக்கப்பல்களைக் குறைக்கவும், கடல்-நஷ்டங்களைத் தடுக்கவும் விவசாயமும் அபிவிருத்தியாகவேண்டும்.

இக்காரியங்களுக்கு மூவகைப்பட்ட சாதனங்கள் வேண்டும். 1. ஆட்கள், 2. தளவாடம், 3. திரவியம்.

ஆட்கள்,

முதலெடுப்பில், பிரிடிஷ் தீவுகள் ஜெர்மனியைவிட, விஸ்தீரணத்தில் மிகச் சிறிதாகையால் ஜனத்தொகையும் குறைவாகத்தோன்றும். ஆனால், பிரிடனென்பது சிலசிறு தீவுகள்மட்டுமல்ல. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவொன்றிலேயே ஜெர்மன் தேசங்களைவிட அதிக ஜனங்களிருக்கிறார்கள். கானடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா ஒவ்வொன்றும் பெரியதேசம். இதோடு, இப்பொழுது யுனைடட் ஸ்டேட்ஸின் தொழிலாளர்களெல்லாம் பிரிடன் பக்கம் வேலை செய்கிறார்கள். எகிப்து, இராக் முதலிய நேயநாடுகளில் லக்ஷக்கணக்கான ஜனங்களிருக்கிறார்கள். மேலும், ஜெர்மனி நாடுகளிலிருப்பவர்களைக் கட்டாயப்படுத்தி அடிமைத்தொழில் செய்யச்சொல்லுகிறார்கள். இவ்விதம் அடிக்குப்பயந்து வேலை செய்யும் டேன்களும், போல்களும், டச்சுக்காரர்களும், ஸெக்கியர்களும்

மனதுடன் வேலைசெய்யமாட்டார்கள். இது காரணம் பற்றியே, இப்பொழுது, ஜெர்மனியில, ஸ்திரீகளும், பென்ஷன்தார்களும் வேலைக்கு இழுக்கப் படுகிறார்கள்.

ஜெர்மனிக்கும், பிரிடனுக்கும் மற்றொரு வித்தியாஸமுண்டு. பிரிடனுக்கு வேண்டிய உணவெல்லாம் உஷ்ணதேசங்களில் விளைந்து கொண்டுவரப்படுகின்றன. இவைகளின் விவசாயத்துக்குவேண்டிய ஆட்கள் பிரிடனுக்கு மிச்சம். இவர்களை யுத்தக் கைத்தொழிலுக்குப் பழக்கலாம். ஜெர்மனியில் லக்ஷக்கணக்கான பேர்கள் விவசாயத்துக்கு வேண்டியிருப்பதால் யுத்தக்காரியங்களுக்குக் கூப்பிடமுடியாது. நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியபடி மாற்றுச் சரக்குகள் செய்யவும் அதிக ஆட்கள் பிடிக்கும்.

தளவாடங்கள்.

யுத்த காரியங்களுக்கும், மற்ற உபயோகத்துக்கும் பிரிடனானது உலகத்தில் பல பாகங்களிலிருந்து கடல் மார்க்கமாய்ச் சரக்குகளைக் கொண்டுவரமுடியும். ஜெர்மனி முற்றுகையால் வளைக்கப்பட்டிருப்பதால், அதற்கு உள்ளூரில் விளைவதும் அருகாமையிலுள்ள அயலார்கள் விற்கக்கூடியவைகளும்தான் கிடைக்கும்.

சுபிக்ஷகாலங்களில் ஜெர்மனிக்குப் போதுமான உணவு உள்நாட்டிலேயே விளையும். ஆனால் பெட்ரோலெண்ணெயானது போதாது. அயலார்களாகிய ருமேனியா, ரஷியா கொடுப்பதும் போதாது. நிலக்கரியிலிருந்து இறக்கும் எண்ணெயும் போதாது. ஜெர்மனிக்கு இரும்பும் குறைவுதான். 4 வருஷத் திட்டப்படி உருக்கும் இரும்பும் போதாது. ஸ்வீடனிடமிருந்தும் வேண்டிய இரும்பு கிடைக்கவில்லை. தாம்பிரம், நிக்கல், குரோமைட், டங்ஸ்டன் மாங்கனீஸ், அன்டிமனி, பாதரசம் முதலிய சரக்குகளெல்லாம் யுத்த தளவாடங்கள் செய்ய அவசியமானவை. இவைகளெல்லாம் இப்பொழுது நின்றுபோயின. ரப்பர், எண்ணெய்-விதைகள், திமிங்கிலக்கொழுப்பு, பருத்தி, காபி, கோகோ, தேயிலை எல்லாம் கிடையாது. பருத்தி வஸ்திரத்துக்கல்லாது வெடிகள் செய்யவும் வேண்டும்.

திரவியம்.

திரவியத்தைப்பற்றிப் பேசப் பல விஷயங்களிருந்தாலும் விஸ்தரிக்க நேரமில்லை. திரவியமென்றால் கவர்ன்மெண்டு கஜானாவிலிருக்கும் பணம் மட்டு மல்ல, ஒரு தேசத்தில் வசிக்கும் எல்லாப் பிரஜைகளும் ஈட்டும் செல்வம்தான் அந்தத் தேசத்தின் திரவியம். கஜானாவிலிருக்கும் பணம் மட்டும் யுத்த காரியங்களுக்குப் போதாததால் செலவுக்கு வேறு வழியிலும் பணம் சேர்க்க வேண்டும். இதற்கு மூன்று உபாயங்களுண்டு—(1) வரியை உயர்த்துதல்—இது இப்பொழுது வசிக்கும் ஜனங்களிடம் வசூலிப்பது. (2) கடன் வாங்குதல்—இது நமக்குப்பின் வசிக்கப்போகிறவர்களிடமிருந்து வசூலிக்கப்போவது. (3) நோட்டுகளை ஏராளமாக அச்சுப்போட்டு, சம்பள பட்டுவாடா செய்வது. இந்த மூன்றாவது

உபாயத்தால், உண்மையில், பணம் கிடைப்பதில்லை. ஆனால் பணமானது மலிந்து விலைவாசிகள் உயர்ந்து, வேலை நிறுத்தங்களேற்பட்டு, வியாபாரிகளும் கொள்ளை யடிப்பார்கள்.

இந்த மூன்று உபாயங்களில் முதல் வழியே ஒழுங்கானது. ஆகையால் பிரிடனில், இன்கம்டாக்ஸென்றும், ஸர்-டாக்ஸென்றும் எக்ஸஸ்-ப்ராபிட் டாக்ஸென்றும் வரிகளைப்போட்டு பணதிரவியத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஜனங்களின் மனப்பான்மையுமதற்கு ஒத்திருக்கிறது. ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் போன்ற சில போக்கிய சாமான்களுக்குமட்டும் அதிக வரிகள் போடுவதால் மட்டும் பணம் சேர்ந்துவிடாது. ஏழைகளுள்பட சர்வஜனங்களும் உதவி செய்யவேண்டும்.

இப்பொழுது பிரிடனுக்கேற்பட்டிருக்கும் பணத்தேவையைத்தீர்க்க சாம்ராஜ்ய நாடுகள் முன் வந்திருப்பதுபோல் இதுவரையில் ஏற்பட்டதில்லை இதுவே பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் அன்புக்கும், மதிப்புக்கும் அறிகுறியாகும். இந்தியாவும் வெகு கௌரவமாய் நடந்துகொண்டிருக்கிறது. அரசர்கள் விமானப் படைகளையே வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். மாணாக்கர்களும், கூலிக்காரர்களும் ஒரு அணு காசுதானிருந்தாலும் அதையும் கொடுத்திருக்கிறார்கள்.

பிரிடனுடைய யுத்தச் செலவு அபாரமாகிக்கொண்டு வருகிறது. டிஸம்பர் செலவு 3,750 லக்ஷம் பவுன். மாதத்துக்கு சராசரி 3,500 லக்ஷம் பவுன் வேண்டியிருக்கிறது. யுத்த தளவாடங்கள் செய்வதற்குப் போதாதென்று, சென்ற வருஷம் பிரிடிஷ் மக்களே தங்கள் கஜானா மந்திரியை வரியுயர்த்தச் சொன்னார்கள். இப்பொழுது யுத்தச் செலவுக்கு வேண்டிய பணத்தில் மூன்றிலொரு பங்கு வரிகளிலிருந்து ஈடு செய்யப்படுகிறது. ஸேவிங்ஸ்-ஸர்டிபிகேட்டாலும், டிபன்ஸ் பாண்டாலும், டிபாஸிட்டுகளாலும், ஏராளமான திரவியம் மேலும் சேர்க்கப் படுகிறது.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பிரிடனுக்குக் கடன் கொடுக்கச் செய்துவரும் ஏற்பாடுகள் பிரிடனுக்குப் பெரிய உபகாரமாகும். பிரிடனுக்கு நாணயமாவது, முதலாவது குறைவாயில்லை. ஆனால், அமெரிக்காவில் செய்யப்படும் சாமான்களை வாங்க அமெரிக்க நாணயமாகிய டாலர் வேண்டியபடி கையிருப்பிலில்லை மாற்றியாகவேண்டும். இந்த வியாபாரத்தை சல்லிசாகச் செய்யத்தான் அமெரிக்கர் மூல்யமாகவே சாமான்களைச் செய்யச் சொல்லி, சாமான்களைத் திருப்பிக்கொடுக்கவும், மாற்றிக்கொள்ளவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பணவிஷயத்தில் ஜெர்மனியின் நிலைமை மிகக்கேவலமானது. ஜெர்மனியின் பொதுக்கடன் பிரிடனுடைய கடனைவிடக் குறைவுதான். இருந்த போதிலும், 1914-ல் இருந்ததைவிட இப்பொழுது அதிகம். நோட்டுகளை அடித்து மோசம் செய்வார்களென்று ஜெர்மானியர் பயப்படுகிறார்கள். டாக்டர் ஷாட் விலைவாசிகளை நிர்த்தாரணம் செய்து விலைகளேறுதபடி தடுக்கச்செய்த

முயற்சிகளெல்லாம் பலிக்கவில்லை. ஜெர்மனியின் பணமாகிய மார்க்குக்கு இதர தேசங்களில் செலாவணியில்லை. ஜெர்மனி ரொக்கம் கொடுத்து வியாபாரம் செய்வது கிடையாது. பண்டம் மாற்றுதல்தான் செய்யும். இது எந்தச் சமயத்திலும் மோசம் செய்துவிடும். அபஜயச் சின்னங்களேற்பட்டவுடனே மார்க்கு காசுக்கு மதிப்புப்போய், திரவிய நஷ்டம் வந்துவிடும்.

ஆட்கள், சரக்கு, திரவியமென்று மூன்று விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாகப் பேசியதற்குக் காரணம் பொருளாதார யுத்தத்துக்கு இவைகள்தான் அடிபபடையானவை. இவைகளில்லாவிட்டால் போர்க்களத்தில யுத்தம் நின்றுவிடும்.

பொருளாதாரப் படையெடுப்பு.

பிரிடன் போட்டிருக்கும் கடல் முற்றுகையை முற்றுகையென்று சொல்லக் கூடாது. ஏற்றும் துறைமுகங்களிலேயே ஜெர்மனிக்குப் போகாதபடி சரக்குகளை பிரிடன் தடுத்துவிடுகிறது. இது தேச சட்டங்களுக்கு விரோதமலல.

பிரிடன் போட்டிருக்கும் முற்றுகை நீதியல்லவென்றும், தர்மமில்லை யென்றும் சொல்லுவதுண்டு. ஆனால், யுத்தத்தில் காருண்யத்துக்கிடமில்லை. முற்றுகை போடுவது அடைபட்டவர்கள் பட்டினி கிடக்கத்தான். சமாராதனை செய்ய முடியாது. சர்வதேச விதிகளின்படி வயிற்றிலடித்துப் பகைவரைச் சரணாகதி செய்யச்சொல்லுவது நியாய முறையாகும்.

ஆனால் பிரிடனுக்கு வேண்டாதவர்கள் இதையெடுத்துக்காட்டி, பிரிடனுக்கு இரக்கமில்லையென்பார்கள். ஸ்திரீகள் மேலும், சிசுக்கள் மேலும் பிரிடன் போரெடுத்திருக்கிறதென்பார்கள். அடுத்த வீட்டுச்சண்டையில் நாம் ஏன் தலையிட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லும் கக்ஷிக்காரர்களுக்குக் குறை கூற இது இடம் கொடுக்கும். வெடிகுண்டுகளைப்போட்டுப் பொது மக்களைக் கொல்லக் கூடாதென்றால் பட்டினி போட்டுமட்டும் கொல்லலாமாவென்பார்கள். ஹூவர் திட்டப்படி உணவுப் பொருள்கள் ஏன் வரக்கூடாதென்பார்கள்.

இந்தக்கக்ஷியெல்லாம் பரோபகாரத்தைக் குறிப்பதால், நாம் நிதானித்துப் பார்க்காவிட்டால் உண்மைபோல தோன்றக்கூடியதே. ஆனாலிதெல்லாம் குதர்க்கமென்று எளிதில் காட்டக்கூடும். இதற்கு கீழ்கண்ட விஷயங்களைக் கவனிப்போம்.

1. உணவுப் பொருள்களுக்கும், யுத்ததளவாடங்களுக்கும் வித்தியாஸமென்ன?
2. பொது மக்களுக்கும், சிப்பாய்களுக்கும் வித்தியாஸமென்ன?
3. பிரிடிஷ் முற்றுகையால் ஜெர்மனிக்கு உணவு கிடைக்காதா?

1. யுத்தம் சம்பந்தப்பட்டவரையில உணவுக்கும் யுத்த தளவாடங்களுக்கும் வித்தியாசம் கிடையாது. உதாரணமாக, உணவுக்கவசியமானது கொழுப்பு. இதிலிருந்து வெடிகள் செய்யபபடுகின்றன. மார்ஷல் கோரிங், 'வெண்ணெய்' அல்லது 'பீரங்கி' வேண்டுமாவென்று கேட்டார். அதன் தாத்பர்யம் உணவுக்கு

வேண்டிய வெண்ணெயிலிருந்து வெடிகள் செய்யக்கூடுமென்பதுதான். 1932-ம் வருஷம் முதற்கொண்டு, அதாவது, பிரிடிஷ் முற்றுகையேற்படுவதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னாலேயே, ஜெர்மனியில் கொழுப்புகளை அதிகமாக எடுத்தார்கள். ஆனால், ஜனங்களுக்கு மட்டும், சாப்பிட வெண்ணெய் கிடைக்காமல் போய்விட்டது. அதற்குக் காரணம் எடுக்கும் வெண்ணெயையெல்லாம் யுத்த யந்திரங்களுக்கு உபயோகப்படுத்தியதுதான். ஆகையால், எண்ணெய்-விதைகள், கொழுப்பு, பன்றியிறைச்சி, வெண்ணெய் முதலியவைகளை ஜெர்மனிக்கு அனுப்பித்தால் அதிலிருந்து வெடிமருந்துகளை அது செய்துகொள்ளும்.

கோதுமை முதலிய தானியங்களிலிருந்தும், உருளைக்கிழங்கு, சர்க்கரையில் இருந்தும் சாராய சத்து இறக்கி, அதைக்கொண்டு மோட்டார்களும், லாரிகளும் ஓட்டலாம். வெடிகளைக் கரைக்கவும் உபயோகிக்கப்படும். அஸிடோன், க்ளிஸரைன் என்ற வெடிமருந்து சரக்குகளும் செய்யலாம்.

மீன், பால், முட்டை, பழங்கள், காய்கறிகளிலிருந்து நைட்ரோ-க்ளிஸரைன், என்ற வெடிமருந்து செய்யப்படுகிறது. ஸண்டே டைம்ஸ் பத்திரிகைக்காரர் சொல்லுகிறபடி 'பாலினால் செய்த விமானத்தில் ஏறிக்கொண்டு, உருளைக்கிழங்கில் இருந்து இறக்கப்பட்ட எண்ணெயால் ஓட்டப்பட்டு, வெண்ணெயால் வெடிக்கும் குண்டுகளால் லண்டன் தாக்கப்படலாம்'.

ஆகையால், உணவிலிருந்து யுத்த தளவாடங்கள் செய்யலாம். தாக்ஷிண்யப்பட்டுக் கொண்டு உணவுகளை அனுப்பினால் அவைகள் நம்முடைய தலைக்குக் கொள்ளியாக முடியும்.

2. பொது மக்களுக்கும், சிப்பாய்களுக்கும் வித்தியாஸமென்ன?

இக்காலத்துச் சண்டையில் தேசத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் யுத்தத்தை நடத்துகிறவர்களாவோம். புதுக்கோட்டையில் பேசும் நானும், என்னைக் கேட்டுக்கொண்டிருக்கும் நீங்களும யுத்தம் செய்கிறவர்கள்தான் தொழிற்சாலைகளில் வெடிகுண்டுகளைச் செய்யும் பெண்களும், இரும்பைச் சுரங்கங்களிலிருந்து எடுப்பவர்களும், வஸ்திரத்தை நெய்து, விற்றுப் பணத்தை யுத்தத்திற்குக் கொடுக்கும் நெசவுக்காரர்களும், யுத்தப் பிரசாரகர்களும், யுத்த வேலை செய்யும் ஆண், பெண், அனைவரும் ஒருவாறு யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள்தான்.

இந்தக் காரணங்களால் பொது மக்களுக்கும், சிப்பாய்களுக்கும் வித்தியாஸம் கண்டு பிடிப்பது கஷ்டமாகும். பொது மக்களுக்கென்று அனுப்பும் உணவு சிப்பாய்களுக்குப் போய்ச் சேரும்; அல்லது பொது மக்களனுப்பியதற்குச் சரியான பங்கை, சிப்பாய்கள் பிடுங்கிக்கொள்ளலாம் இந்த வருஷத்தில் ஜெர்மனியில் உருளைக்கிழங்கு நன்றாய் விளைந்திருக்கிறது. 70,000,000 டன் சாகுபடி இருந்தும் ஜட்லாண்டில் விளைந்த உருளைக்கிழங்கையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நார்வேயிலிருந்தும் 300,000 டன்கள் போய்விட்டன. உணவுப் பொருள்களைத் தடுக்கக்கூடாதென்று சொல்லும் கக்ஷிக்காரர்கள் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

3. பிரிடிஷ்-முற்றுகையால் ஜெர்மனியில் உணவு குறைந்துவிடுமாவென்பது மூன்ருவது கேள்வி.

கோதுமை, வரகு முதலான உணவுப்பொருள்கள் சம்பந்தப்பட்டவரையில் ஜெர்மனி பிறர்கையைப் பார்க்கவேண்டாம். உள்நாட்டு விளைவு போதும், சற்றுக்குறைந்தாலும் அயல் தேசங்களாகிய ருமேனியா, ரஷியா, பல்கேரியா முதலிய இடங்களிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். உருளைக்கிழங்கு, சர்க்கரை, இறைச்சி முதலியவைகள் ஜெர்மனியிலேயே வேண்டிய அளவு கிடைக்கும். வெடிமருந்துகள் செய்ய எடுத்துக்கொள்ளாவிட்டால் எண்ணெயும், கொழுப்பு சாமான்களும், உணவுக்கு வேண்டிய அளவு ஜெர்மனியிலிருக்கின்றன.

அதாவது, ஜெர்மனிக்கிருக்கும் உணவு, ஒன்று, சாப்பிடப்போதுமானது, அல்லது, வெடிகள்செய்யப்போதுமானது. சாப்பிட்டுவிட்டால் வெடிகள் கிடையாது. வெடிகள் செய்துவிட்டால் உணவு கிடையாது. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையென்ருல் முடியாது. இதற்குப் பிரிடன் இடம்கொடாது.

இதிலிருந்து பிரிடன் போட்டிருக்கும் முற்றுகைக்கும், ஜெர்மானியர் பெண்களையும், குழந்தைகளையும் குண்டுகளைப்போட்டுக்கொலை செய்வதற்குமுள்ள வித்தியாஸம் வெளிப்படும். வேண்டுமானுல், ஹிட்லர், பீரங்கிகளையும், வெடிமருந்துகளையும் செய்யாது நிறுத்திக்கொண்டு உள் நாட்டிலேயே கிடைக்கும் உணவைக்கொண்டு தன்னுடைய ஜனங்களைப் பிழைக்கச்செய்யலாம். விமானத்திலிருந்து ஜெர்மானியர் பிரிடிஷ் மக்களின் மேல் குண்டுகளைப்போடுவதை பிரிடன் வேண்டாமென்ருல் நிற்காது. இந்த அக்கிரமத்துக்கு ஹிட்லர்தான் ஜவாப்தாரி.

அப்படியானுல், பிரிடன் போட்டிருக்கும் முற்றுகை பயனற்றதா?

அப்படியல்ல.

ஜெர்மனிக்குப் போதுமான உணவு ஜெர்மனியிலேயே கிடைக்குமென்று சொன்னேன். ஆனுல், அது நாஸிகளாலேயே அழியப்போகிறது. 1938-ம் வருஷம் முதற்கொண்டு ஐரோப்பாவில் யுத்தத்துக்குத் தயாரிப்பதைத் தவிர வேறு காரியம் கிடையாது. அங்கு விவசாயிகள்தான் யுத்தத்திலும் சண்டை செய்யவேண்டும். 1938-39-ல் இவர்கள் விதை விதைக்கும் காலத்திலும், அறுவடை காலத்திலும், நிலத்தைப் பாழாக்கிவிட்டு, சண்டைக்குத் தயாராகிருர்கள். இப்பொழுது ஜனங்களை அடிமையாக்கி கட்டாயப்படுத்தி வேலைசெய்யச் சொல்லுகிருர்கள். போலண்டில் விவசாயம் பாழாய்ப் போய்விட்டது. ஹாலண்டு, பெல்ஜியம், டென்மார்க், நார்வே தேசங்களில் ஆடு, மாடுகளை ஏராளமாய்க் கொன்று ஜெர்மன் பட்டாளங்களுக்குத் தீனி போடுகிருர்கள். இந்தப் படுகொலை பலநாள் தாங்காது.

மேலும், பிரிடிஷ் முற்றுகையால், எண்ணெய், வெண்ணெய், தாம்பிரம், நிக்கல், ரப்பர் முதலிய சரக்குகள் யுத்த தளவாடங்கள் செய்யக்கிடைக்காமல் போய்விட்டது. கரியிலிருந்து எடுக்கும் பெட்ரோல் யுத்தத்துக்குப் போதாது. எண்ணெய் சேர்த்துவைத்திருக்கும் நிலயங்களையெல்லாம் பிரிடிஷ் விமானங்கள் தகர்க்கின்றன.

மேலும், பிரிடிஷ் முற்றுகையிலிருந்து ஜெர்மனியின் கப்பல்கள் ஓடாது நின்றுவிட்டதோடு நடு நிலைமை வகிக்கும் தேசங்கள் வழியாகச் சாமான்கள் திருட்டுத்தனமாய்க் கொண்டுவரவும் முடியாதுபோயிற்று. சில சாமான்கள் சொந்த உபயோகத்துக்கே போதுமான அளவு இல்லாததாலும், விளையாததாலும் ரஷியா முதலிய அயல் நாடுகள் விற்கவும் முடியாது. ரஷியாவும்—ஜெர்மனியும் வியாபார உடன்படிக்கைகள் செய்துகொண்டு மொலடாவ் பகட்டாய் ஜெர்மனிக்கு வந்துபோனாலும் கிடைக்காத சாமான்களை விற்கமுடியாது. அவைகளை வாங்க ஜெர்மனிக்குப் பணமுமில்லை, தங்கம் கிடையாது; நாணயம் கிடையாது. ஜெர்மன் காசுக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடையாது. பண்டமாற்றுதான் செய்யலாம். சமீபத்தில் பிரிடன் செய்துகொண்டிருக்கும் வியாபார உடன்படிக்கைகளிலிருந்து ஜெர்மனிக்கு ஏற்கனவே எகிப்து, துருக்கி, கிரீஸ் தேசங்களிலிருந்த வியாபாரமும் போய்விட்டது. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் செய்துவந்த வியாபாரமும் தொலைந்தது. இந்திய வைஸிராயாயிருந்த வில்லிங்டன் பிரபு தென் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததிலிருந்து அந்தத் தேசங்களின் வியாபாரமும் ஜெர்மனிககில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

சேர்த்துவைத்த சரக்குகள்.

மார்ஷல் கோரிங் போட்டிருக்கும் 4-வருஷ திட்டப்படி ஜெர்மனியில், யுத்தத்தைமுன்னிட்டு சரக்குகள் ஏராளமாய்ச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. 1938-ம் வருஷத்திய மாசூலும் அதிகம்தான். ஆனால் இவைகளெல்லாம் எத்தனை நாட்களுக்குத்தான் தாங்கும்? மேலும், சாமான்களைச் சேர்த்துவைப்பதில் ஒரு அபாயமுமிருக்கிறது. விமானங்கள் வந்து அழித்துவிட்டால் ஜெர்மனிக்கு ஈடு செய்யமுடியாது. பிரிடனால் வேண்டிய இடங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளும்.

யுத்தமில்லாது ஆக்ரமித்தல்.

இந்த விபத்தை முன்னிட்டு, 'சுவாதீனத்துக்குட்பட்ட 'பொம்மை' அரசாங்கங்களை பால்கன் நாடுகளில் ஜெர்மனி ஸ்தாபித்திருக்கிறது. சைனியங்களைக்கொண்டு இவைகளைப் படையெடுத்தால் விவசாயம் கெட்டுவிடுமாதலால் தனக்கு பவ்யப்பட்ட அரசாங்கங்களை அங்கு அமைத்திருக்கிறது கோதுமை முதலிய சரக்குகள் வந்து கொண்டிருக்கும் வரையில் படையெடுக்காது. உதாரணமாக, ருமேனியாவைப் படையெடுப்பதால் ஜெர்மன் துருப்புகள் அங்குபோய்ச் சேருவதற்கு முன்னாலேயே எண்ணெய்க்கிணறுகளையெல்லாம் இடித்துக் கொளுத்திவிடுவார்கள்.

சாமான்களைத் தன்னிடத்திலேயே விற்பதற்காக ஜெர்மனி சாமான்களை உயர்ந்த விலைக்கு வாங்கச்சம்மதிக்கிறது. பணம்தான் கிடையாது. இந்தமாதிரியான பேட்டியில் பிரிடனும் அதிகப்பணம் கொடுத்து வாங்கவேண்டியதுதான். சென்ற யுத்தத்தில், ஜெர்மனிக்குக் கிடைக்காதபடிசெய்ய, ருமேனியாவில் விளைந்த கோதுமை முழுவதையும் பிரிடன் வாங்கி அழித்தது. பெருத்த நஷ்டம்-யுத்தகாலத்தில் நஷ்டத்தைப்பார்க்கக்கூடாது.

ஜெர்மனி 43-வருஷங்கள் சுபிக்ஷமாய் வாழ்ந்த சமயத்தில் சென்ற யுத்தம் ஏற்பட்டது. இந்த யுத்தம் 25பஞ்ச வருஷங்களையொட்டி வந்திருக்கிறது. 5 அல்லது 6-வருஷங்களாக பணமில்லாது நோட்டுகள் அடித்தார்கள், 8 வருஷங்களாக முதல் கிடையாது; இப்பொழுது 6வருஷங்களாக உணவுப் பொருள்களையெல்லாம் வெடிமருந்தாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சென்ற யுத்தத்தில் தாங்கிய அளவுகூட இந்த யுத்தத்தில் தாங்கமுடியாது. பஞ்சமேற்பட்டால் படுத்துவிடும்.

உணவுப்பஞ்சத்தோடு யுத்ததளவாடங்களுக்கும் குறைவேற்பட்டுவிடும். யுத்தத்துக்குவேண்டிய தாம்பிரத்தில் 4-ல் 3-பங்கு, இரும்பு 3-ல் 1-பங்கு எண்ணெய் 4-ல் 3-பங்கு, ரப்பர், பருத்தி, கம்பளி நூல், சோளம், எண்ணெய் விதைகள், வெண்ணெய் எல்லாம் நின்றுவிடும். மேலும் இவைகளைச்சேர்த்து வைத்திருக்குமிடங்களையும் தொழிற்சாலைகளையும் பிரிடிஷ் விமானங்கள் அழித்து வருகின்றன. இப்பொழுது தளவாடங்களை அதிகமாகச் செய்யப் போனால், கையிலிருக்கும் மூலாதாரச் சரக்குகளும் அழிந்துவிடும்.

ஆகவே ஜெர்மனி செய்யும் யுக்திகளொன்றும் பலிக்கப்போவதில்லை. பிரிடிஷ் முற்றுகையானது ஜெர்மனியை வளைத்து இறுக்கத்தான் போகிறது. இறுதியில் மரணம்தான்; தப்பமுடியாது.

வார யுத்தச் செய்திகள்.

(16—1—41 லிருந்து 22—1—41 வரை).

டொப்ரூக் பிடிபட்டுவிட்டது.

டொப்ரூக் பிடிபட்ட செய்தி இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. கைரோவிலிருக்கும் பிரிடிஷ் தளகர்த்தரிடமிருந்து வந்த செய்திப்படி புதன் கிழமை காலையில் அது எதிர்க்கப்பட்டது. ஸிட்னியிலிருந்து கிடைத்திருக்கும் செய்திப்படி அன்று மாலையே டொப்ரூக் பிடிபட்டுவிட்டது. ஆஸ்திரேலியர்கள் முன் அணியில் நின்று சண்டைசெய்து பிடித்தார்கள்.

கஸாலாவும் பிடிபட்டுவிட்டது.

இது இந்த வாரத்திய மற்றொரு வெற்றியாகும். கஸாலாவானது எரிட்ரியா, அபிசீனியா தேசங்களுக்குப் போகும் பாதைகளின் தலைப்பில் கட்டப்பட்டு இருக்கும் கோட்டை. இதை இதாலியர்கள் 15 மாதங்களுக்குமுன் பிடித்து வைத்துக்கொண்டிருந்தார்கள். நவம்பர் மாதம் முதற்கொண்டு, இந்தியப்படைகளும், பிரிடிஷ் படைகளும் ஓயாது தொந்தரவு செய்ததிலிருந்து இதாலியர்கள் அந்த இடத்தில் நிலைக்கமுடியவில்லை. நம்முடைய துருப்புகள் 7-ம் தேதியன்று கஸாலாவுக்குள் நுழைந்தன. சுமார் 5,000லிருந்து 8,000 வரையில் இதாலியத் துருப்புகள் 17-ம் தேதியன்று ஊரைக்காலிசெய்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். நம்முடைய துருப்புகள் விரட்டிக்கொண்டுபோகின்றன.

அபிசீனியாவில் பிரிடிஷ் கோஷ்டி (மிஷன்).

சென்ற ஜூலை மாதத்தில், சிற்சில பிரிடிஷ் பட்டாளத்தலைவர்கள் அபிசீனியாவுக்குள் ஒருவருக்கும் தெரியாது தைரியமாய்ப்பிரவேசித்து யுத்ததளவாடங்கள் சகிதமாக 400 மைல் உட்சென்று அங்கு அபிசீனியர்களைச் சேர்த்து, சைனியமொன்றை அமைத்து அதைப் பழக்கிவிட்டார்கள். அது இப்பொழுது யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறது. இதோடு மற்றொரு சைனியம், அதாவது, ஹெயிலி ஸலாஸியின் சைனியம் ஸூடானில் தயாராய்க்கொண்டிருக்கிறது.

குருவின் ஆசீர்வாதம்.

அபிசீனியாவில் கலகம் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டுவருகிறது. கார்டூமிலிருந்து கிடைத்திருக்கும் செய்திப்படி, ஹெயிலி ஸலாஸியே தலைமை வகிக்கப் போவதாகக் கேட்டதிலிருந்து இயக்கம் பலப்பட்டுக்கொண்டுவருகிறது. தென் அபிசீனியாவிலுள்ள காலாஸூக்களும் தானு ஏரிக் கரையில் வசிக்கும் படைத்தலைவர்களும், நீக்ரோ பிரஜைகளும் சேர்ந்து கஜ்ஜத்தில் பெரிய சைனியமொன்று தயாராகிறது.

அதற்கு, கைரோவிலிருக்கும் தனது குருவினுடைய ஆசீர்வாதத்தை அபிசீனிய சக்கிரவர்த்தி கோர, அவரும் அதைப் பூர்ணமாக அளித்து, 'என் சிஷ்யர் களனைவரும் பிரிட்டனுக்கு வெற்றிவரப் பிரார்த்தனை செய்கிறார்கள். நாம் கடவுளை நம்பியவர்; அதற்கடுத்தபடி பிரிட்டனை நம்பியவர்' என்று ஆசீர்வதித்தார்.

கிரேக்கர்களின் முன்னேற்றம்.

பனியும், மழையும் குறுக்கிட்டும் கிரேக்கர்களின் முன்னேற்றம் தடைபட வில்லை. அல்பேனியாவில் மத்தியபாகத்தில் ஏற்கனவே பிடிபட்ட ஸ்தலங்கள் 45. ஆஸ்ட்ராவிட்ஸா மலைத்தொடரில் ஸ்டோயம் என்ற இடம் பிடிபட்டுவிட்டது. வலோனாத் துறைமுகம் நொறுக்கப்பட்டு, கப்பல்கள் தங்கமுடியாது போய் விட்டது. 16,000 இதாலியர்கள் அல்பேனியாவில் மட்டும் பிடிபட்டு விட்டார்கள்.

மத்தியதரைக்கடல் நிகழ்ச்சி.

இந்தக்கடலின் மத்திய பாகத்தில் துணைக்கப்பல்களைப் பாதுகாத்துக் கொண் டிருந்த 'இல்லஸ்டிரியஸ்,' 'ஸவுதாம்டன்' என்ற இரண்டு பிரிடிஷ் யுத்தக் கப்பல்களைத் திடீரென்று, இதாலிய, ஜெர்மன் விமானங்கள் பல தாக்கின. சண்டையில், 'இல்லஸ்டிரியஸ்' பழுதுபட்டது. 'ஸவுதாம்டன்' அடிபட்டு தீப்பிடித்து, துறைமுகத்துக்கு இழுத்துக்கொண்டு சேர்க்கமுடியாததால் கடலி லேயெ அமிழ்த்தப்பட்டது.

ஆனால் வந்த காரியம் முடிந்துபோயிற்று. யுத்த தளவாடங்களையேற்றி வந்த பிரிடிஷ் கப்பல்களெல்லாம் பத்திரமாய், கிரீஸ் போய்ச்சேர்ந்தன.

18-மாதங்களாக யுத்தம் நடந்தும் இதுவரையில் விமான-எதிர்ப்பால் பெரிய கப்பலொன்றும் சேதமானதில்லை. இதுதான் முதல்தடவை. இந்த நஷ்டம் மனதைப் புண்படுத்தியபோதிலும் கவலைக்கிடமில்லை. பிரமாதமென்று சொல்லிக் கொண்ட ஜெர்மன் விமானப்படையின் திரமெல்லாம், 18-மாதங்களுக்குள் ஒரே ஒரு கப்பலைத்தான் நஷ்டப்படச் செய்யமுடிந்தது.

இந்தச் சம்பவத்திலிருந்து நன்மையும் பிறக்கும். ஸிஸிலி, பாண்டலேரியா தீவுகளுக்கு இடையில் கடலானது வெகு ஒடுக்கம். இங்கு பிரிடிஷ் கப்பல்கள் செல்லும்போது, அவைகளை எதிர்ப்பதற்காக ஸிஸிலியில் சில ஜெர்மன் விமானங்கள் ஒளிந்துகொண்டிருப்பதாக இப்பொழுது தெரிந்துவிட்டது. இந்த மறைவிலிருந்து மால்டாவையும் 6-தடவைகள் எதிர்த்திருக்கின்றன. அதற்கு வேண்டிய சிக்ஷையும் ஏற்கனவே ஒரு விதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. கடற் சண்டையில் ஜெர்மனிக்கு 12 விமானங்கள் நஷ்டம். ஸிஸிலியிலிருக்கும் கடேனியா என்ற விமான-நிலயத்தில் 30, 40 ஜெர்மன விமானங்கள் உடைக்கப் பட்டன. மால்டா எதிர்ப்பில் 35 விமானங்கள் நஷ்டம். ஆக, இந்த 8-தினங் களுக்குள் 84 விமானங்கள் நஷ்டமாயின. முடிவில் ஸிஸிலித்தீவில் இறங்கி ஒளிந்துகொண்டிருக்கும் விமானங்களை விரட்டும்படியுமிருக்கும்.

லிபியாவிலிருக்கும் இக்கட்டை நீக்கவும், கிரீஸுக்குச் சாமான்கள் போகாது தடுக்கவும் இப்பொழுது நாஸிகள் பிரயத்தனப்படுகிறார்போலும். இதற்காக மத்தியதரைக் கடலிலிருக்கும் பிரிடிஷ் கப்பற்படையை இரண்டு பாகங்களாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள். இது நடக்காது. ஏதோ முதல் தடவையானதால் திருட்டுத்தனமாய் வந்துவிட்டார்கள். இனி முடியாது.

இதாலியர்களின் சாயம் வெளுத்துப் போய்விட்டது. மத்தியதரைக்கடலில் ஏற்பட்ட சிறு லாபம்கூட இதாலிய விமானங்களின் சாமர்த்தியத்தாலில்லை. ஜெர்மானியர் பாயும்-விமானங்களைக்கொண்டு தைரியமாக எதிர்த்தார்கள். ஸிஸிலி யானது இப்பொழுது ஜெர்மன் வசமாய்விட்டதென்று சொல்லலாம். அங்கே, எங்கேபார்த்தாலும் ஜெர்மன் துருப்புகளும், இஞ்சினியர்களும், விமானங்களும் காணப்படுகின்றன.

இதாலியின் கதி.

இதாலிய சாம்ராஜ்யத்துக்கும், இதாலிய தாய் நாட்டுக்கும் போக்குவரத்து இப்பொழுது நின்றுவிட்டதென்று ரோம் ரேடியோவே ஒப்புக்கொள்ளுகிறது. அதற்குக கையில் ஐவேஜியுமில்லை, சைனிய பலமுமில்லை. ஜெர்மனி ஜயித்துத் தனக்குப்பங்கு கொடுக்குமென்று இதாலி சண்டையிலிறங்கிற்று. இப்பொழுது நிலக்கரியும், பெட்ரோலும் கிடைக்கவில்லை; நாஸிகள் ரோமாபுரிக்கு வந்து அட்டகாசம் செய்கிறார்கள். இதாலிக்கு சமத்துவம் போய்விட்டது. புது ஏற்பாட்டில் இதாலிக்கு அடிமை-அந்தஸ்துதான். இனியும் சண்டை செய்து கொண்டுபோனால் அதன் விலங்கு மேலும் பலப்பட்டுவிடும்.

யுனைடட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகராக மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் மறுபடியும் இதாலிக்கு வருகிறார். அவர் இதாலியின் தற்காலஸ்திதியை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்டு ஹிட்லரை விட்டு, இதாலியைப் பிரிக்கப்பார்க்கலாம். முஸோலினியை லக்ஷியம் செய்யாது, இதாலிய அரசர் இமானுவலுக்கு ரூஸ்வெல்டிடமிருந்து ஒரு கடிதம் கொண்டுவருகிறார்.

இதாலிக்கும், ஜெர்மனிக்கும் வியாபாரசம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இதற்காக டாக்டர் க்ளாடியஸ் என்ற வியாபாரஸ்தானிகர், 35 உதவி உத்தியோகஸ்தர்களோடு ரோமுக்கு வருவார். ஏற்றுமதி, இறக்குமதி பாகங்களை நிர்த்தாரணம் செய்யவும், நிலக்கரிக்குறைவைத்தீர்க்கவும், போக்குவரத்து சாதனங்களைப்பற்றியும் பேசுவார்கள். ஏற்கனவே இதாலிய ரயில்பாதை களெல்லாம் ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்தாய் விட்டது.

இந்த வாரத்தில், ஏதோ ஒரு நாள் ஏதோவொரு இடத்தில் ஹிட்லரும், முஸோலினியும், சியானோ, ரிப்பன்ட்ராப் முன்னிலையில் பேசிக்கொண்டிருந் தார்கள். இதாலியைக் கைதூக்கிவிடக் கெஞ்சியிருக்கவேண்டும்.

கடன்—ஒத்தி—மசோதா.

இந்த மசோதாசம்பந்தமாக அமெரிக்க சட்டசபைக் கமிட்டியொன்று பெரிய சாக்ஷிகளை விசாரித்துவருகிறது.

மிஸ்டர் கார்டல் ஹல் (ஸ்டேட்-காரியதரிசி) முதல் சாக்ஷி. இவர் ஜப்பானை அடியோடுகண்டித்து, 'புது அமைப்பு' என்பதெல்லாம் ஜப்பான் கீழ் நாடுகளை அபகரித்து, அவைகளின் செல்வத்தைப் பிடுங்கிக்கொண்டு, அவர்களையும் அடிமையாக்கத்தான். இதைப்பார்த்துக் கொண்டு மற்றவர்கள் சும்மாயிருக்க முடியாதென்றார்.

அமெரிக்காவைப்பற்றிப் பேசுகையில், 'பிரிடன் தோற்றால், பிரிடிஷ் கப்பற் படையில்லாவிட்டால் ஜெர்மனி அட்லாண்டிக்கைத் தாண்டி, தென்அமெரிக்காவைப் பிடித்துக்கொண்டு, வடஅமெரிக்கா மேலும் பாய்ந்து விடும். உலகத்தைப் பலத்தால் வென்று, நாகரிகத்தை அழிப்பதே மூவரசு ஒப்பந்தக்காரர்களின் நோக்கம்' என்றார். இவர்கள் வீட்டுக்குள் நுழைகிறவரையில் சும்மாயிருப்பது மோசமென்றார்.

கர்னல் பிரான்க் நாக்ஸ் (கப்பற்படை—காரியதரிசி) "பிரிடன் தோற்றால் அமெரிக்கா போய்விடும். இந்த 125-வருஷங்களாக, மன்றோ-சித்தாந்தப்படி அமெரிக்கா யுத்தத்திலிறங்காதிருந்தது பிரிடனுடைய பலத்தைக் கொண்டுதான். சென்ற யுத்தத்தில் அமெரிக்காவைச் சுற்றியிருக்கும் ஒரு சமுத்திரத்தைத்தான் பாதுகாக்க வேண்டியிருந்தது. இந்த யுத்தத்தில், பிரிடன் தோற்றால், இரு பக்கங்களிலுமுள்ள இரண்டு சமுத்திரங்களையும் காக்க யுத்தக் கப்பல்கள் வேண்டும். இவைகளைக் கட்ட ஆறு வருஷங்கள் பிடிக்கும். அதுவரையிலாவது பிரிடனுடைய சகாயம் வேண்டும். அதற்காகவே நாம் இப்பொழுது உதவ வேண்டும்" என்றார்.

மிஸ்டர் ஸ்டிம்ஸன் (யுத்தக்-காரியதரிசி) யுத்த-சாமான்களைத் தயாரிக்கவும், கொடுக்கவும் இந்த மசோதா பூர்ண அதிகாரத்தைக் கொடுப்பதாகச் சொன்னார்.

மிஸ்டர் வில்லியம் நூட்ஸன் (பாதுகாப்பு-டைரக்டர்) அமெரிக்க பாதுகாப்புக்காகவே இந்த மசோதாவை அங்கீகரிக்க வேண்டுமென்றும், தாமதிக்கக்கூடாதென்றும் எடுத்துக்காட்டினார்.

மிஸ்டர் மார்கன்தாவ் (கஜானா-காரியதரிசி) ஏற்கனவே வாங்கிய சாமான்களுக்குக்கொடுக்க வேண்டிய டாலர்களிப்பொழுது பிரிடனிடத்திலிருக்கிறது. இனிவேண்டியவைகளுக்குக் கொடுக்க டாலர்கள் ரொக்கமாய்க் கையிலில்லை. அமெரிக்காவில் பிரிடனுக்கு 4,420 லக்ஷம் பவுன் பெறுமான முதலிருக்கிறது. டாலர்களாக மாற்றியாகவேண்டுமென்றார். சட்டசபைக்கு வெளியிலும் மசோதாவை அபிமானித்துச் சிலர் பேசியிருக்கிறார்கள்.

மிஸ்டர் ஜோஸப்-கென்னடி தான் சமாதானக்கக்ஷியைச் சேர்ந்தவனல்லவென்றும், சர்வாதிகாரிகளோடு நேசம் செய்துகொள்ள இஷ்டமில்லையென்றும், முடிந்த உதவியெல்லாம் பிரிடனுக்குக் கொடுத்து, முடிந்தால் ஜெர்மனியோடு அமெரிக்கா சண்டைக்கும் போகவேண்டுமென்றும் சொன்னார்.

மிஸ்டர் வெண்டல் வில்கி, ரூஸ்வெல்டோடு போட்டி செய்தவர், தான் முழு மனதோடு மசோதாவை ஆதரிப்பதாயும், சும்மா அடங்கிக்கிடந்தால் அமெரிக்காவின் உன்னதப்பதவி போய்விடுமென்றும், வியாபாரத்தைப் பெருக்கி, சர்வாதிகாரிகளைத் தொலைக்கவேண்டுமென்றும் ஒலி பரப்பினர். லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸோடு டெலிபோனில் பேசுகையில் பிரிடனுக்கு முடிந்தவரையில் உதவி செய்யவேண்டுமென்றும், அதை அமெரிக்காவில் 100-க்கு 90 பேர்கள் ஆதரிப்பதாயும் சொன்னர். அவர் மனைவி, குறுக்கிட்டுக்கொண்டு நாங்கள் 100-க்கு 100 சாதகமாயிருக்கிறோமென்றாள்.

ரூஸ்வெல்ட்டின் பிரதம அறிக்கை.

ஜனவரி 20-ம் தேதியன்று பிரஸிடெண்ட் உத்தியோக நிர்வாகத்தை மறுபடியும் எடுத்துக்கொண்டபோது ஜனநாயக அரசியலை ஆணித்தரமாய் வர்ணித்தார். அதாவது :—

"மனிதர்களைப்போல் தேசங்களுக்கும் ஆயுஸ் என்பதுண்டு, மனிதனுடைய ஆயுள் சுமார் 70 வருஷங்களாகும்—இதைவிடச் சற்று நீடிக்கலாம், குறையலாம். ஆனால் தேசங்களுடைய ஆயுளை வருஷங்களைக்கொண்டு கணக்கிடக்கூடாது. ஜீவித்திருக்க சங்கற்பம் பலமாயிருக்கும்வரையில்தான் தேசங்களுக்கு ஆயுள் உண்டு.

ஜனநாயக ஆட்சியானது பலகாலம் தவம் கிடந்து கிடைத்த செல்வம். இது சமீபத்தில் கிடைத்ததல்ல. மானிட சரித்திரமே யிதிலடங்கிவிட்டது. புராதன தேசங்களில் இது ஊடுருவி நின்றது. மத்தியகாலங்களிலும் (கி. பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 15-ம் நூற்றுண்டுவரை) இதுபோய்விடவில்லை. மாக்ன-கார்டா பத்திரத்திலும் இது வரையப்பட்டிருக்கிறது.

இதுவரையில்லாத விபத்தொன்று இப்பொழுது முளைத்திருக்கிறது. இப்பொழுது நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்றி நிலை நிறுத்தவேண்டும்; இந்தக் காரியத்தில் பின்வாங்கமாட்டோம்—சும்மாயிருக்கமாட்டோம். கடவுளை நம்பி, இந்த மகத்தான தேச-சேவையில் அமெரிக்கர்களாகிய நாம் முன்னேறுவோம்".

மற்றும் சில அமெரிக்க விஷயங்கள்.

200 வியாபாரக்கப்பல்கள் செய்ய 3,130 லக்ஷம் டாலரும், 400 நீர்-மூழ்கி பிடிக்கும் கப்பல்களும், கடற்கண்ணி ஒதுக்கும் கப்பல்களும் டார்பிடோ கப்பல்களும் செய்ய 9,090 லக்ஷம் டாலர்களும் சாங்கிஷன் செய்யக் கேட்கப்படுகிறது.

பிரிடனுக்கு உதவி-மசோதாவை அமுலுக்குக்கொண்டுவர ஒரு மந்திரியையும், ஒரு ஸ்தானிகரையும், பிரிடனில் அமெரிக்கா நியமிக்கப்போகிறது. இவர்கள் கேவலம் ராஜப விவகாரங்கள் தெரிந்தவர்களாயில்லாமல், பாதுகாப்பு விஷயங்களைத்தெரிந்து கொண்டவர்களாயிருப்பார்கள்.

சமீபத்தில் இங்கிலாந்துக்குச் செல்லும் மிஸ்டர் வெண்டல் வில்கி மிஸ்டர் ரூஸ்வெல்டிடமிருந்து மிஸ்டர் சர்ச்சிலுக்கு ஒரு நிருபம் எடுத்துச்செல்வார்.

பிரிடிஷ்-வியாபார-தூது கோஷ்டி 6 தினங்களாகப் பாடுபட்டு, வெள்ளீயம், வுல்ப்ராம், ஆன்டிமனி என்ற சரக்குகள் பொலிவியாவிலிருந்து பிரிடனுக்கு அதிகமாக அனுப்ப ஒப்பந்தமொன்று முடித்திருக்கிறது.

ஜப்பான்.

ஜப்பான் சட்டசபை (டயட்) திறக்கும் சந்தர்ப்பத்தில் ஜப்பான் அன்னிய நாட்டு மந்திரி மிஸ்டர் மாட்ஸுஓகா, பிரிடனுக்குதவி செய்யும் மசோதாவைப் பற்றிப் பேசும்போது, அமெரிக்க சிநேகம் போய்விடுமென்று விசனப் படுவது போல் பாசாங்கு செய்து, பஸிபிக்குக்கும் உலகத்துக்கும் விபத்து வராதபடி காப்பாற்ற அமெரிக்காவை வேண்டிக்கொண்டார்.

பிரான்ஸ்.

லவால் அதிகாரத்துக்கு மறுபடியும் வர ஜெர்மனி பிரயத்தனப்படுகிறது. லவாலும் பிடேனும் சமீபத்தில் சந்தித்து தங்களுக்குள்ளிருந்த மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொண்டு விட்டார்களாம். பிடேன் மந்திரி சபையானது மறுபடியும் திருத்தியமைக்கப்பட்டு டைரக்டரேட் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதிகாரங்கள் அதன் கையில் ஒப்புவிக்கப்படலாம்.

பிரான்ஸினுடைய பிடிபட்ட பாகத்தில் அபரிமிதமாய் விளைந்திருக்கும் தான்யங்களையெல்லாம் ஜெர்மானியர் கொள்ளையடித்து ரெயில்களில் அள்ளிக் கொண்டு போகிறார்கள். பிரிடனிடத்தில் அபிமானம் பிரான்ஸில் பலப்பட்டு வருகிறது. அதை ஆதரித்து, மிஸ்டர் டப்கூப்பரும் பிரிடிஷ் மக்கள் பிரான்ஸின் இடத்தில் வைத்திருக்கும் நேயத்தைப் பின்வருமாறு ஒலிபரப்பி எடுத்துக்காட்டி இருக்கிறார் :—

"லண்டன், பாரிஸ் நகரங்களைக் காட்டிலும் பெரிய நகரங்கள் ஐரோப்பாவில் கிடையாது. தற்காலத்தில் ஐரோப்பிய நாகரிகத்தில் எதெது மிகச் சிறந்த பாகங்களோ அவைகளெல்லாம் இந்த இரண்டு நகரங்களிலேதான் உற்பத்தியாயின. இந்த இரண்டு நகரத்தில் வசிப்பவர்கள் தொன்றுதொட்டு பரஸ்பரம் நேயம் கொண்டவர்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை நினைத்து நினைத்து லண்டன் வாசிகளான நாங்கள் வருந்துகிறோம்.

லண்டன் மாநகரத்திலுள்ள உன்னதமான கட்டடங்கள் உடைபடுவதைப் பார்க்கும்போது கோபம்தான் வருகிறது. ஆனால், நிஷ்காரணமாய் இவ்விதம் ஜெர்மானியச் சண்டாளர்கள் செய்யும் அக்கிரமத்துக்கு நாங்கள் அஞ்சவில்லை நாங்கள் தீரமாயிருந்துகொண்டு, பெருமை கொண்டு சந்தோஷிக்கிறோம். நாங்கள் பிரெஞ்சு மக்களாயிருந்தால் பாரிஸுக்கேற்பட்டிருக்கும் கதிக்கு சும்மா இருக்கமாட்டோம்.

பாரிஸ் நகரத்தின் அழகு குன்றவேயில்லை. அதனுடைய கட்டடங்களும் சிதையவேயில்லை. ஆனால், ஐயோ! நகரமானது ஜெர்மன் துருப்புகளின் கையில் இருக்கிறது. ஐயோ, பாரிஸ் நகரத்தில் உல்லாஸமாய் உலாவ அநேக தோட்டங் களுண்டு. அங்கே நெபோலிய வீரனுடைய சிலையும் நிற்கிறது. ஆனால் அந்த

இடங்களிலெல்லாம் இப்போது ஜெர்மன் சிப்பாய்கள் வீருப்பாகப் பேசிக்கொண்டு போகிருர்களே? பாரிஸில் ஜெர்மன் பெண்கள் ஜெர்மன் பொய்க்காசைக் கொடுத்தா ஆபரணங்களை வாங்கி அணிந்துகொள்ளவேண்டும்!

பாரிஸ் மக்களைவிட லண்டன் மக்களுடைய கதி மேலானது. நாங்கள் காயப்பட்டாலும் ஸ்வதந்திரத்தை இழக்கவில்லை. இனி நாங்கள் பிழைத்து எங்கள் காயங்களை ஆற்றிக்கொள்ளுவோம். எங்களுடைய வடுக்களைப் பார்த்து நீங்கள் பொருமை கொள்ளவேண்டும்.''

பிடிபட்ட நாடுகள்.

பிரான்ஸைப்போலவே பெல்ஜியமும் கஷ்டப்படுகிறது. பழய காலத்துச் சிற்றரசர்களைப்போல் கிராமங்களைக் கொள்ளையடிக்கிருர்கள். கால் நடைகளையும் குதிரைகளையும் கொண்டுபோய்விடுகிருர்கள். விளையும் உருளைக்கிழங்கும், கிடைக்கும் வெண்ணெயும் கொள்ளையடிக்கப்படுகின்றன. ஜனங்கள் அபிப்பிராயத்தைக் கவனியாது சட்டங்கள் போட்டு, அமுல் நடக்கிறது. எங்கே பார்த்தாலும் ரகஸ்ய போலீஸ்.

போலண்டு.

போலண்டில் பஞ்சம். ஜெர்மானியர்களுக்குக் கொடுக்கும் உணவில் மூன்றில் இரண்டு பங்குதான் போல்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆறு மாதத்துக்குள்ளாக 15 லக்ஷம் போல்களின் உரிமைகளையெல்லாம் ஒழித்துவிட்டார்கள். ஆயுதங்கள் வைத்திருப்பவர்களைச் சுட்டு விடுகிருர்கள். ஜெர்மானியரிடத்தில் கோபமும், துரோகமும் அதிகப்பட்டு விட்டது.

பால்கன்ஸ்.

சமத்துவ கக்ஷிகளும், ஐரன்-கார்டு விபரீத கக்ஷியும் ஒன்று சேர்ந்து ருமேனிய அரசாங்கத்தைத் திடீரென்று கவிழ்க்கப்பார்த்தன. உள் நாட்டு மந்திரி ராஜீனமாச் செய்து விட்டார். கடைசியாக வந்த செய்திப்படி ஒரு சண்டையும் நடந்திருக்கிறது.

பல்கேரியா.

கர்னல் வில்லியம் டானவன் என்ற ரூஸ்வெல்டின் விசேஷ தூதர் அவருடைய நிருபம் ஒன்றை எடுத்துக்கொண்டு ஸெரபியாவுக்கு போரிஸ் அரசரைப்பார்க்க வந்திருக்கிருர்.

ரஷ்யா.

பஸிபிக் கடலிலிருந்து ரஷ்யா வழியாக ஜெர்மனிக்குச் சாமான்கள் வருவதைத் தடுக்க, பிரிடிஷ் பொருளாதார இலாகா கவனித்து வருகிறது. பலவிடங்களிலிருந்து ஒரு முழு வருஷத்துக்கு வாங்கும் பருத்தியைக்காட்டிலும், இரண்டு பங்கு பஸிபிக் மார்க்கத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக வருத்தியிருக்கிறது.

தூர-கிழக்குப் பிரதேசம்.

ஸயாம் குடாக்கடலில் தாய் நாட்டுக்கப்பல் பிரெஞ்சுக் கப்பல்களைத் துரத்திச் சேதப்படுத்தியதாக ஒரு செய்தி: இரண்டு தாய்கப்பல்களை முழுகடித்து, மற்றொன்றைப் பழுது படுத்தியதாக மற்றொரு செய்தி.

பாக்-லே என்ற இடத்தில் 1,000 தாய்லண்ட் சிப்பாய்கள் எதிர்த்ததாகவும், விரட்டப்பட்டதாகவும் வேறொரு செய்தி.

சைனுவிலுள்ள இசாங், டங்சாங் என்ற ஊர்களில் பலமான சண்டை.

பிரிடனும், எய்ரியும்.

யுத்தத்துக்குப்பின் ஜன சமூகத்தைத் திருப்பியமைக்கவும், மற்றபடி சமாதான காலத்தில் செய்யவேண்டிய காரியங்களை கவனிக்கவும் நியமிக்கப்பட்ட பிரிடிஷ் கமிட்டி ஆலோசனைகள் முடிந்துவிட்டன. சீக்கிரத்தில் அறிக்கையொன்றை வெளியிடுவார்கள்.

தொழிலாளிகளைக் கட்டாயப்படுத்தி வேலையிடுவதற்கு ஒரு மசோதா கொண்டுவரப்போவதாக மிஸ்டர் பெவின் காமன்ஸ் சபைக்குத் தெரிவித்தார். சர்வாதிகாரத்தை நாடாது நிர்வாகத்துக்குவேண்டிய அதிகாரத்தைமட்டும் கோரப்போவதாகச் சொன்னர். இதைப்பற்றி இரண்டு நாள் சர்ச்சை நடக்கும். அதன் விவரம் அடுத்தவாரத்தில் கொடுக்கப்படும்.

எய்ரியானது நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறதேயொழிய, அங்கு எரியும் தீப வொளியைக்கொண்டு ஜெர்மன் விமானங்கள் வருகின்றன. ஆனல் பிரிடிஷ் கப்பல்கள் நிற்கமட்டும் துறைமுகங்கள் கொடுபடவில்லை. வேணுமென்றல் பிரிடன் துறைமுகங்களைப் பிடித்துக்கொள்ளும்; சற்று தாக்ஷண்யம் பார்க்கிறது. அயர்லாந்தைச்சேர்ந்த 9-கப்பல்கள் அமிழ்க்கப்பட்டுவிட்டன. எய்ரியில் பெட்ரோலும், தேயிலையும் குறைந்துபோயின.

விமானப் போர்.

இதன் விபரங்கள் இத்துடன் சேர்த்திருக்கும் ஸ்டேட்மெண்டுகளில் பார்க்கலாம்.

தேதி.	பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
12—1—41. (ஞாயிற்றுக்கிழமை).			
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விமான நிலயங்கள்.—*பெர்கா* (Berka), *பெனிஞ* (Benina).	......	*தரையில் இருந்த பல விமானங்கள் நாசமாயின.*
	சைனியங்கள் வசிக்குமிடங்கள், தற்காப்பு ஸாதனங்கள்.—*டெர்ஞ* (Derna).	......	*தீக்கிரையாகின.*
	விமான நிலயங்கள்.—*அஸ்மாரா* (Asmara), *பராண்டு* (Barantu), *அகோர்தாத்* (Agordat).	*நஷ்டமில்லை.*	......
	இதாலி (Italy).		
	விமான நிலயம்.—*ஸிஸிலி* (Sicily)*யில் கடானியா* (Catania).	......	*பலத்த சேதம், 9 விமானங்கள். 30, 40 விமானங்கள் சேதமாயின.*
13—1—41. (திங்கட்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—*காவல் கார்த்து வந்தன*	1 *விமானம்.*	......
	இரவில்.—ராணுவதொழிற்சாலைகள், கப்பல் துறைகள், ஸப்மரைன் (Submarine) நிலயம்—*லோரியான்* (Lorient).	......	*தாக்கப்பட்டன.*
	டன்கர்க்.—(Dunkirk) *பிரதேசம்*	*நஷ்டமில்லை.*	*தீப்பிடித்தது.*
	அல்பேனியா (Albania).		
	ராணுவங்கள் குழுமி இருக்கும் இடங்கள்.—*பீராட்* (Berat).	......	*பலத்தசேதம்.*
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள்.—*டெஸ்ஸேனி* (Tessenei).	......	......
	துறைமுகம்.—*பென்காஸி* (Benghazi).	*நஷ்டமில்லை.*	......

தேதி.	பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
14—1—41. (செவ்வாய்க்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	விரோதி விமான நிலயங்கள்.—மான்டால் (Mandal), போரஸ் (Forus).	......	......
	ஒரு மோட்டார் கப்பல்.— ஸ்டவாங்கர் ரோட்ஸ் (Stavanger Roads).	......	......
	ஒரு ரயில்வே பாலம்.—நார்வே (Norway)	நஷ்டமில்லை.	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	துறைமுகம், ராஜாங்க கட்டடங்கள், கப்பல்கள்.—லிபியா (Libya)விலுள்ள பென்காஸி (Benghazi).	......	கட்டடங்கள் இடிந்தன, பலத்த சேதம்.
	விமான நிலயம்.—பெனினா (Benina) ...	......	2 விமானங்கள்.
	ராணுவ சாமான் கிடங்குகள்.—அஸ்ஸாப் (Assab).	1 விமானம்.	தீப்பிடித்தன.
15—1—41 (புதன்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ஜெர்மன் கடற்படையின் முக்கியமான வடகடல் நிலயம்.— வில்ஹெலம்ஷாவன் (Wilhelmshaven).	......	பெருந் தீ சூழ்ந்தது. வெடிச்சத்தங்கள் கிளம்பின. பலத்த சேதம்.
	கப்பல் நிற்கும் இடங்கள்.—எம்டன் (Emden), ப்ரமர்ஹாவன் (Bremerhaven), ராட்டர்டாம் (Rotterdam), ப்ளஷிங் (Flushing).	......	தீப்பிடித்தன.
	துறைமுகம்.—பிரான்ஸி (France)லுள்ள ப்ரஸ்ட் (Brest).	......	......
	விமான நிலயங்கள், இன்னும் மற்றும் முக்கியமுள்ள இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland).	......	சேதமாயின.
	இதாலி (Italy).		
	விமான நிலயம்.—ஸிஸிலி (Sicily)யில் உள்ள கடானியா (Catania)	......	தீப்பிடித்தது, பலத்த சேதம்.

தேதி.	பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
16—1—41 (வியாழக்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ஜேர்மன் (German) சடற்படை நிலயம்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven)	......	தகர்க்கப்பட்டது.
	கப்பல் நிற்குமிடங்கள்.—எம்டன் (Emden), புலாயின் (Boulogne), கலே (Calais).	......	......
	ரயில்வே ஜங்ஷன்.—நார்வே (Norway), யிலிருக்கும் ஆஸ்டெண்ட் (Ostend).	......	......
	விமான நிலயம்.—ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France).	......	சேதமாயிற்று.
	டோடிகனீஸ் (Dodecanese).		
	இதாலிய நிலயம்.—டோடிகனீஸ் (Dodecanese)ல்.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	சைனியங்கள் வசிக்குமிடம்.—டெர்னு (Derna).	......	......
	ராணுவ கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk.)	......	முக்கியமான துறை இடிந்துபோயிற்று.
	வேவு பார்த்தல்.—மேற்குப் பாலைவனம் (Western Desert)	நஷ்டமில்லை.	1 விமானம்.
	விமான நிலயம்.—ரோட்ஸி (Rhodes) யுள்ள மார்டீஸா (Martiza).	......	......
	காப்ரோனி (Caproni) தொழிற்சாலையின் மராமத்து இலாகா—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa)விலுள்ள மைமாக (Maimaga) பிரதேசம்.	......	குண்டுகள் குறி பிசகாமல் வீழ்ந்தன.
	அஸ்ஸாப் (Assab), பெர்பரா (Berbera), ஸீலா (Zeila).	1 விமானம்.	பலத்தசேதம்.

தேதி.	பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
17—1—41 (வெள்ளிக்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—ஜேர்மானியர் படையெடுக்க **உபயோகப்படும் துறைமுகங்கள்.**—	......	
	பிரெஞ்சு (French)க் கடற்கரை.	......	தகர்க்கப்பட்டன.
	4 கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை.	......	4 கப்பல்களின் மேலும் குண்டுகள் வீழ்ந்தன.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	பெட்ரோல் கிடங்குகள், பட்டணத்து தற்காப்பு ஸாதனங்கள்—டொப்ரூக் (Tobruk).	......	1 விமானம்.
	ஒரு பெரிய ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடம்.—அஸ்ஸாப் (Assab).	......	......
	ராணுவ கட்டடங்கள்.—ஹார்கீஸா (Hargeisa).	......	......
	விரோதி சைனியங்கள் தங்குமிடம்.—அம்ஹாக்கரு (Umhaggar)-க்கு 5-மைல் கிழக்கே அஸ்மாரா (Asmara).	......	......
18—1—41. (சனிக்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இன்று விமான நடவடிக்கை ஏதுமில்லை.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	வேவுபார்த்தல், காவல்கார்த்தல்.--லிபியா (Libya)-வில் முன் பிரதேசத்தில்.	......	இதாலிய விமானங்கள் எதிர்க்கவேயில்லை.
	மோட்டார் வண்டிகள், பீரங்கி வைக்கப் பட்டிருக்கும் இடங்கள்.—தென் கிழக்கு டெஸ்ஸெனி (Tessenei) மஸாவா (Massawa), அஸ்ஸாப் (Assab), ஹார்கீஸா (Hargeisa).	நஷ்டமில்லை.	பலத்த சேதம்.

தேதி.	பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
19—1—41 (ஞாயிற்றுக்கிழமை).			
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	சாமான் கிடங்கு.—அஸ்ஸாப் (Assab).	......	தீப்பிடித்தது.
	வண்டிகள்.—நெகெல்லி (Neghelli).	......	தீப்பிடித்தன.
	இதாலி (Italy).		
	பிரிண்டிஸி (Brindisi).	......	......

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
10—1—41. (வெள்ளிக்கிழமை).			
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	பிரிடிஷ் (British) துணைகாவல் கப்பல்கள்—ஸிஸிலிக் கால்வாய் (Sicilian Channel).	ஒரு இதாலிய நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது. 10 விமானங்கள்.	“ஸவுதாம்டன்” கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. “இல்லஸ்ட்ரியஸ்” கப்பலுக்குச் சொற்பச் சேதம்.
14—1—41 (செவ்வாய்க்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இன்று முழுவதும் விமானப் படை எடுப்பே இல்லை.	......	......
15—1—41. (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் மிட்லாண்ட்ஸி (Midlands)-ல் சில பாகங்கள். கிழக்கு இங்கிலாந்து (England).	......	சில இடங்களில் தீப் பிடித்து உடனே அணைக்கப்பட்டு விட்டது. சிலருக்குக் காயம். சொற்பச் சேதம்.
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta)—(ஒரே நாளில் ஆறு தரம் படையெடுப்பு இருந்தது).	......	பொது ஜனங்களின் சொத்துகளுக்குச் சேதம்.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
16—1—41. (வியாழக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் மேற்கு இங்கிலாந்தி (England)-ல் ஒரு பட்டணம், மேற்குப்பிரதேசத்தி (West Country)-ல் ஒரு பட்டணம்.	......	தீப்பிடித்த இடங்களில் தீயை உடனே அணைத்து விட்டார்கள். சிலருக்குக் காயம்.
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta).	10 விமானங்கள்.	சொற்பச் சேதம்.
17—1—41. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	இரவில்.—ஸ்வான்ஸீ (Swansea); தெற்கு வேல்ஸி (Wales)-ல் சில இடங்கள். இங்கிலாந்தி (England)-ல் 2 பட்டணங்கள் [டிவான் (Devon) உள்பட].	......	வீடுகளும், கட்டடங்களும் சேதமாயின. சில இடங்களில் தீப்பிடித்தது. சிலருக்குக் காயம்.
	லண்டன் (London).	......	விமான அபாய அறிவிப்புதான் இருந்தது.
	பாலஸ்தீனம் (Palestine).		
	விமான நிலயம்.—டெல்அவீவ் (Tel Aviv)	......	சேதமுமில்லை ; ஒருவருக்கும் காயமுமில்லை.
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	கைரோ—(Cairo) அலக்ஸான்டிரியா (Alexandria).	......	இரண்டுதரம் அபாய எச்சரிக்கைதான் இருந்தது.
	ஸூயஸ்கால்வாய் (Suez canal) பிரதேசம்	......	சேதமில்லை.
18—1—41 (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டனி (London)ன் சுற்றுப்புறங்கள்; கிழக்கு ஆங்கிலியா (Anglia) வில் ஜனங்களை ஏற்றிச்செல்லும் ஒரு ரயில் வண்டி.	......	சேதமுமில்லை, காயம் ஒருவருக்குமில்லை. சில பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
18—1—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	கிழக்கு கெண்டி (Kent)ல் சில இடங்கள்	......	மற்றபடி எங்கும் சேதமில்லை.
	இரவில்.—விமான நடமாட்டம் இல்லை.	......	......

மத்தியதரைக்கடல் (Mediterranean).

	விமான நிலயம்.—மால்டா (Malta).	5 விமானங்கள்	சிலருக்குக் காயம் ஒருவரும் சாகவில்லை.

19—1—41. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

	பகலில்.—இங்கிலீஷ் கால்வாய் (English channel) ஒரு கிழக்குக் கடற்கரைப் பட்டணம்.	1 விமானம்	சிலருக்குக் காயம். சேதமேயில்லை.
	இரவில்.—ஸவுதாம்டன் (Southampton), மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம், மேற்கு மிட்லாண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம், கிழக்கு ஆங்கிலியாவி (Anglia)ல் ஒரு பட்டணம்.	5 விமானங்கள்	தீப்பிடித்த இடங்களிளெல்லாம் உடனே அணைத்துவிட்டார்கள். சொற்ப சேதம்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

	துறைமுகம்.—மால்டா (Malta).	15 விமானங்கள்	முக்கியமான சேதமிலலை.

20—1—41. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

	இரவில்.—தெற்கு, தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல் பல இடங்கள் லண்டன் (London) பிரதேசம்.	......	சேதம் அதிகமில்லை. சிலருக்குத்தான் காயம்.

கிரீஸ் (Greece)

	விமானச்சண்டை.—ஆதன்ஸி (Athens)ன துறைமுகமான பிரேயஸ் (Piraeus).	1 விமானம்.	1 விமானம். சில வீடுகள் சேதமாயின.

யுத்தக் குறிப்புகள்.

கவனித்துச் செய்யுங்கள்.

போர் சம்பந்தமாக நீங்கள் படிப்பதிலிருந்து செய்யும் அனுமானங்களைக் கவனித்துச் செய்யுங்கள். தளகர்த்தர் வேவல் (General Wavell) புரியும் பெரிய போரைப் போலவும் தலைவர் ரூஸ்வெல்ட் (President Roosevelt) செய்த பெரிய பிரசங்கத்தைப் போலவும் பெரிய விஷயங்கள் நடைபெறும்போதெல்லாம், அச்சுதேசத்தார் திணரிப்போய் சுருண்டு விழுகிறார்கள். மல்யுத்தம் செய்கிறவனுக்கு "கர்தன் அடி" விழுந்தால் எப்படியோ அப்படியாகிறது. துணைவர்கள் விசிறியெடுத்து வீசுகிறார்கள்; அச்சமயம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுகிறான். அப்படி வீசுவதால் ஏற்படும் காற்றால் ஏமாறாதீர்கள்; "நடு நிலைமையுள்ள சமாசார நிலையங்கள்" விடுவிக்கும் செய்திகள் மேலே சொன்ன காற்றைப்போல ஏமாற்றும் தன்மையுள்ளவை.

இம்மாதிரி செய்திகளில் நம்பிக்கையில்லாமல் பரிசோதித்துப் பார்க்கும் உத்தியோகஸ்தர்கள், நார்வே படையெடுப்பு காலம் முதல் கிரீஸ் படையெடுப்பு வரை வந்திருக்கும் செய்திகளை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். இந்த மகாயுத்தத்தில் ஒவ்வொரு கடுமையான நிலைமையிலும் கொஞ்சம் அசர்ந்து நிற்கும் சமயங்களிலும் ஏமாற்றலான செய்திகளை வெவ்வேறு வேஷங்களைப் போட்டு வெளியிட்டிருக்கிறதை கவனிக்க ரஸமாகவிருக்கும். ஜெர்மனி அல்லது இதாலியானது ஒரு புது கொள்ளையைப்பற்றி யோசிக்கிறதாயிருந்தால், அதைப்பற்றி அறிவிக்கும் வழியானது, அவர்கள் ஏமாற்ற பிரசாரத்திற்கு ஒரு நல்ல உதாரணமாகும். கொள்ளைக்கு ஆளாகப்போகிற நாட்டிலுள்ள "ஐந்தாம்படை" பேர்வழிகள், அங்குள்ள எதிர் கட்சியாருக்கு ஜாடை ஜாடையாகச் சொல்ல ஆரம்பிக்கிறார்கள்; பிரிடன் அந்த நாட்டை படையெடுக்க உத்தேசிப்பதாகவும், அல்லது போக்கு வரத்து இல்லாமல் தடுக்க எத்தனிப்பதாகவும், அல்லது அந்நிய துறைமுகங்களிலிருக்கும அவர்கள் கப்பல்களை உடைகக எத்தனிப்பதாகவும் அல்லது இவைகளைப்போன்ற ஏதாவது கயிற்றை விடுவார்கள். பத்திரிகைகள் இவைகளைப்பற்றி சர்ச்சை செய்யவேண்டுமென்று தூண்டப்படுகின்றன; அடுத்து வெகு விரைவில் இம்மாதிரியான "அடாத காரியங்கள்" நடக்காமலிருப்பதற்காகவென்று சொல்லிக்கொண்டு அச்சுதேசத்தார் "பொது சாவதானத்தை முன்னிட்டு கவர்ன்மெண்டை வகித்துக்கொண்டார்கள்" என்றும், "நேச தேசத்தாரின் சூழ்ச்சிகளின் பயனாக அழிபட்டுப்போகும் நிலைமையிலிருந்த சின்னகட்சியார் தாய நாட்டிற்குத் திரும்பிவருவதை முன்னிட்டு உசிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றும், அல்லது "தலை நகரைவிட்டு ஓடும் அரசன் பேரில் குண்டுகள் போட்டார்கள்" என்றும், சமயத்திற்குத் தகுந்தபடி உலகத்திற்கு அறிவிக்கப்படுகிறது.

இவை போன்ற "நம்பிக்கைக்கு ஏற்ற நடுநிலைமையாரின் அபிப்பிராயங்கள்" நமக்கு ரொம்ப அனுபோகமாகிவிட்டது. இவ்வளவு தடபுடலில்லாத பேச்சுகளும் உண்டு;. அவைகளையும் நாம் ஜாக்கிறதையாகக் கவனிக்கவேண்டும். அவைகளும் "தூண்டப்பட்ட" கைச்சரக்குகள்; யுத்த சமாச்சாரத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் நாடோடி மனிதர்கள் இத்தகையை சமாசாரங்களை உற்சாகத்துடன் கேட்டு பரிசீலனை செய்வது பிசகென்று கண்டிக்கமுடியாது.

பிரசார தந்திரங்கள்.

இவைகளில் இரண்டொன்றை கவனிப்போம். இதாலி-கிரேக்க யுத்தம் துவக்கும் சமயம் அச்சுதேசத்தார் கையாடின முறை அடியிற் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

(*a*) பிரிடிஷ் துருப்புகள் கிரீஸில் வந்து இறங்கிவிட்டதாகப் பொய்யாகவோ, அல்லது ஒன்றைப் பத்து மடங்காகவோ செய்தி பறப்புவது. இதன் நோக்கம்: பின்னால் அப்படியில்லையென்று மறுப்பு அனுப்பினால் கிரேக்கர்கள் மனம் தளரும் என்ற நோக்கம்.

(*b*) கிரேக்கர்கள் சரணமடைந்து விடப்போவதாக கைச்சரக்கு ஏராளமாக சேர்த்து கதைகள் கிளப்புவது. இதன் நோக்கம்: கிரேக்கர் கட்டுப்பாடு குறைய வேண்டும் என்ற நோக்கம்.

(*c*) பிரிடன் கிரீஸை அடுத்துள்ள கடலில் வியாபிக்கலாமென்று உடன்படிக்கை முன்னமேயே ஏற்பட்டிருப்பதாக "தஸ்தவேஜு ருஜு" பிரசுரிப்பது. இதன் நோக்கம்: இதாலி கிரீஸின் பேரில் படையெடுத்தால் சுயபாதுகாப்புக்கென்ற சொல்லிக் கொள்ளலாம் என்ற நோக்கம்.

இந்த மாதிரி சமாசாரங்கள் "கெயிரோவில் தகுந்த இடஙகளிலிருந்து" வந்ததாகவும், அல்லது "பெல்கிரேடிலிருந்து ஸலோனிகா வழியாக", அல்லது "பெல்கிரேடிலுள்ள கிரேக்க வட்டைகளிலிருந்து" வந்ததாகவும் சொல்லி "நடுநிலையங்களிற்கு" அனுப்பப்பட்டன; உண்மையில் இந்த சமாசாரங்களெல்லாம் கோயபெல்ஸ் தயாரிப்பு!

ஸ்விட்ஸர்லாண்டிலும், இந்தமாதிரி புரளிப்பேச்சு பிரசுரம் செய்யும் சில பத்திரிகைகள் இருந்தன. அவை ஆதாரங்களைச் சொல்லாமல், கூடமாக "அங்கரா—அக்டோபர் 7", "ஆதென்ஸ்—நவம்பர் 4", என்று பதிப்பித்து வந்தார்கள்.

இச்சமயம் இதே வேலை செய்கிறார்கள். வெளியில் பரவுவதற்காக, பொய் தேதிகள் கண்டு, "நல்ல ஆதாரத்தின் பேரில் பிரசாரம்" என்று பெயர் வைத்து ஜெர்மானிய கைச்சரக்கு பூதி தபால் நடுநிலைமை நாடுகளின் தலைநகர்களுக்கு அனுப்பப்படுகின்றன. உங்களுக்குக்கிடைக்கும் சமாசாரங்களின் தேதிகளையும், முக்கியமாக உற்பத்தி ஸ்தானஙகளையும் கவனியுங்கள். அயல் நாட்டு சமாசார நிலையங்களிலிருந்து வரும் செய்திகளையும், முக்கியமாக அச்சு தேசத்தாரின் மூலாஜாவிற்குட்பட்ட வட்டாரங்களிலிருந்துவரும் செய்திகளையும் ரொம்ப கவனித்து ஆராய்ச்சி செய்யவேணும்.

அந்தப் பழம் புளிக்கும்.

ஹிட்லரும் பிரெஞ்சு கப்பற்படையும். தளகர்த்தர் பிடேனை ஹிட்லர் செய்யும் நெருக்கடியின் முதல் பலனைப்பற்றி இன்றுகாலை ரேடியோ செய்திகளில் கேட்டோம். அதென்ன வென்றால், பிடேனுக்கும் லவாலுக்கும் ராஜி ஏற்பட்டு, அந்த பிராக்ஞரான லவால் ப்ரான்ஸுக்கு உபதலைவரானது. இது அச்சடிக்கப் படுமுன் இதன் பயனாக வேறு அரசியல் காரியங்கள் ஏற்படலாம்.

நாம் சென்ற வார "பக்க ஒளிகளில்" தற்சமயம் பிரெஞ்சு கப்பற்படையிலிருக்கிறது சூழ்ச்சுமம் என்று சொன்னோம்; அந்தக்காரணத்தால் மீதமிருக்கும் பிரெஞ்சு கப்பற்படை என்ன ஆயிற்று என்று தெரிந்துகொள்ள வெகு ஆவலுடனிருக்கிறோம்.

இந்த மலை விழுங்கி மாகாதேவனான ஹிட்லர், தாங்கா பசியுடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பழக்கொத்தில் சிலவற்றின் உண்மை உருவத்தைபற்றி அறிந்துகொள்ள முயன்றிருக்கிறோம். சமீபத்தில் நமக்குகிடைத்த சில செய்திகள் இங்கே குறிப்பிடுகிறோம்; முழுவதும் கைக்கு வரவில்லை; ஆயினும் வந்தவரை ரஸமாகவிருக்கிறது.

'ஸ்டிராஸ்போர்க்' என்ற யுத்தக்கப்பல் டூலானில் இருக்கிறது; அத்துடன் சிறிய யுத்தக்கப்பல்களான "காலிஸ்ஸியாநோர்" "ஜீன்டெயிபேன்," "மார்-செய்யேஸ்" என்ற கப்பல்களும் இருக்கின்றன.

"ரிஷலியு" என்ற பெரிய யுத்தக்கப்பலும், தளகர்த்தர் டிகால் (De Gaulle) எண்ணம் நிறைவேறாமல் செய்த சிறிய யுத்தக்கப்பல்களும் நாசகாரிகளும் டாகாரில் (Dakar) இருக்கின்றன.

ஓரானில் "டங்கர்க்" என்ற பெரிய யுத்தக்கப்பலை நாம் உடைத்தோம்; அது நாளாய்விட்டது, அதைச்சீர் செய்ய உடன்காலத்திலேயே ஆரம்பித்தார்களாம்.

அலெக்ஸாண்டிரியாவைப்பற்றி நமக்கு தகவலில்லை; ஆனால் அங்கேயும் பலகப்பல்களில் பிரெஞ்சுக்கொடி பறந்து கொண்டுதானிருக்கும்.

சரி, நரியானது முன்னே நீண்டிருக்கும் மலைச்சாரலில் காலைவைத்துக் கொண்டு, பார்க்க ரம்மியமாகவிருக்கும் பழத்தை நோக்கி கழுத்தை நீட்டிக் கொண்டிருக்கிறது. நாம் உட்கார்ந்து கவனிப்போம்; அந்தப்பழம் புளிக்கிறதா என்னவென்று பார்ப்போம்.

கணக்குகளிலிருந்து நடப்பு.

விருத்தியாம்சத்திற்குப் பணமில்லாதவனானபடியால் 'ஷேர் மார்க்கெட்' "கவர்ன்மெண்ட் பாண்டுகள்" 'கவர்ன்மெண்ட் லோன்கள்' முதலியவைகளைப் பற்றிய விவரங்களில் எனக்கு அக்கரை கிடையாது. ஆயினும் சமீபத்தில் பிரிடனின் பெரும்பணம் சம்பந்தமான செய்திகளிலிருந்து சில அனுமானங்கள்

உண்டாகின்றன; அவைகளில், இந்த யுத்தம் எவ்விதமாக முடியும் என்பதைப் பற்றியாவது, அவர்கள் சேமித்து வைத்திருப்பதை எவ்வளவு லாபகரமாக கவர்ன்மெண்டார் உபயோகப்படுத்துவார்கள் என்பதிலாவது, "சிறிய மனிதர்களுக்குக்" கொஞ்சமேனும் சந்தேகமில்லையென்பது ஒரு திருப்திகரமான அனுமானம்.

100-க்கு $2\frac{1}{2}$ என்ற வெகு குறைந்த வட்டிகொடுப்பதாகச் சொல்லி யுத்தக் கடன் (War Bonds) ஏற்பாடு சமீபத்தில் நடந்தது; இது முந்திய வீதத்தைக் காட்டிலும் குறைந்ததும், நமது பணத்தைக்கொண்டே யுத்தச் சிலவுசெய்ய வேணுமென்றும், 100-க்கு 3-க்குமேல் வட்டிகொடுத்து கடன் வாங்குவதில்லை என்ற கவர்ன்மெண்ட் தீர்மானத்தை அனுசரித்தும் இருந்தது. இதில் "சிறிய மனிதர்கள்" உற்சாகமாக கலந்து கொண்டார்கள்; அதுவும் சமீபத்தில் முடிந்த வருஷத்தில் நல்ல சேமிப்பு இருந்து அதன்பேரில் கலந்துகொண்டார்கள். மொத்தத்தொகை 1,269,000,000 பவுன் இதுவும் பிரிடனின் மொத்த வரும்படிக்குச் சமானமான தொகை; எதிர்பார்த்ததிற்கு ரொம்ப ஜாஸ்தியான தொகையுங்கூட.

இவ்வளவு பெருங்கடன் கொடுத்ததிலிருந்து செய்யக்கூடிய அனுமானங்களாவன:—

(*a*) கடனும் நீடித்த காலத்திற்காதலால், கவர்ன்மெண்டார் யுத்தம் முடிந்தபின் சீர்திருத்தச்சிலவு செய்வதை எதிர்பார்க்கிறார்கள்.

(*b*) சென்ற வருஷத்தின் மிச்சமெல்லாம் சிறிய மனிதர்களின் "ஸேவிங்ஸ் சர்டிபிகேட்கள்", "டிபென்ஸ் பாண்டுகள்" புது போஸ்ட் ஆபீஸ் டிபாசிட்டுகள், முதலியவைகளாதலாலும், ஜாஸ்தியாகவே மேலேகண்ட கடன்பாண்டுகள் அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பதாலும், கவர்ன்மெண்ட் இடத்திலும் தனது தேசத்தின் எதிர்கால க்ஷேமத்தாலும், அவர்களுக்குள்ள நம்பிக்கை வெளியாகிறது.

(*c*) கவர்ன்மெண்டில் தங்களுக்கு இவ்வளவு அக்கரையிருப்பதால், இனிமேல் தேச நடவடிக்கைகளில் சிறிய மனிதர்களுக்கு ஜாஸ்தி பங்கும் செல்வாக்கும் இருக்கும்.

(*d*) ஏழைகள் கலந்துகொள்ளவேண்டிய இவ்வளவு குறைந்த வட்டிவீதம் ஏற்படுத்துவதென்றால். பணப்பொருமதியை ஊதி கிளப்பியிருக்கிறார்கள் என்ற அபவாதத்திற்கு இடமில்லை. முதலில் கொஞ்சம் சாமான்கள் விலையேறி, யுத்தம் துவக்கி ஒரு மாதத்திற்குள் குறைந்தது என்பதே இதற்கு இன்னுமொரு அத்தாட்சி.

ரொக்கம் கேட்காமலும், ஜாஸ்திவட்டிக்கு 'லோன்கள்' ஏற்படுத்தாமலும், வாடகைக்குக் கப்பல்களும் யுத்த தளவாடங்களும் பிரிடனுக்குக் கொடுப்பதற்காக தலைவர் ரூஸ்வெல்ட் (President Roosevelt)-டின் மகத்தான ஏற்பாடானது, ஹிட்லருடன் போர் புரிவதால் ஏற்படும் பணச்சிலவு கணக்கிடமுடியாது என்றபோதிலும், பணப்பொருமதி ஊதல் எடுத்துப்போகாமல் இருக்கும்.

அக்காலத்தில் சூரர்கள் இருந்தார்கள்.

என்ற வேதவாக்கியத்தை ஒத்து "இக்காலத்திலும் இருக்கிறார்கள்" என்று சொல்லலாம். ஆங்கில பாஷை பேசப்படும் இரண்டு நாடுகளிலும் தேழ்வைக் கேற்ற மனிதரைக் காணகிறோம். பிரிடிஷாரில் எப்படி வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) தலைதூக்கி நிற்கிறாரோ, அதுபோலவே அமெரிக்கர்களுக்குள் ப்ரான்க்ளின் ரூஸ்வெல்ட் (Franklin Roosevelt) சோபிக்கிறார்.

நாளுக்கு நாள் அவர் தேஜஸ் ஜாஸ்தியாகிறது: அவர் பெரிய மனிதர் என்பது மட்டுமல்ல; அவர் அரசியல் நிபுணர்; இது இரண்டும் ஒரு மனிதனிடத்தில் ஒருங்கே காணுவது துர்லபம். கேளுங்கள்! ஒழுங்கானதும் வெகு பலமுள்ளது மான எதிர்க்கட்சியிருந்தும், ஜெர்மன் வேரிலிருந்து உண்டாகியும் ஜெர்மன் அனுதாபமுள்ளவர்களுமான லக்ஷக்கணக்கான 'வோட்டர்கள்' இருந்தும் இரண்டு கண்டமளாவிய பெரும் ஐந்தாம்படை விடாது வேலைசெய்துவந்தும், இவர் தைரியமாய் முன்னின்று சொன்னார், "பிரிடன் தோல்வியடைந்தால், உலகத்திற்கே துர்தசை ஏற்பட்டு அமெரிக்கா உள்பட உலகம் முழுதுமே மிருக பலப் பிரயோக பயத்தால ஆட்டிவைக்கப்படும். அவ்விதமான உலகத்தில் நாம் தப்பிப்பிழைக்கவேணுமானல் நாம் யுத்த முறையிலே பொருளாதார நிலையை நாட்டி யுத்தத்திற்கு ஆயத்தமாகவிருக்கும் நாட்டாராக நாம் மாறிவிடும்படி நேரிடும்". அதே பிரசங்கத்தில் நாம் எல்லோரும் ஆனந்தப்படும் விதமாக, அச்சு தேசத்தாரின் அரசியல் முறையைப்பற்றி ஒளிவுமறைவின்றி கடுமையாக பேசியதுடன், அவர்கள் பயம் காட்டியதையும், அமெரிக்காவிலேயே நடந்த சமாதானப் பேச்சையும் உதறித்தள்ளினார். அந்தப்பிரசங்கத்தை, நியாயத்திற்கும் ஒழுங்கிற்கும் போர்புரியும் நம்மால் பெருமையுடனும், அச்சுதேசத்தாராலும் அவர்கள் பரிவாரங்களாலும் ஆத்திரத்துடனும் மறைபடாத பயத்துடனும் கேழ்க்கப்பட்டது. அது ஒரு பெரிய மனிதன் செய்த பிரசங்கம்.

குதிரைக்குத் தண்ணீர் காட்டலாம்.

ஆனல் தண்ணீர் குடிக்கும்படி நிர்ப்பந்தம் செய்யமுடியாது. ரூஸ்வெல்ட் அப்படி வேலை செய்வதில்லை. சமீப காலம்வரை அமெரிக்கர்களிடம் அநேக பிரிடிஷாருக்குக் கொஞ்சம் அறுவருப்புத்தான். அப்படியேதான் ரூஸ்வெல்ட், அவரது உற்ற நண்பர்களான கார்டெல் ஹல், ஸம்மர் வெல்ஸ் முதலானவர்களுக்கும் என்று நினைக்கிறேன். ஆனல் நாம் ஒன்று மறந்துவிட்டோம்; அவர்கள் மறக்கவில்லை; அதாவது அமெரிக்கர்கள் ஐரோப்பிய காரியங்களில் சிக்கிக்கொள்ளுவதில்லையென்றும், தனிமையில் சௌகரியமாக வாழ்வது என்ற எண்ணத்தைப் பல வருஷங்களாகக் கொண்டவர்கள் என்பது. யுத்தமே இல்லாமல் செய்யப் போராடின (சென்ற) யுத்தத்திற்குப் பிறகு, பொருளாதார நிலை தட்டுக்கெட்டுத் தடுமாறி, அதன்பின் ஏராளமான சுபீக்ஷம் ஏற்பட்டு, குண்டுகள் ரகசியப்போலீஸ் காரியஸ்தர்கள் சஞ்சார எல்லையிலிருந்து, 3,000 கடல் மைல் தூரத்தில் போலி சாவதானத்தில் அப்படி 13,500,000 ஜனங்கள் அமெரிக்காவிலுள்ளவர்கள் போரா (Borah), ஜான்ஸன் (Johnson) தளகர்த்தர்

ஜான்ஸன் (General Johnson) கர்னல் லிண்ட்பர்க் (Colonel Lindburgh) ஜோஸப் கென்னெடி (Joseph Kennedy) ஹென்றி போர்ட் (Henry Ford) போன்ற பெரிய பேர்வழிகளை இவர் எதிர்க்க வேண்டியதாகவிருந்தது; இவர்கள் பிரிடனுக்கு விரோதமென்ருவது, ஜெர்மனிக்கு சார்பென்ருவது இல்லை; ஆயினும், தனித்திருப்பது என்ற கொள்கையை ஆதரித்த முக்கியஸ்தர்கள், பூஜிக்கப்பட்ட அரசியல் முறையை கண்ணுங்கருத்துமாக காப்பவர்கள், என்ன நிரடான நிலைமையானுலும் ஏகாதிபத்தியம் என்ற வாசனையேகூடாது என்பவர்கள், என்றபடியால் அவர்களுக்குப் பத்திரிகைகளிலும் பொது மக்களிடத்திலும் ரொம்ப செல்வாக்கு உண்டு.

ஜயபேரிகையுடன் ரூஸ்வெல்ட் மறுமுறை தேர்ந்தெடுக்கப்படும் வரையிலும், அதற்குப்பின்னும், கவர்ன்மெண்ட் ஏன் தீவிரமாக வேலைசெய்யவில்லையென்று ஆத்திரத்துடன் கேட்கும்வரை முக்கியமானகாரியங்களொன்றுமே அவர் செய்யவில்லை. (a) இந்தபபோர் சுதந்திரத்திற்காகப் புரியப்படுகிறது என்ற விஷயமும், (b) அமெரிக்கா ஜனநாயக ஆட்சியின் பாதுகாப்பிற்கு முன்னணியில் பிரிடன் நிற்கிறது என்ற விஷயமும், (c) ஐந்தாம் படையார் சாவதானமாக இப்போது இருக்கவும், ஒருவாறு ஜயமடையக்கூடிய அச்சுதேசத்தாருக்குப் பிரயோஜனமாகக் கூடியதாகவுமுள்ள தென் அமெரிக்கா இருக்க "மன்ரூ கொள்கை"-யும் வெருந்தாளகப் போய்விடக்கூடும் என்ற உணர்ச்சியும், அமெரிக்கர் மனதில் பதிந்துவிட்டதெனறு நிச்சயமானமேல, ரூஸ்வெல்ட் தன் கொள்கையை பகிரங்கப்படுத்தினுர்; அதுவும் அதை அனுசரித்த வேலைமுறைகளும் சந்தேகத்திறகிடமில்லாமல் இருந்தால், சில அச்சுதேசபபத்திரிகைகள் கசப்புடன் "அமெரிக்காபோரில சேரவில்லையென்று இன்னமும் பேசுவது கேவலம் நடிப்பு" என்ற அபிப்பிராயத்தைப் பிரசுரம் செய்தன.

வாடகைக்கு விடுதல்.

இது சம்பந்தமான சட்டம விஷயமாக பலமான எதிர்ப்பு இருக்கும்; ஆனுல் வெகு சீககிரமாக முடிவிற்குக்கொண்டுவரப்படும்; தனித்திருத்தல் கொள்கையைக்கொண்டவர்களான ஹென்றி போர்ட் முதலியவர் வழிக்குவந்துவிட்டார்கள்; மற்றவர்களும் முழுமனதுடன் அதை ஆதரிப்பார்கள்; சர்ச்சிலைப் பார்க்க லண்டனுக்குச்செலலுமுன ரூஸ்வெல்டை தலைவர் தேர்ந்தெடுத்தலில் கடுமையாக எதிர்த்தவர், தலைவருடன் அந்தாங்கமாகப்பேசுகிருர்; சுருங்கச் சொல்லில் மேற்படி சட்டம் நிறைவேருமல் போய்விடும் என்ற பயம் கொஞ்சமும் இல்லை. மாறுதல்கள் கூட அநேகமாக இராது.

முடிவிற்கு வந்தாய்விட்டது.

ஒரு விஷயமாக நாம் சாதாரணமாக எந்த அளவிற்கு எழுதுவோமோ, அதற்கு மேற்கொண்டே அமெரிக்க சமாசாரங்களைப்பற்றி எழுதியிருக்கிருேம்; ஆனுல் விஷயத்தின் முக்கியத்தையை கவனிக்கச் சமாதானம் சொல்லத் தேவையில்லை. முத்தாய்ப்பாக 3-வாக்கியங்கள் எடுத்து வரைவோம் (1 பிரிடிவ்ஷ், 2 அமெரிக்கா). "அமெரிக்காவில் கைத்தொழில் வேலை சரிவர செய்யப்பட்டு

அமெரிக்காவின் அழுத்தமான உதவி இல்லாதபோனாலும், பிரிடன் கடுமையாகப் போர் புரிகிறது. தனித்திருந்தாலே, பிரிடன் தோல்வியடையாது; ஐக்கிய மாகாணங்களின் பூரண ஒத்துழைப்பு கிடைத்தால், பிரிடன் வெற்றி பெறுவதில் சந்தேகமில்லை."

"இந்தப் பிரசங்கத்திலிருந்து நாம் போரில் புகுந்துவிட்டோம். அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. மியூனிச் சம்பவத்திற்குப் பிறகு, அதாவது 2 வருஷங்களுக்கு முன், எப்படி பிரிடன் போரில் சேர்ந்ததோ, அப்படியே நாமும் இப்போது போரில் சேர்ந்துவிட்டோம். நமக்குத் தெரிந்தமட்டில் வித்தியாசமென்னவென்றால், முடிவு எப்படியிருக்குமென்று ஸ்பஷ்டமாகப் புலப்படுகிறது.

"ஆனது ஆகட்டும் என்று பிரிடிஷ் மட்டும் இருக்கமாட்டார்கள் என்றில்லாமல் இன்னுமொரு தேசமும் இருக்கிறதென்று நினைக்க நான் பெருமையடைகிறேன். ரூஸ்வெல்டை தேர்ந்தெடுத்தவர்கள் என் இனத்தார் என்பதிலும் அவர்களில் நான் ஒருவன் என்பதிலும் பெருமையடைகிறேன். இந்த பிரசங்கத்திற்குப் பின்னும் ஹிட்லர் வெற்றியடைவதாக எண்ணினால் அவன் பெரும் பைத்தியக்காரன்."

ஞாபகம்.

இந்த நூற்றாண்டின் துவக்கல் ஒரு அனுபவமற்ற பையன் ஒரு பெரிய வியாசம் எழுதினான். உபாத்தியாயர்கள் அதை கிழி கிழியென்று கிழித்தெறிந்துவிட்டாலும், அது ஓர் உயர்ந்த வியாசமென்றே அந்தப் பையன் இன்னமும் கருதுகிறான். எதிர்கால முறையைப்பற்றிய ஒரு உயர்ந்த வியாசமாகவாவது அதைக்கருதுகிறான்! போர் என்பதே உலகத்திலில்லாமல், எப்போதும் சுக ஜீவனமுள்ள உலகமாகச் செய்வதெப்படியென்று எழுதியிருந்தான். உலக வியாதிகளைக் கண்டிக்க ஆங்கில ஸாக்ஸன் ஐக்கியமே கைக்கண்ட மருந்து என்றுரைத்தான். அதில் ஜெர்மனிக்கும் இடம் வைத்திருந்தான்; ஆனால், பிரிடன், பிரிடனின் சாம்ராஜ்ய நாடுகள், ஐக்கிய மாகாணங்கள் சம்பந்தப்பட்டவரை, பிரத்தியேகமான சுதேசாபிமானம் வகையரா இருக்கக்கூடாதென்பதும், அவைகள் ஒரு பெரிய பொது கோஷ்டியாகச் சேருவதை தடுப்பதென்பது கூடாதென்பதும், அந்த வியாசத்தின் முக்கிய விஷயம். அந்த வியாசத்தின் பல பாகங்களிற்கு ஆக்ஷேபணை அடையாளங்கள் வியாசத்திலேயே உபாத்தியாயர் குறித்தார்; கிண்டலான அபிப்பிராயங்கள் தாராளமாக எழுதினார்; ஆனால்............கானடா, அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்ததாகவே கருதப்பட்டு வருகிறது; பட்டாள, பொருளாதார தூதுகோஷ்டிகள் பரிவர்த்தனை செய்துகொள்ளுகிறார்கள்; ஒருவர் விமானத்தில் மற்றொருவர் பறக்கிறார்; வாஷிங்டனில் லார்ட் ஹாலிபாக்ஸுக்கு ஒருநாளுமில்லாதபடி 3 மந்திரிகள் கொடுத்திருக்கிறார்கள்; மேலும், பிரிடன் மந்திரி சபையிலுள்ள தன் ஸ்தானத்தை இழக்காமலே ஸ்தானிகர் ஸ்தானத்தையும் வகித்தமுதல் ஸ்தானிகராக இருக்கிறார்.

"பால்யாதபி சுகாதபி............" என்ற வாக்கியம் ஞாபகம் வருகிறது.

பிரிடன் பேசுகிறது.

(1940-ம்௵ டிசம்பர்௴ 21௳ பிலிப் நோயெல்பேகர் ஒலிபரப்பியது).

[இந்த ஒலிபரப்பு எழுதியிருப்பது ஒருவாறு பூராவாகயில்லையாயினும், கவனிக்கத்தக்க விஷயமிருப்பதால் சந்தேகமுள்ள இடங்களில் கேள்வியிட்டு, இதைப் பிரசுரித்திருக்கிறோம்.]

இரண்டு ஆங்கிலேயர்கள்.

நேற்று பிரிடிஷ் பார்லிமெண்டு யுத்தத்தைப்பற்றி விவாதம்செய்தது. பேச்சாளர்கள் வின்ஸ்டன் சர்ச்சில் என்ற ஒரு ஆங்கிலனும், டேவிட் லாயிட் ஜார்ஜ் என்ற வெல்ஷ்காரனும். சென்ற யுத்தத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் முறையே கடலிலாகா, பிறகு தரைப் படை, பிறகு ஆகாயப்படை இவைகளுக்கு மந்திரியாக இருந்தார். இன்று அவர் பிரதம மந்திரி, பாதுகாப்பு இலாகா மந்திரி. பிரிடிஷ் கூட்டுறவு நாடுகளுக்கு அவர் தலைவர். ஹிட்லரின் செம்மட்டி அடிகள் நார்வே, ஹாலண்டு, பெல்ஜியம், பிரான்ஸ் இவைகளை வீழ்த்தியபொழுது, அவர்தான் நமது பிரிடிஷ் என்ன, டொமினியன்கள் என்ன, இவைகளின் சைனியங்களைத் திரட்டியிருக்கிறார். ஹிட்லரும் முஸோலினியும் படுதுரோகம் செய்த தேசங்களுடன் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் ஒப்பந்தங்களைச் செய்தவரும் அவரே. காமன்ஸ் சபையில் விவாதத்தைத் துவக்கியவர் இந்த வின்ஸ்டன் சர்ச்சில். பேசியவரில் மற்றவர் லாயிட் ஜார்ஜ். 25 வருஷங்களுக்கு முன் அவர் பிரதம மந்திரி, பிரிடிஷ் கூட்டுறவு நாடுகளுக்கு அவர் தலைவர். வுட்ரோ வில்ஸனுடன் அவர் நேசக்கட்சியின் தலைமை வகித்தார். நான்கு வருஷம் கடும்போரினிடையே அவர் கட்சியை வளர்த்தார். யுத்த முடிவில் அக் கட்சியில் 30 தேசங்களும், 1,500,000,000 பிரஜைகளும் அடங்கியிருந்தனர். 1918-ல் அவர் அந்தக் கட்சிக்கு ஜயம் சம்பாதித்துக் கொடுத்தார்;—மனிதச் சரித்திரத்தில் நிச்சந்தேகமானது—பால்டிக்கிலிருந்து பாக்டாட்வரை பறந்து கிடந்த மூன்று மகத்தான சாம்ராஜ்யங்களின்மீது பெறப்பட்டது அது. யுத்தம் என்ன, அதன் ஒத்தையோ, இரட்டையோ தன்மை என்ன, வெள்ளம்போல் எல்லாவற்றையும் அடித்துச் செல்லும் ஜய அபஜயங்கள் என்ன, இவைகளைக் காமன்ஸ் சபையில் இருப்பவர்களுள் இவர்களைக்காட்டிலும் நன்கு அறிந்தவர்களும் உண்டோ? இவர்களுடன் ஒப்பிட்டால் ஹிட்லரும் முஸோலினியும் தூர நிறகவேண்டிய கெட்ட பறையன்கள். ஆதலால், அவர்களைக் கேட்க சபையோர் நிறைந்து இருந்தனர். அவர்கள் பேச்சை செவிசாய்த்துக் கேட்டனர், முடிவில் பலத்த கரகோஷம் செய்தனர் என்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.

பார்லிமெண்டில் ஒரு பெரிய அமயம்.

அங்கு குழுமியிருந்த எல்லோரும்—அங்கத்தினர்களும் பத்திரிகைக்காரர்களும்—பார்லிமெண்டின் வாழ்நாளில் இதை ஒரு பெரும் அமயமாகக் கருதுவார்கள். இப் பெரியார்கள் நிகழ்த்திய

வாஸ்தவத்தில் பெரும் சொற்பொழிவால் இவ்வமயம் பெரிது. மேலும், ஒரு மாதத்துக்கு முன் நாம் எதிர்பார்க்க முடியாதபடி, இப்பொழுது அவர்கள் யுத்தத்தைப்பற்றி அவர்களிருவரும் நம்பிக்கையுடன் பேசியதாலும் இவ்வமயம் பெரிதாகும். எல்லாவற்றையும் விட இதனால் அது மிக்கப் பெரிது. அது உலகிலுள்ள பார்லிமெண்டு சபைகள் எல்லாவற்றின் தாயான பிரிடிஷ் பார்லிமெண்டு இன்னும் உயிருடன் இருக்கிறது; நமது தேசத்தின் உறுதிக்கே பார்லிமெண்டு தான் மூலம்; உலகத்தையே உயர்வழிகளில் நடத்த அது தார்மிக உயர்வைப் பூணும்; சுதந்திர ஜனங்களின் உறுதிகளைப் பிணைத்து முன்னேறச் செய்ய அது இன்னும் ஒரு உயிர்ததும்பும் கருவி,— என்ற இவைகளை இவ்வமயம் நிரூபித்தது.

அநேக மாதங்களுக்கு முன், யுத்தம் ஆறே மாதங்கள் நடந்த பின், அதனை விமரிசனம் செய்த ஒருவர் சொன்னார்— "சீக்கிரம் பார்லிமெண்டே மணற் சாக்குகளுக்கு இடையே புதைந்துவிடும்," என்று இருபொருள் கொண்டு மொழிந்தார். மற்றொன்றும் அவர் சொன்னார்:- பார்லிமெண்டின் தோற்றங்கள் முன் போலவே இருக்கலாம்; ஆயினும் பெரும் யுத்தத்தின் நெருக்கடியால் பார்லிமெண்டின் சுயேச்சை அதிகாரங்கள் அற்றுவிடும்; அதன் உரிமைகளும் பொறுப்புகளும் ஒன்று வெளிப்படையாகவே ரத்து செய்யப்படலாம், அல்லது குறைக்கப்படலாம்; அல்லது அதன் அங்கத்தினர்களை குண்டுகளிலிருந்து காபந்து செய்யவேண்டி அதனை மண் சாக்குகளால் பரப்பிய கட்டடத்தில் ஒளிவு மறைவுதல் செய்து, இங்கிலாந்தின் உயிர் நாடியின் மையமான லண்டனில் வைக்காமல் எங்கேயாவது தேசத்தின் மூலை முடுக்கில் அது தூங்கிவழியும்; அதிகாரமின்றி அது ஒரு பழங்காலச் சின்னம் போல் ஆகிவிடும்.

பார்லிமெண்டு அசராமல் நடத்துகிறது.

இந்த யுத்தத்தின் முடிவில் நமது ஸ்வதந்திர ஸ்தாபனங்கள் நிலைநிற்காது என்று கூறிய இந்த விமரிசகர் பொய்த்தார் என்பதை இது நிரூபித்தது. பார்லிமெண்டு லண்டனிலிருந்து வேறெங்கும் அனுப்பப்படவில்லை. நாஸி விமானங்கள் அதன் மீது குண்டுகளை வீசின. அதன் சரித்திர பரம்பரைக் கண்காட்சிகள் வெடிகளால் தற்காலிகமாகச் சிதைக்கப்பட்டன. பிரபுக்கள் சபைக்கு வெளியே நிற்கும், சிங்கநெஞ்சு ரிச்சர்டு சிலைக்கையிலிருந்த கத்தி ஒரு குண்டு சிதறியதால் சற்று வளைந்தது. மன்னர் பிரானின் மெய்காப்பு வேலை பார்த்து வந்த லைப்ரேரியன் ஒருவனுக்குப் பலத்தகாயம் ஏற்பட்டது. ஆனால் பார்லிமெண்டு அதன் இடத்திலேயே இருந்து வருகிறது. நாஸித்தாக்குதல்கள் அதனை காபந்துக்காக துரவிரட்டி, அதனால் அதனைப் பயனற்றதாகச் செய்யமுடியவில்லை. நடந்தது இதற்கு எதிரிடை. லண்டன் பலமாக தாக்கப்படும் பொழுது எங்கள் வேலை இடத்தை விட்டு நாங்கள் ஓடோம் என்று பார்லிமெண்டு சொல்லிற்று. ஆகஸ்டு முதல் நவம்பர் வரை அதற்கு ரஜா; தனக்கு ரஜா வேண்டாம் என்றது. அந்த மாதங்கள் எல்லாம் அது தன் வேலையைப் பார்த்தது. இதுவரை அது கூடின நாட்களைவிட இவ்வருஷம்ஜாஸ்தி நாள் அது கூடிற்று.

நாளுக்கு நாள் அதன் அங்கத்தினர்களும் இதரர்களும் அதன் நடவடிக்கைகளில் தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுகிறார்கள்; அவர்கள் வீடுகள் குண்டுகளால் இடிந்து விழலாம்; தங்களைத் தேர்ந்தெடுத்தவாக்காளர்களுடன் ஏ. ஆர். பி. காபந்து ஸ்தலங்களில் இரவு முழுவதும் கழித்திருக்கலாம்; நாள் பூரா தெருக்களில் குண்டுகள் பற்றவைக்கும் தீக்களை அணைத்து, காயம் பட்டவர்களை மீட்டு, இறப்பவர்களுக்கு உதவிபுரிந்து, இறந்தவர்களை ஸ்மசானங்களுக்குத் தூக்கிச் சென்றிருக்கலாம்; ஆனால் இவைகள் தங்கள் பார்லிமெண்டு வேலைகளைச் செய்வதில் குறுக்கிடுகிறதில்லை.

உயிரும் சுறுசுறுப்பும்.

வரி விதிக்கும் உரிமைகளையும் பார்லிமெண்டு இழக்கவில்லை. இதிலும் எதிர் பார்த்ததற்கு எதிரிடைதான் நடந்திருக்கிறது. சமாதான காலத்தைவிட கவர்ன்மெண்டுக்குத் தானாகவே மனம் ஒப்பி வேகமான நிர்வாக அதிகாரங்களை அளித்திருக்கிறது. மந்திரிகள் அரசாங்கத்துக்கு அபாயகரமானது என்று கருதிய சில நடவடிக்கைகளுக்காக தன் அங்கத்தினர்களில் ஒருவரை சிறை செய்ய அனுமதித்திருக்கிறது. ஆனால் மந்திரிகளின் அதிகாரங்களின் வளர்ச்சியுடன் பார்லிமெண்டின் அதிகாரங்களும் வளர்ந்திருக்கின்றன. இப்போதைவிட அதன் பெயர் ஓங்கி நின்றதில்லை. இப்போதைவிட அது சுறுசுறுப்பாகவும் நன்றாகவும் வேலை பார்த்ததில்லை. சமாதான காலங்களில் அது பார்த்த வேலைகளும் இப்பொழுது குறையவில்லை. கேள்வி நேரத்தில் அநேக விஷயங்கள் சம்பந்தமாக ஊடுருவிப் பாயும் கேள்விகளால் கவர்ன்மெண்டின் போக்கை நியமனம்செய்யும் அதிகாரம், இப்பொழுது யுத்தம் ஆச்சே, அதனால் குறைந்திருக்கும், என்று யாராவது சந்தேகப்படுகிறீர்களா? அந்தச் சந்தேகமே வேண்டாம். இப்பவும் பூரா ஒரு மணி நேரம் மந்திரிகள் கேள்விகளுக்குப்பதில் சொல்லிவருகிறார்கள். இறுதிதொனியில் 'பதில் இல்லையென்பது' என்று சொல்லி விவாவதத்தை அவர்கள் முடிக்கப்பார்க்கலாம்; 'முன் சொன்னதற்கு ஒன்றும் கூட்டிச் சொல்ல இல்லை' என்கலாம்; 'புதிதாக அங்கத்தினர் எழுப்பிய உப கேள்விகளைக் குறித்து எழுத்து மூலம் நோட்டீஸ் வேண்டும்' என்கலாம்; அல்லது 'இந்த கனம் மெம்பர் கவனத்துக்கு முன் மற்றொரு கனம் மெம்பர் இதே சம்பந்தமாகக் கேட்ட கேள்விக்கு மே மாதம் 17வ கூறிய பதில் கொண்டுவரப்படுகிறது' என்கலாம். இருந்தபோதிலும் சமாதானத் திடையேபோல மந்திரிகள் கேள்வி பீரங்கிகளின்வாய் எதிரேநின்று வெளிக்கிளம்ப வேண்டும்; ஏனெனில் கேள்விகள் மிக்க பயனளிக்கக்கூடியன. யுத்த சந்தர்ப்பங்களிடையே, முன் போல, அநியாயக்காரனை அமுக்கி, சமூக நியாயத்துக்காக அங்கத்தினர்கள் போராட முடியாது, என்று எவரேனும் சந்தேகப்பட்டார்களா? இவ்விஷயங்களில் இப்போதைவிட அங்கத்தினர்கள் சுறுசுறுப்பாக இருந்ததில்லை. துருப்புகளின் உரிமைகள், அவர் சம்பளங்கள், அவர்கள் பெண்சாதிகள் குழந்தைகளுக்கு ஜீவனாம்சம், குழந்தைகளின் படிப்பு, வயதான பென்ஷன்காரர்களின் கஷ்டங்கள்,—ஒரு நிமிஷங்கூட

மெம்பர்களின் கவனம் இதுபோன்ற விஷயங்களில் தளரவில்லை.

புதுப் பிரச்னைகளைத்தீர்த்தல்

யுத்த சன்னிவேசங்களிடையே பார்லிமெண்டு புதுச் சட்டங்கள் இயற்ற முடியாது என்று எவருக்காவது சந்தேகம் இருந்ததா? இப்பொழுதுபோல் ஒரு பொழுதும் புதுப் புதுப் பிரச்னைகள் தீர்க்க எழவில்லை. இவ்வளவு ஒக்குமத்தாகவும் இவ்வளவு துரிதமாகவும் ஒரு பொழுதும் வேலை நடைபெறவில்லை. நாஸி குண்டுகள் தொழிற்சாலைகளில் தொழிலாளிகளைக் காயப்படுத்தி, ஆகாயப் பாதுகாப்பாளரையும் துறைமுகங்களில் மீட்பவர்களையும் கொன்றன. குண்டுகள் தொழிற்சாலைகளையும், பொது ஜனக் கட்டடங்களையும், நகரங்களையும், பட்டணங்களையும், கிராமங்களையும், ஏழை, பணக்காரர்களின் வீடுகளையும் ஆபீஸ்களையும் அழித்திருக்கின்றன. நாஸி அழிவிலகப்பட்டவர்களுக்குக் கவர்ன்மெண்டு ஈடு செய்யும் சட்டம் இதனால் உடனே இயற்ற வேண்டி வந்தது. ஆகாயத்திலிருந்து தாக்குதலால் விளைந்த நஷ்டத்தை ஈடு செய்வதை, அதனால் எல்லாவற்றையும் ஏற்கனவே இழந்த ஏழைத் தலையில் சுமத்தாமல், அதை நியாயப்படி சுமக்க வேண்டிய தேசத்தையே பொருத்துக் கொள்ளும்படி செய்ய மற்றொரு சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. யுத்தத்தினால் ஏற்படும் பார்லிமெண்டில் நிறைவேறிய 5, 6 இதர சட்டங்கள் யுத்தத்தால் விளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கஷ்டங்களையும் நிவர்த்திக்கத்தக்கன. இதனால் ஜனங்களின் ஊக்கம் குன்றாமல் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. தெற்கு வெல்ஸின் நிலக்கரிச்சுரங்கங்களிலிருந்து வந்த ஒரு குட்டித்தலைவர் காமன்ஸ் சபையில் ஒரு நாள் சொன்னார்: 'வாடர்லூ யுத்தம் ஈடன் காலேஜ் பந்தடி மைதானங்களில் ஜயிக்கப்பட்டது என்பார்கள். இந்த யுத்தம் நமது நாட்டின் பாமர ஜனங்களின் வீடுகளில் தான் ஜயிக்கப்படும் அல்லது தோற்கப்படும்.'

விசேஷ துரித ஏற்பாடுகள்.

மேலும் பார்லிமெண்டில் ஜனங்களின் நன்மைகளின் காப்பாளர்களான அதன் மெம்பர்களும், பெர்லினிலும் ரோமிலும் இருக்கும் சர்வாதிகாரிகளால்கூட எட்டமுடியாத துரிதத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். சில வாரங்களுக்குமுன் பார்லிமெண்டு மெம்பர்கள் நிதிமந்திரிக்கு ஒரே காலையில் 5,000,000,000 பவுனைச் செலவுக்கு அளித்தார்கள். இதை மிக்கநம்பிக்கையுடன் அளித்தார்கள்; ஏனெனில் யுத்த ஒப்பந்தங்களிலிருந்துவரும் உபரி லாபங்கள், புதிதாக இயற்றிய சட்டங்களால் கண்டிராக்டர்களுக்குப்போகாமல் ஜனங்களுக்கே திரும்பிவரும்; ஆனதால், முன் யுத்தத்தில்போல இந்தத்தடவை தனி நபர்கள் யுத்தத்தால் அநியாயக்கொள்ளை லாபமடைய இடமில்லை.

சர்ச்சையின் பிரயோஜனம்.

முன்போலவே இந்த யுத்தத்திலும் பார்லிமெண்டு பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. சென்ற யுத்தத்தில், ஸோஷல்லீக், டார்டனல்ஸ் யுத்தம், மெஸொபொடோமியா யுத்தம், இவைகளைப் பற்றிய விவாதங்கள் யுத்தப் போக்கையே திருப்பின. இப்பொழுதும் கவர்ன்மெண்டு செய்யும்

ஒவ்வொன்றுக்கும் தனக்கு ஜவாப் சொல்லும்படி செய்திருக்கிறது. சமாதான காலத்தில் வெளிப்படையாகத் தெரிந்து கொள்வதைக் காட்டிலும், ரகசியக் கூட்டங்களில் நமது படைகளைப் பற்றியும், அவைகளின் பிரச்னைகளைப் பற்றியும் அது தெரிந்து கொண்டிருக்கிறது. அவசியம் என்று அதற்குத் தோன்றினால் வெளிப்படையாக விவாதிப்பதினின்றும் அது பின்வாங்கவில்லை. காமன்ஸ் சபையில் நார்வே யுத்தத்தின் மீது நடந்த ஒரு பகிரங்க விவாதத்தில்தான் ஒரு கவர்ன்மெண்டை விலக்கி அதைவிட மற்றொரு பலமான கவர்ன்மெண்டை ஸ்தாபித்தது. அடிக்கடி பகிரங்க விவாதங்களின் பயனாகத்தான் சப்ளை இலாகாவைச் சுறுசுறுப்பாக இருக்கத்தூண்டி படைகளுக்கு ஆயுதமளிப்பதை துரிதப் படுத்தியிருக்கிறது.

ஜனநாயகத்தின் காப்பாளர்கள்.

எல்லாவற்றையும் விட மதிப்பிட முடியாதது இதுதான்—ஜனநாயகத்தின் அதிகாரங்கள், ஐதீகங்கள், சுயேச்சை இவைகள் எதிலிருந்து உற்பத்தியாகின்றனவோ, அந்த ஜனநாயகத்தின் ஆத்மாவை பார்லிமெண்டு காப்பாற்றியிருக்கிறது. காமன்ஸ் சபையில் ஒரு பொதுஉடைமை மெம்பர் இருக்கிறார். யுத்தத்துக்கு முன் ஒரு நாள் கூட்டத்தில் அவர் ஒரு மதிப்பு வாய்ந்த டோரி மந்திரியை நிதி ஆசனத்தில் அவர் ஒரு காற்றுப்போன புத்தரைப்போல் உட்கார்ந்திருப்பதாக உவமித்தார். மற்றொரு நாள் அவர் மற்றொரு ராஜ தந்திரி தன் சர்க்கார் உத்தியோகத்தில் சிகாகோ காலாடியின் இழிவான தைரியத்தை காட்டுவதாகச் சொன்னார். இம்மாதிரி பரிபாஷையை எல்லோரும் ஆமோதிக்காமல் இருக்கலாம். ஆனால் அவன் இன்னும் பார்லிமெண்டு மெம்பர்தான், தன் எண்ணங்களை மனம்போனபடி வெளியிடலாம்.

பெரிய ஐதீகம்.

விக்டோரியா ராணியாரின் பிரதம மந்திரி டிஸரெலி 'ஐதீகத்தால் ஆள வேண்டும், அல்லது கத்திமுனையால்;' என்றார். ஜனநாயகத்துக்கு சக்தி அளிப்பது தலைமுறை தத்துவமாக ரத்தத்தில் ஊறிவரும் ஐதீகம், வழக்கம், அனுஷ்டானம். பார்லிமெண்டில் காணக்கிடைப்பது இந்தப் பழைய நாள் ஐதீகங்கள், அனுஷ்டானங்கள். வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனை குகைபோல் இருண்டு கிடக்கிறது. விளக்கு அணைப்பால் இங்கும் அங்கும் மட்டில் மூடிபோட்ட மெழுகுவத்திகள் மினுமினுவென்று எரிகின்றன. பார்லிமெண்டு இயற்றிய சட்டங்கள் இங்குதான் மன்னரின் சம்மதம் பெறுகின்றன. அதுவும் நார்மன் அரசர்கள் உபயோகித்த பிரெஞ்சிலேயே 'அரசர் சம்மதிக்கிறார்' என்ற வார்த்தைகளில் வருகிறது. இதனால்தான் நமது உறுதிகள் பார்லிமெண்டில் உருவகப்படுத்தப்படுகின்றன. பெல்ஜியம் கீழே விழுந்து அதன் அரசன் லெபால்டு பணிந்தபொழுது அந்த பயங்கர சமாசாரத்தை முதன் முதலில் கேட்டு ஜரித்தது பார்லிமெண்டுதான்; மற்றொரு பார்லிமெண்டு விவாதம்தான் ஜனங்களின் அபிப்பிராயங்களைத் திரட்டியது; ஒன்றன் பின் ஒன்றாக வேகமாகத் தொடர்ந்த தோல்விகளைக்கேட்டுக் கலங்காமல் இருக்கும்படி செய்தது;

ஜெர்மன் படையெடுப்புக்கும், ஆகாயத் தாக்குதலுக்கும், நீர்மூழ்கிகளால் முற்றுகைக்கும் தயாரித்தது. பார்லிமெண்டால்தான், இதுவரை கண்டறியாதபடி, இன்று ஜனங்கள் ஒற்றுமையாக நிற்கிறார்கள். பார்லிமெண்டின் சுயேச்சைக்கும் விவாதத்துக்கும் இதுவும் அறிகுறி:—இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு பெரிய வாக்கு வாதத்தில் ஒரு மெம்பர் ஹிட்லருடன் உடனே சமரஸம் செய்துகொள்ளும்படி கேட்டார்; 600 சொச்சம் மெம்பர்களில் அவனை 5 மெம்பர்கள்தான் ஆதரித்தார்கள்.

சண்டைபோடத் தகுந்த விஷயம்.

நேற்று வின்ஸ்டன் சர்ச்சிலும் லாயிட் ஜார்ஜும், இதைச் சொன்னார்கள்—ஆபிரிகாவில் நமது வெற்றிகளும் அல்பேனியாவில் கிரேக்கர்களின் பெரும் வெற்றிகளும் பெற்றது, இதாலியப் படைகளுக்கு யுத்தத்தில் மனம் ஈடுபடவில்லை, ஒரு திராபை சர்வாதிகாரி அவர்களைச் சண்டைபோடச் சொன்ன காரணத்தை அவர்கள் நம்பாததால், என்றார்கள். லிபியாவில் யுத்தத்தை கவனித்தவர் ஒருவர் இதைச் சொன்னார்—இதாலியர்களின் எல்லா அம்சங்களையும் தூக்கிப் பார்த்தாலும், யந்திர சாதனங்கள் யுத்த தந்திர முறைகள் இந்த சமாதானங்கள் செய்த பிறகும், இதாலியர்களைத் தோற்கடித்தது நமது படைகளின் உற்சாகம், என்றார். லண்டன் மெக்கானிக்குகள், யார்க்ஷயர் தரிக்காரர்கள், வெல்ஸ் இடையர்கள், ஸ்காத்லாந்து குடியானவர்கள், டார்ஸெட் நார்பக் கெண்ட் மாலுமிகள்,-இவர்கள் எல்லோருடைய மனமும் அவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. கானலோடும் பாலைவன மணல்களில் அவர்கள் சண்டைபோடுவது ஸ்வதந்திரத்துக்காக — தங்களுக்கும், இதாலியர்களுக்கும், எல்லா மனிதர்களுக்குமே-என்பதை அவர்கள் அறிவார்கள். ஏற்கனவே நமது மாலுமிகளும் நமதுவிமானமோட்டிகளும் ருஜு செய்திருக்கிறபடி, இவர்களும், உலகினில் புத்திநிறைந்ததும், பலமானதும், நிலைபெற்றதுமான கவர்ன்மெண்டின் அமைப்பு பார்லிமெண்டரி ஜனநாயகம் தான், என்பதை நிரூபித்திருக்கிறார்கள். தற்போதைக்கும் எப்போதைக்கும் அவர்கள் 'ஜனங்களால் ஜனங்களுக்காக ஜனங்கள் மீது ஆட்சியை'—உண்மை ஜனநாயக ஆட்சியை—அவர்கள் பாதுகாக்கிறார்கள்.

வட ஆபிரிக்காவில் மின்னல் எதிர்ப்பு.

மின்னல் எதிர்ப்பினால் ஹிட்லர் ஆறுவாரங்களில் போலந்தை ஜயித்தான். ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க் இவைகளைப்படையெடுத்து ஜயித்த ஐந்து வாரங்களுக்கெல்லாம் அவன் பாரிஸ் நகரில் புகுந்தான். இந்தச் செய்கைகளைப்பற்றி அவன் ஒவ்வொரு பிரசங்கத்திலும் பெருமைபேசிக் கொள்ளுகிறான். இந்த மாதிரி எதிர்ப்பால் பிரிடன் என்ன, மற்ற எல்லா சுயேச்சை வகிக்கும் தேசங்களென்ன எல்லாவற்றையும் பயமுறுத்தி சரணமடையச்செய்து விடலாமென்று அவன் நினைத்தான்.

வட ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்யப்படைகளின் மின்னல் யுத்தம் இந்த ஹிட்லரின் திரத்தை மங்கும்படி செய்து விட்டது. ஒரு பெரிய சைனியத்தை முற்றுகைபோட்டு யுத்தம் ஆரம்பித்த 72-மணி நேரத்திற்குள்ளாக அதை ஜயிப்ப தென்பது இது வரையில் நடந்திராத ஒரு பெரிய ராணுவ வெற்றிதான்.

ஒரு மாதத்திற்குள்ளாகவே தளகர்த்தர் வேவலுடைய சைனியமானது ஒரே ஒரு ரஸ்தா மட்டுமுள்ள தண்ணீரில்லாத பாலைவனத்தில் 120-மைல் தூரத்துக்குமேல் கடந்திருக்கிறது. பார்டியா போன்ற நன்ருய் பாதுகார்க்கப் பட்ட ராணுவஸ்தலங்களிலிருப்பதும், சங்கியையில் அதிகமானவும் நன்ருய் யுத்த முஸ்தீபுகளோடுமுள்ள சத்துருவையே அது தோற்கடித்திருக்கிறது. இது வரை யில் 70,000 இதாலியர்களைக் கைது செய்தும், ஏராளமான யுத்ததளவாடங்களையும் அது கைப்பற்றியிருக்கிறது.

இரண்டு எதிர்ப்புக்குமுள்ள வித்தியாசம்.

பிரிடன், ஜெர்மனியின் குரூரமான செய்கைகளில்லாமலேயே வெற்றி பெற்றிருக்கிறது.

டச்சுக்காரர்களின் விருந்தாளிகளாக வெகு வருஷமாகயிருந்த ஜெர்மானிய ஐந்தாம் வகுப்பைச்சேர்ந்தவர்கள் ஹாலந்திலேயே கபடமாக துரோகம் செய்து டச்சுக்காரர்களைச் சரியானபடி ஜெர்மன் படையெடுப்பைத்தடுக்க முடியாதபடி செய்துவிட்டார்கள். டச்சுக்காரர்கள்போல் வேஷம் போட்டுக்கொண்டு நாஸிகள் கலவரம் செய்தார்கள். டச்சு சைனியத்தை சரணுகதி செய்யும்படி செய்ய ஜெர்மானிய வெடிகுண்டுகள் வீசும் விமானங்கள் தற்காப்பு இல்லாத ராட்டர்டாம் நகரத்திலிருந்த பொது ஜனங்களில் 30,000 பேர்களை 90 நிமிஷங்களில் கொலை செய்தன.

நேசநாடுகளின் சைனியங்கள் ரஸ்தாக்களில் போய்க்கொண்டிருந்தபொழுது கெட்டஎண்ணத்துடன் ரஸ்தாக்களுக்கு விரட்டப்பட்ட தஞ்சம் புகுந்த அநேகர் களால் மிகவும் தடைசெய்யப்பட்டனர். மேற்படி தஞ்சம் புகுந்தவர்கள் ஜெர்மானியர்களுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை. இவர்கள் மீதுதான் ஜெர்மன் விமானங்கள் கீழாகப்பாய்ந்து ஏராளமான வெடிகுண்டுகளைப்போட்டன. பிரான்ஸ் தேசத்திய ரஸ்தாக்களில் ஏராளமாகத்திரிந்து கொண்டிருந்த தஞ்சம் புகுந்தவர்களில், ஜெர்மன் குண்டுவீச்சுக்குத்தப்பிப்பிழைத்த பத்து வயதுள்ள ஒரு பெண் அறிவித்ததாவது "நாங்கள் பிரேதங்களின் மேல் மிதித்துச் செல்வது தான் மிகவும் கஷ்டமானநிலை".

வருங்காலத்துக்கு ஒரு அறிகுறி.

வேவலுக்குக் கிடைத்த ஜயமெல்லாம் ராணுவத்தின் மேன்மையால் ஏற் பட்டவைகள். பிரிடிஷ் படைகள் யுத்தத்தில் முன்னேறயேற இன்னும் நமக்கு வெற்றிகள் ஏற்படுவதற்கு இது ஒரு சுபசூசகம். ஜயமடைவதற்கு நமக்குப் பல சாதனங்கள் உள. முதலாவது, பிரிடிஷாரின் கடற்படையின் ஆதிக்கம்.

இதனால் யாதொரு சேதமன்னியில் சாம்ராஜ்ய சைனியங்களை மத்திய கிழக்கு நாடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குச் சாதகம். இரண்டாவது, இங்கிலாந்திலும் மத்தியதரைக்கடல் போர் முனையிலும் நமக்கு மகத்தான பயம் ஏற்பட்டபொழுது நாம் சாதுர்யமாய் நடந்து கொண்டது. மூன்றாவது, நம்முடைய ஆழ்ந்த பொறுமையும் பயிர்ச்சியும், நான்காவது, கடலிலும், நிலத்திலும், ஆகாயத்திலும் யுத்தத்தை சாமர்த்தியமாக நாம் நடத்துவது. ஐந்தாவது, நம்முடைய வேலைக்காரர்களின் வேலைத்திறமையும் ஒத்துழைப்பும். ஆறாவது, எதிர்ப்பில் தளர்ச்சியடையாமல் யுத்தம் செய்யும் நம்முடைய ஸ்வபாவமும்.

கதம்பம்.

1. இங்கிலீஷ்காரர்களுக்கு சுதந்திரம் இல்லாத வாழ்வு முற்றிலும் உபயோகமற்றது. மற்றவர்களைக்காட்டிலும் இவர்கள் உயிரைத்துறப்பதற்குத் தயாராகயிருப்பார்கள்.'' (ஸ்வீடன் தேசத்திய 'ஹாண்டல்ஸ் டிட்னிங்' ஜனவரி 14).

2. "பஸிபிக் சமுத்திரத்தை ஒட்டியிருக்கும் நாடுகளில் ஏற்படுத்தப்போவதாகச் சொல்லும் புதிய அமைப்பானது மற்றெல்லா தேசங்களுடைய மேன்மையைக் கவனியாது அவைகளை ஒருவருடைய ஆதிக்கத்துக்கு உட்படுத்துவது என்பது.'' (மிஸ்டர் கார்டல் ஹல், வாஷிங்டன், ஜனவரி 15).

3. "பிரிடிஷ் மக்களுடைய அஞ்சாத நெஞ்சத்தினால் ஹிட்லர் நிச்சயமாய் தோற்கடிக்கப்படுவான்'' (ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர், பிரிடிஷ் விமான இலாகா மந்திரி, கிளாஸ்கோ ஜனவரி 16).

4. "இந்த ராஜீய விஷயமான யுத்தத்தில் மட்டுமல்ல, நம்முடைய மகத்தான கொள்கைகள் சம்பந்தமான யுத்தத்திலும்கூட கிரேக்கர்களை நம்முடைய நேச ஜனங்களாக நாம் அன்புடன் வரவேற்கிறோம்.'' (காண்டர்பரியிலிருக்கும் மத-குருவினிடமிருந்து ஆதென்ஸிலுள்ள ஒருவருக்கு அனுப்பிய கடிதம், ஜனவரி மீ மத்தியில்).

5. ஹிட்லரும் அவருடைய பரிவாரங்களும் கண்களை விளக்கிக்கொண்டு அமெரிக்காவிலுள்ள காங்கிரஸ் சபையின் நடவடிக்கையை உற்று நோக்கினால் பிரிடனுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்யவேண்டிய ஒரு மசோதாவை அவர்கள் காண்பார்கள்.'' (ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர், கிளாஸ்கோ, ஜனவரி 16).

6. "காபந்து வேண்டுமென்றால் நாம் கண்கொட்டாமல் விழித்துக் கொண்டு இருந்துவரவேண்டும்.'' (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், கிளாஸ்கோ, ஜனவரி 17).

7. "உலகத்தில் எந்த பாகத்திலும் எந்த ராஜதந்திரியாலும் தெரிவிக்காத படி இந்த சொற்பொழிவு மிகவும் விந்தையாயிருக்கிறது." (வாஷிங்டனில் மிஸ்டர் கார்டல் ஹல் பேசியதைப்பற்றி "யோமியூரி ஷிம்பம்" என்கிற பேபர், டோக்கியோ ஜனவரி 17).

8. "சுலபமாக நாம் இந்தச் சங்கடத்தைத் தாண்டிவிடலாமென்று நான் நினைக்கவில்லை. நமக்கு முன்னால் அநேகம் இடையூறுகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றையாவது அலக்ஷியம் செய்தால், அது நமக்கு அபாயத்தை விளைவித்து முற்றிலும் நஷ்டத்தை உண்டுபண்ணும்." (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், கிளாஸ்கோ, ஜனவரி 17).

9. "ஒரே ஒரு பிரச்னைதான். நாம் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற்றம் அடைந்து நம்முடைய சுதந்திரத்தை அடைகிறதா அல்லது யதேச்சாதிகாரிகள் ராஜ்ய பாரம் செய்த மத்திய நூற்றாண்டுகளுக்குத் திரும்பி நோக்குவதா?" (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், கிளாஸ்கோ, ஜனவரி 17).

10. "பிரிடிஷ் நகரங்களை ஜெர்மானியர் குண்டுகளால் தகர்த்துவதை பிரிடிஷார் பொருத்துக்கொள்ளுவதுபோல, ஜெர்மனியைச் சேர்ந்த நகரங்கள் நம் குண்டுகளால் உடைக்கப்பட்டால் அவர்கள் நம் மாதிரி அதை பொறுத்துக் கொள்ளுவார்களென்று நான் நினைக்கவில்லை." (கர்னல் ப்ரான்க் நாக்ஸ், வாஷிங்டன், ஜனவரி 18).

11. "இதுவரையில் நாம் பார்த்திராத இந்த அபாய நிலைமையில ஜனநாயகத்தின் ஆதிக்கத்தை பலப்படுத்துவதும் நிலைநாட்டுவதும்தான் நம்முடைய முக்கியமான கடமை." (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், வாஷிங்டன், ஜனவரி 20).

12. "நாம் இப்பொழுது யுத்தத்தில் கலந்துவிட்டோம்." (கப்பற்படைத் தலைவர் யேட்ஸ் ஸ்டெர்லிங், இல்லினாயி, ஜனவரி 17).

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

(ஜனவரி 6உ முதல் 12உ வரை.)

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

பார்டியா இதாலிய வெற்றியாம்!

ஜனவரி 4-ம் தேதி பிரிடன் பார்டியாவைப் பிடித்ததிலிருந்து இதாலிய, ஜெர்மானிய பிரசாரகர்களுக்கு மூளை கலங்கிவிட்டது. பார்டியா பிடிபட்ட தினத்தில் ரோம் ரேடியோ பார்டியாவை வர்ணித்து, அது ஒரு நகரமுமல்ல, கோட்டையுமல்ல, எல்லைப்புறத்தில் ரஸ்தாவிலிருக்கும் ஏதோசில ஜனங்கள் மட்டும் வசிக்கும் சிறிய ஊரென்று சொல்லியது. ஆனால் டிஸம்பர் 21-ல் இரண்டு அச்சுநாடுகளும் ஒரே வாயாக பார்டியாவை லிபியாவின் வாயில்-நிலயமென்றும், பாஸிஸ்ட் கக்ஷியைப் பாதுகாக்கும் அரணென்றும் வர்ணித்தன.

பார்டியாவை பிரிடிஷ் துருப்புகள் பிடித்த ஒருவாரம் கழித்து, அதாவது ஜனவரி 11-ல், பார்டியாவில் இதாலிக்குத்தான் வெற்றியேயொழிய பிரிடனுக் கில்லையென்று முஸோலினியின் பத்திரிகை எழுதி அதை ரோம் ரேடியோ ஒலி பரப்பியது. வெற்றியைப்பற்றி முஸோலினிக்குச் சொந்த அபிப்பிராயங்கள் சில வுண்டு. 1916 நவம்பரில் கபோரெட்டோவென்ற இடத்தில் இதாலி தோல்வி யடைந்தது. 250,000 சிப்பாய்கள் இறந்து அதற்கு சுமார் இரண்டு பங்கு சிப்பாய் கள் மேலும் கொல்லப்பட்டும், காயப்பட்டும் சேதமானார்கள். தான் மந்திரியா யிருந்தால் இதை மாற்றிப் பொய்யாக்கி, வெற்றியென்று சொல்லிவிடுவே னென்று ஒரு சமயம் முஸோலினி மாடம் டபூ வென்ற பிரெஞ்சு பத்திராதி பரிடத்தில் சொல்லியிருக்கிறார்.

பார்டியாவிலேற்பட்டிருக்கும் பிரிடிஷ் வெற்றியைச்சிறிதாக்கி மறைப்பதற் காக, இந்தச் சண்டையில் பிரிடிஷார்களுக்குண்டாயிருக்கும் நஷ்டத்தை பிரிடன் ஈடு செய்யமுடியாது, ஆனால், இதாலியர்களுடைய பலம் இந்தப்போரில் குறையவேயில்லையென்று இதாலிய ரேடியோ பிரஸ்தாபிக்கிறது. ஆனால் உண்மையில் பிரிடிஷ்-கப்பற்படையின் பலத்தைக்கொண்டு வேண்டிய சைனியங் களையும், தளவாடங்களையும் எகிப்துக்கு பிரிடன் கொண்டுவரமுடியும். பார்டியா சண்டையில் இதாலிக்கு 40,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்; இவர்களில் மேலதிகாரிகள் பலர். பிரிடனுக்கு நஷ்டம் 600-பேர்கள்தான்.

புரியவில்லை போலும்.

பார்டியாவைப்பற்றிய பேச்சு இப்படியிருக்க, கிரீஸைப்பற்றிய ஒலிபரப்பு களும் முன்னுக்குப்பின் விரோதமாய் வந்துகொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் கிரீஸுக்கு ஒருவிதமான உதவியும் பிரிடனிடமிருந்து கிடைக்காதென்று இதாலியும், ஜெர்மனியும் சேர்ந்து ஒலிபரப்பின. இப்பொழுது, கிரேக்க சைனியமுழுவதும் பிரிடிஷ் அதிகாரிகளால் திருத்தியமைக்கப்பட்டு விட்டதாயும், அங்கிருக்கும் பீரங்கிகள் பிரிடிஷ் பீரங்கிகளென்றும், விமானப்படையும், பிரிடிஷ் விமானப்படையென்றும், அங்கு சேனாதிபதிகளும் பிரிடிஷ் அதிகாரிகளென்றும், இதாலிய ரேடியோ இதாலிய மக்களுக்கு ஒலிபரப்புகிறது.

வந்தனம், ஆனால் உபகாரமொன்றுமில்லை.

என்ன அனுதாபம், ஒன்றையும் காணோம். இருந்தபோதிலும், அனுதாபம் காட்டியதற்கு வந்தனம். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைக்கெடுக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சூழ்ச்சி செய்துகொண்டிருப்பதாயும், துரோகம் செய்யப்போவ தாயும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்துக்காக இதாலி வருந்துவதாயும், ஆகவே, பிரிடனுக்கு எச்சரிக்கை கொடுப்பதாயும், ஜனவரி 11-ல் இதாலி ஆங்கிலத்தில் ஒலிபரப்பியிருக்கிறது. ஆனால் அதிலொரு விசேஷமுமில்லை. எச்சரிக்கை பிரிடனுக்குக்கொடுக்க வேண்டியதுபோக, ஒலிபரப்பு அமெரிக்காவுக்கு செய்யப்பட்டிருக்கிறது! சாமார்த்தியக்குறைவாயிருக்கலாம் அல்லது இதாலி, வழக்கம்போல், இவ்விதமாகத் துரோகம் செய்யலாம்.

ப்ரமன் நகரத்தைப்பற்றிய உண்மை வெளியாய்விட்டது.

வருஷப் பிறப்பன்று இரவில் ப்ரமன் நகரத்தைக் கோரமாய் பிரிடிஷ் விமானங்கள் தாக்கியது உலகமறிந்த சம்பவம். இந்தியா உள்பட எல்லாதேசங்களுக்கும் மறுநாள், 'நேற்று இரவு வடஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. தொழிற்சாலைகளுக்கு மூன்று இடங்களில் பழுதேற்பட்டது. சிலர் காயம் பட்டு ஐந்து பேர்களிறந்தார்கள்' என்று ஜெர்மனி ஒலிபரப்பி விபத்தைச் சிறிதுபடுத்தி மறைத்துவிட்டது. ஆனால் அடுத்த இரவு, தெரியாத்தனமாக ஜெர்மனியினதிகாரத்துக்குட்பட்ட பாரிஸ் ரேடியோ, 'நேற்றுவந்த பெர்லின் செய்தி சுருக்கமாயிருந்தாலும் மனதை வருத்துகிறது. பெரிய தொழிற்சாலைகளுக்குப்பலமான சேதமேற்பட்டுவிட்டது. இரண்டு தினங்களாக, ப்ரமன் தீப்பட்டெரிகிறது. 600-பேர்கள் சேதம்' என்று ஒலிபரப்பிற்று.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

பிரிடனில் சுகாதார நிலை.

விமான எதிர்ப்புக்குப் பயந்து, பாதுகாப்புக்கான மறைவிடங்களில் வசிப்பதால் பிரிடிஷ் மக்களின் சுகாதாரம் கெட்டுப்போய், யுத்தத்துக்குமுன்னிருந்ததைவிட எட்டுப்பங்கதிகமாக வியாதிகள் பரவிவிட்டதாக இந்துஸ்தானியில் ஜனவரி 8-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது.

சுகாதார இலாகா பிரதம வைத்திய அதிகாரிகொடுத்திருக்கும் கணக்குப்படி 1939-ஐக் காட்டிலும் 1940-ல் ஜுரம் முதலிய வியாதிகள் குறைந்து கப வியாதிமட்டும் சிறிது அதிகமாயிருக்கின்றது. டிஸம்பரிலெடுத்த கணக்குப்படி லண்டனில் 100-க்கு 5-பேர்கள்தான் பொதுப்பாதுகாப்பு நிலயங்களிலும், 100-க்கு 19-பேர்கள் சொந்த மறைவுகளிலுமிருக்கிறார்கள். லண்டனுக்கு வெளிப்புறத்தில் 100-க்கு 8-பேர்கள் பொது மறைவுகளிலும், 100-க்கு 21-பேர்கள் சொந்த மறைவுகளிலுமிருக்கிறார்கள். நெருக்கமான மறைவுகளில் தங்கியிருப்பவர்களுக்குக்கூட தொத்து வியாதிகளொன்றும் கிடையாது.

ஜெர்மன் புரட்சி.

ஸப்ளை டிபார்ட்மெண்டின் பிரதிநிதியாகச் சமீபத்தில் ஸர் வால்டர் லேய்டன் அமெரிக்காவுக்குச் சென்று அங்கு பேசியதை ஜெர்மனி ஜனவரி 10-உ ஒலிபரப்பில் மாற்றி பிரஸ்தாபிக்கிறது. 1940-ம் வருஷம் ஹிட்லருக்கு வெற்றிகரமான வருஷமென்று லேய்டன் சொன்னது உண்மையே. ஆனால் ஜயம் பிரிடன் பக்கம் திரும்பிவிட்டதென்று அவர் சொன்னதை மறைத்து விட்டார்கள். அநேக தேசங்களைப் பிடித்துக்கொண்டதினால் ஜெர்மனிக்கு எஃகு இப்பொழுது அதிகமாய்க் கிடைப்பது உண்மையே. ஆனால் யுத்தத்துக்குவேண்டிய அநேக சாமான்கள் இப்பொழுது பிரிடிஷ் முற்றுகையால் நின்றுவிட்டது மறைக்கப்பட்டிருக்கிறது. பிடித்த தேசங்களிலும் ஜனங்கள் மனம் நொந்திருப்பதால்

அவர்களிடமிருந்து அதிகச்சகாயத்தை எதிர்பார்ப்பதற்கில்லை. யுனைடட் ஸ்டேட்ஸில் 1941-ல் 800-லக்ஷம் டன் எஃகு உற்பத்திசெய்யப்படும். இது மற்ற தேசங்களிலெல்லாம் செய்யப்படும் எஃகுக்கதிகமென்று லேய்டன் சொன்னதை ஒலிபரப்பவில்லை.

இதாலி ஜெர்மனியை ஸ்தோத்திரம் செய்கிறது.

பிரான்ஸும் பிரிட்டனும் சேர்ந்து கொண்டு பெல்ஜியத்தைப் பிடிக்க நினைத்த யோசனையை ஜெர்மனி முன்னதாகத் தெரிந்து கொண்டு பெல்ஜியத்தைப்பிடித்து விட்ட சாமர்த்தியத்தைப்பற்றி இதாலிய ரேடியோ ஜனவரி 9-ல் ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. சில தினங்களுக்கு முன் இதாலிக்குள் ஜெர்மன் விமானங்கள் வந்திருப்பதைப்பற்றிப் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டது. "பிரிடிஷ் சானலில் பிரிடன் எதிர்த்து நிற்கமுடிந்தாலும் மத்திய தரைக்கடலில் இதாலியின் வெற்றிகளால் பிரிடனுக்கு தோல்வி நிச்சயமாய் வந்துவிடுமென்று" 1940-ஆகஸ்டு 14-ல் சொல்லிக் கொண்டதெல்லாம் இப்பொழுது பொய்யாய் விட்டது. நான்கு கண்டங்களிலிருந்தும் திரண்டு வந்திருக்கும் பிரிடிஷ் சைனியத்தையும், உலகத்திலேயே முதலான பிரிடிஷ் கபபற் படையையும் இதாலி இப்பொழுது எதிர்த்து நிற்பதாக டிஸம்பர் 16-ல் இதாலி பிரான்ஸுக்கும் ஒலி பரப்பி யிருக்கிறது.

ஒன்றுபட்ட ஸெண்ட்ஜான் ரெட்கிராஸ் என்ற இரண்டு சங்கங்களின் யுத்த சேவை.

இங்கிலாந்து ஆஸ்பத்திரி சேவை.

நம் நாட்டில் அநேகருக்கு, இந்த இரண்டு சங்கங்களும் இங்கிலாந்தில் எவ்வாறு உழைக்கின்றனரென்று அறிய ஆசையிருக்கலாம். மிகவும் துல்லிய மாயும், ஒழுங்காயும் நடந்தேறி வந்தபோதிலும், இவ்வேலை அதிகவிஸ்தாரமான தாயிருப்பதால், அதை ஒரேவியாசத்தில் அடக்கிச் சொல்வது முடியாது. ஐரோப்பிய தேசங்களில் நேரிட்டிருக்கும் கடும்துயர் நீங்குவதில், பிரிடிஷ் ரெட்கிராஸ் சங்கத்திற்கே பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் இங்கிலாந்து தேசமே ஓர் போர்க்களமாயிருப்பதால் உலகமெங்குமுள்ள நண்பர்கள் எவ்வளவோ பணம் அனுப்புகிறார்கள். அங்கு சென்னை மாகாணத்தி லிருந்தும், சுயேச்சையாய் அனுப்பும் உடுப்பு முதலியவைகள் தவிர, ஒரு லட்சம் ரூபாய் பிளான்டர்ஸிலும், வடபிரான்ஸிலும், தொலைந்து போன வைத்திய சாதனங்களுக்காகவும், ரணசிகிச்சைக் கருவிகளுக்காகவும் அனுப்பப்பட்டது. இன்னும் பல உதவிகள் புரியத்தயாராயிருக்கின்றனர்.

யுத்தம் துடங்கி இரண்டு நாளாகுமுன், அமெரிக்கா ரெட்கிராஸ் சங்கத் தாரிடமிருந்து, 75,000 டாலர்கள் என்னும் 1,95,000 ரூபாய் விலையுள்ள ரண சிகிச்சைக்குறிய பல ஆயுதங்களும், மருந்து சாமான்கள் வாங்கும்படி 25,000

டாலர்களும், அல்லது 65,000 ரூபாய் இனுமாய் அனுப்பினுர்கள். அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டவைகளில் ஓர் விலையேறப்பட்ட ரணசிகிச்சை ஆயுதம் ஒன்றுண்டு. அது, மூளை சம்பந்தமாயுள்ள எவ்வித காயத்தையும் பார்வையிடக் கூடியது. இப்பேர்பட்ட ஆயுதம் இது ஒன்றே உள்ளது. அது அநேக ஆயிரம் பவுன் விலைபெறுமாம். அசைக்க முடியாது என்னும் நிலைமைக்குள்ளிருக்கும், மண்டைகாயம், மார்புகாயம் பட்டவர்களிடம் போய் அவர்களுக்கு குணமுண்டாகும்படி, இரண்டு அரிய வைத்தியச்சாலைகள் செய்யவும், அமெரிக்கரின் நன்கொடை உதவி செய்தது. இன்னும் இடம் விட்டு இடம்பெயர்த்துப் போகக் கூடிய பன்னிரண்டு எக்ஸ் ரே ஆயுதங்களும், ஒட்டி நிறுத்தக்கூடிய ஆறு எக்ஸ்ரே யந்திரங்களும் வாங்கமுடிந்தன. இவைகளின் விலை 25 000 பவுன் அல்லது 3,25,000 ரூபாயாம். ஆயிரக்கணக்கான, ஆஸ்பத்திரியில் காயம் கட்ட உபயோகிக்கும் துணிகளும், நூற்றைம்பது ஆம்புலன்ஸ் கார்களும், வந்தெய்திருக்கின்றனர். அங்கிருந்து ஜூலை மாதத்துக்குள் வந்துள்ள ரெட்கிராஸ் இம்மட்டுமே 1,34,000 பவுன் அல்லது 17,42,000 ரூபாய் ஆகும். அமெரிக்கா ரெட்கிராஸ் தவிர, மற்றும் சங்கங்களிலிருந்தும் 50,000 பவுன்கள், அதாவது, 6,50,000 ரூபாய் இனுமாய் அனுப்பியிருக்கிருர்கள்.

ஒன்றுபட்டுள்ள இந்த இரண்டு சங்கங்களின் தலை ஸ்தானத்தில் ஓர் தேர்ச்சிபெற்ற அங்கபாலிகைகள் நியமனம் ஏற்படுத்தியிருக்கிருர்களாம். அதில் வேண்டியபோது அனுப்பும்படி அநேக அங்கபாலிகைகள், பற்பல ஆஸ்பத்திரிகளிலும், ரெட்கிராஸ் வைத்தியசாலைகளிலும் உழைக்கிருர்கள். உப கருவிகளாய் அநேகம் வைத்தியசாலைகளிருக்கின்றன. அநேகம் இப்பொழுதே காயப்பட்டவர்க்கும், பிரிடிஷ் துருப்பார்க்குமட்டுமல்ல, மற்றும் நேசதேச துருப்புகளிலுள்ள வீரர்கள், பேசும் பாஷைகள் வேருயிருக்கும், ஆதலால் அவர்களுக்குப் புரியுமாறு, அந்தந்த தேசத்தின் டாக்டர்மாரும், நரசுகளும், ஆஸ்பத்திரிகளும், புஸ்தகசாலைகளும், இயற்றி, உதவிபுரிகின்றனர். இந்த யுத்தத்தில் மேலும், பட்டாளத்தார் அல்லாது குடிமக்களே காயப்பட்டு, கஷ்டமடைய நேரிடுகிறது. இவர்களுக்கும், இங்கிலாந்தில், விமான வீச்சுகளால் காயப்பட்டு கவலைக்குள்ளாவோர்க்கும், பரிகாரம் செய்யவேண்டும். 25,000 படுக்கைகள் தயாரிப்பது, இவர்கள் பொறுப்பென, சுகாதார இலாகா மந்திரியார், சொல்லியிருக்கின்றனர். இது மகா பொறுப்பான வேலை. என்ருலும் ஆகஸ்ட் இறுதியில் பாதி படுக்கைகள் தயாராகி விட்டது. ஆஸ்பத்திரிகளாகவும், பலவீனர்கள் விடுதியாகவும், அலங்கரித்து தம் சொந்த பங்களாக்களை அநேகர் இச்சங்க உழைப்பாளிகளிடம் மனப்பூர்வமாய் விட்டுவிட்டனராம். இன்னமும் 10,000 படுக்கைகள் தேவையாயிருக்கின்றனவாம். பெரியதோர் பொறுப்பல்லவா, என்ருலும், சக்தியிழந்தவரை தேத்தும்படியாய் பிரதிக்ஞை செய்துள்ள ரெட்கிராஸ் சங்கம் ஊக்கம் விடாது உழைக்கும். அப்படி உழைக்கப் பெற்றவர்களுக்கு அது ஓர் சிலாக்யமென்றுணர்ந்து அநேகர் கைகொடுப்பாரென்று எதிர் பார்க்கிருேம். உதவி வேண்டும், அதுவும், அதிசீக்கிரமாய் வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

இதில் வெளியிட்டிருக்கும் விமானப்போர் சம்பந்தமான விசேஷப்பகுதியைப் படித்துப்பாருங்கள்.

இந்த யுத்தம் நாளுக்குநாள் விமானப் போராக மாறிக்கொண்டு வருகிறது. பிரிடன், ஜெர்மனி, வட சமுத்திரம், மத்தியதரைக் கடல் இவைகளிலெல்லாம் இவ்விதமான எதிர்ப்புத்தான். தினசரிப் பத்திரிகையில் வெவ்வேறு இடங்களில் வெளியாகும் விமானப் போரின் செய்திகளை ஒன்றுசேர்த்து எழுதுவது கடினம். ஆகையால் இந்தப் பகுதியில் தற்கால யுத்த நிலையைப்பற்றி ஒன்றுசேர்த்து விளக்கியிருக்கும் வியாசங்களின் ஒரு கோர்வையை பிரசுரம் செய்திருக்கிறது.

1940-ம் வருஷத்திய ஆகாயப்போரின் ஆராய்ச்சி.
யுத்த முதற்பாகத்தின் முக்கிய குறைங்கங்கள்.
ஏராளமான ஆகாய விமானங்கள் தயாரிப்பின் அவசியம்.

ஆகாயப்போர் என்பதைப்பற்றி "டைம்ஸ்" பத்திரிகாசிரியர் எழுதியது :—

ஆகாய மந்திரியால் விடுத்த சென்ற வருஷத்திய ஆகாயப்போரின் ஆராய்ச்சியில் நமக்கு கடந்த 12 மாதத்தில் ஏற்பட்ட 1,050 விமானங்களும் 650 பைலட்களும் நஷ்டத்திற்கு எதிராக ஜெர்மானியர்களுக்கு 3,500-க்கு மேற்கொண்ட விமானங்கள் நஷ்டமானதாக கூறியுள்ளார். இந்த எண்ணிக்கை முடிவானதல்ல. இதில் நேசநாடுகளால் நார்வேயில் ஏற்படுத்தப்பட்ட சேதத்தையோ, பிரான்ஸில் பிரஞ்சுக்காரர்களால் உடன்படிக்கைக்கு முன் ஏற்படுத்தப்பட்ட நஷ்டத்தையோ, அல்லது எதிரிகளின் எதிர்ப்பிலிருந்து நம்மைக் காக்க நம்முடைய வெடிகுண்டு விமானங்களால் ஏற்பட்ட சேதத்தையோ அல்லது விமானங்களுக்கு தற்செயலாய் ஏற்பட்ட விபத்தினால் உண்டான நஷ்டத்தையோ சேர்க்கப்படவில்லை. ராஜீய ஆகாய விமானிகளின் வீரச் செய்கை முழுவதும் எடுத்துச்சொல்ல வேண்டுமானால்—இவர்களால் இதாலியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட 550-க்கு மேற்கொண்ட விமானங்களின் நாசமும் இது சென்ற 8 மாதத்திற்குள் ஏற்பட்ட விவரமும் மேலே சொல்லப்பட்ட விஷயத்தோடு பூர்த்திக்காக சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த ஆகாயப் போரின் முதல்பாகம் நமக்குச் சாதகமாகவே முடிவடைந்திருக்கிறதென்று நாம் நிச்சயமாக சொல்ல அருகர்களாகயிருக்கிறோம். ஆனால் இதிலிருந்து நமக்கு வெற்றி நிச்சயமென்று சொல்வது யுக்த காலத்திற்கு முந்தியதாகும். நாம் பூகோள பிரதிகூலங்களை வெல்லவேண்டியிருக்கிறது.

ஜெர்மனி கடாசியாக தன்னுடைய ஆகாயப் படையின் பலத்தை நம்முடைய பலத்தோடு விரிவாக ஒப்பிட்டது இப்பொழுது இரண்டு மாதத்திற்கு மேலாகிறது. இன்று இரவு குண்டு வீச்சின் செய்தியிலிருந்து "லூட்வாபி" போன்ற அவ்வளவு பெரிய படையின் உக்கிரஹமான தாக்குதலுக்கு சேதம் மிகவும் குறைவு ; ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். குறைவுபடாத ஆக்கிரஹத்தோடு போருக்கழைப்பு எந்த சமயத்திலும் ஏற்படலாம்.

ஆகாயப்போரின் இந்த இரண்டாவது பாகத்தையும் நாம் முதல் பாகத்தை ஜயித்த சாதனத்தினாலேயே ஜயிக்கவேண்டும்.

(1) முதல் சாதனம் நம்முடைய ஆகாய விமானங்கள் நிதர்சனமாக ஸ்ரேஷ்டமானது. இந்த உயர்வின் தலைமையை நாம் கைவிடாமல் காப்பாற்ற வேண்டும்.

(2) இரண்டாவது சாதனம் செம்மையான தேர்ச்சியினால் ஏற்பட்ட வெற்றிகரமான யுத்த சாமர்த்தியமேயாகும். இது முக்கியமாக பகலில் குறுக்கிடுவதுதான். பகல் வெற்றிகளை கையாடி வருவதுடன் அவைகளை இரவுக்குப் பாவச் செய்வதின் அவசியத்தை நாம் விஸ்தரிக்க வேண்டியதில்லை.

(3) மூன்ருவது சாதனம் ஆகாய விமானங்களை மேன்மேலும் அதிகமாக உற்பத்தி செய்வதும், அடைவதும்.

(4) நான்காவது சாதனம் நம்முடைய வெடிகுண்டு விமானங்களை எதிரிகளின் முக்கியமான லக்ஷியங்களில் விடாமல் பிரயோகிப்பது.

எல்லா அதிகாரிகளும் இன்னும் ஏராளமான ஆகாய விமானங்களின்— அதிலும் முக்கியமாக தாக்குதலை அதிகரிக்கச் சாதகமான வெடிகுண்டு விமானங் களின்—தயாரிப்பின் அவசியத்தில் ஒத்திருக்கிருர்கள். வரப்போகும் மாதங்களில் இந்தத் தேவையை மேற்கொண்டே பூர்த்திசெய்து வைப்பதில் ஊக்கப்படுவது தான் நாம் நம்பிக்கையோடு கைக்கொண்ட கடமை.

அமெரிக்காவில் விமானங்கள் கட்டும் தொழிற்சாலைகள் விசாலப்படுத்தப்படுகின்றன.

ஏற்கனவே போட்டிருக்கும் திட்டப்படி விமானங்கள் அதிகமாகக் கட்டப்படும்.

மான்செஸ்டர் கார்டியனுடைய ஆகாய நிருபர் எழுதுவதாவது :—

யுனைடெட் ஸ்டேட்ஸ் தொழிற்சாலைகள் புதுவிமானங்களைத் தாமதித்துக் கட்டுவதாகவும், ஏற்கனவே போட்ட திட்டப்படி வேலை நடக்கவில்லையென்றும் காங்கிரஸுக்குச் செய்த பிரஸங்கத்தில் பிரஸிடென்ட் ரூஸ்வெல்ட் எடுத்துச் சொன்னர். இவர் இவ்விதம் பேசியதிலிருந்து அமெரிக்காவில் விமானம் கட்டும் கைத்தொழிலைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பிரிடிஷ் கோஷ்டியொன்று கொள்முதல்களைச் செய்ய அமெரிக்காவுக்கு வந்திருப்பது யாவரும் அறிந்ததுதான். இவர்கள் கொடுக்கும் ஆர்டர்கள்மேல் விமானங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. மாதத்துக்குக் கொடுபடவேண்டிய விமானங்களுக்குக் கணக்குண்டு. இவைகள் திட்டப்படி கொடுபடுகின்றனவா வென்பதைப்பற்றிப் பலவிதமான வதந்திகள் கிளம்பியிருக்கின்றன. ஆனல், அவைகள் சரியான செய்திகளல்ல. எண்ணெய் ஏற்றிச் செல்லும் விமானங்கள், போர்செய்யும் விமானங்கள், வெடிகுண்டு விமானங்கள், பறக்கும் கப்பல்கள், என்று பல வகைப்பட்ட விமானங்கள் செய்யப்படுகின்றன. இவைகளை யெல்லாம் ஏராளமாய்க் கட்ட அமெரிக்க கம்பெனிகள் பிரமாதமாய்த் தங்கள் தொழிற்சாலைகளை மாற்றி யமைத்துக்கொண்டிருக்கின்றன. 312,750,000 பவுன் விலையுள்ள 14,394 விமானங்களை விரைவில் கட்ட மூன்றுமாதங்களுக்கு முன்னே 21 முக்கியமான கம்பெனிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவ்வளவு விமானங்களையும் கட்டிவிட ஒவ்வொரு தொழிற்சாலையும் தன்னுடைய சாலையை ஏற்கனவே விசாலப்படுத்தியிருக்கிறது, விசாலப்படுத்திக்கொண்டும் இருக்கிறது. பி-17-ஸி வகுப்புப் பறக்கும் கோட்டை வெடிகுண்டு விமானங்களை

போயங்க் கம்பெனியார் கட்டுகிறார்கள். இவர்களுடைய தொழிற்சாலை 1939-ம் வருஷம் முதற்கொண்டு விசாலப்படுத்தப்பட்டு, முன்னிருந்ததைக் காட்டிலும் 2½-மடங்கு பெரிதாய்விட்டது. விசாலப்படுத்தும் வேலைகள் இன்னும் நாலு மாதங்களில் முடிந்துவிடும். முடிந்தவுடன் 1,600,000 சதுர அடி விஸ்தீரண முள்ளதாய்விடும். இப்பொழுது இரண்டு நாளைக்கொரு பி-17-ஸி விமானம் கட்டப்படுகிறது ; இதே போயங்க் கம்பெனியார் 3-மணி நேரத்துக்கொரு ஸ்டீர் மன் என்ற பழக்கிக் கொடுக்கும் விமானத்தைக் கட்டுகிறார்கள். வேறு சில கம்பெனிகள் இவ்வளவு திருப்திகரமாய் வேலை செய்வதாகச் சொல்லமுடியாது. அவைகள் மாதத்துக்கு 800-லிருந்து 1,000 விமானங்கள் போல் கட்டுகின்றன. ஆனால் நிகுதியில்லை. சில தினுஸு விமானங்களைக் கட்டுவதற்கு வேண்டிய இஞ்சின்கள் செய்வதைப்பற்றி சில கஷ்டங்கள் இதுவரையிலிருந்தன. இதனால் விமானங்கள் கட்டும் கம்பெனிகளுக்குச் சங்கடங்களிருந்தன ; இப்பொழுது அவைகளெல்லாம் நிவர்த்தியாய்விட்டன. விமானக் கைத்தொழில் இப்பொழுது பலமாய் முன்னேறுகிறது. இனி நிச்சயமாக ஏராளமான விமானங்கள் சீக்கிரத்தில் கிடைக்கும்.

பாம்பர்களின் போர்.

சேதமும் தற்காப்பும்.

சென்ற எட்டு மாத காலங்களாக, ஜெர்மனியிலும் ஜெர்மானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலும் உள்ள ராணுவ ஸ்தானங்களேயும் தொழிற்சாலைகளேயும் இடைவிடாது பிரிடிஷ் பாம்பர்கள் தாக்கி வந்திருக்கின்றன. சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஜெர்மனியின் ஆகாய விமானங்கள் புதிதாய் ஜயித்த ஸ்தானங்களிலிருந்து திடீரென்று இடைவிடாது பிரிடன் பேரில் குண்டுகள் போட்டன. ஜெர்மனிக்கு ஆகாய விமானங்கள், ஏராளமாக நஷ்டப்பட்டுப் போயினும், இன்னும் ஆங்கிலேயர்களேக்காட்டிலும் மிகுதியாகத்தான் இருக்கின்றன. நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன் என்னும் பத்திரிகை சென்ற ஆகஸ்டு மீ 17உ எழுதியது இப்பவும் உண்மைதான். அதாவது, "நாஸி விமானங்கள் ஏராளமாகப் பறந்து வந்து பிரிடனேத்தாக்கினும், அவைகளால் இங்கிலாந்தை முறிய அடிக்க இயலவில்லே". இது இப்படியிருக்க, ஏன் ஆங்கிலேய விமானப்படையின் சூழ்ச்சியும் முயற்சியும் படிப்படியாக பலிதமாக நடந்தேறி வருகிறது?

ஜெர்மன் பாம்பர்கள்.

1. இங்கிலாந்தின் பேரில் 37,000 அடி உயரத்தில் ஜெர்மன் விமானங்கள் பறக்கின்றன; அதாவது ஹிமயமலேயில் உள்ள உன்னதமான சிகரம் எவரஸ்ட்டைக் காட்டிலும் 8,000 அடி அதிக உயரம். ஆங்கிலேயர்களின் விமானஞ் சுடும் பீரங்கிகளிலிருந்து தப்பிக்கவேண்டி, வெகு உயரத்தில் பறந்து செல்லுகின்றன. அந்த விமானிகளும் தங்களுடைய தலேவர் குறித்துக்கொடுத்தபடி கொக்குக்கு ஒரே மதி என்று குறித்த வேகத்துடனும், குறித்த திக்கிலும் கண்மூடித்தனமாகக் கடந்து செல்வார்கள்.

பிரிடிஷ் பாம்பர்கள்.

1. சென்ற சரத்ருதுவில் ஜெர்மானியர்களுக்குச் சொந்தமான டார்ட்மண்ட்-எம்ஸ் கால்வாயை பிரிடிஷ் விமானங்கள் தாக்கினபொழுது 1,000 அடி உயரத்தில் இருந்துதான் அவைகள் வெடிகுண்டுகளேப் போட்டன. சாதாரணமாக 2,000 அடி உயரத்திலிருந்தே பிரிடிஷ் விமானங்கள் வெடிகுண்டுகள்போடும். விமானிகள் ஆகாயயாத்ரை புறப்படுமுன், தாங்கள் குண்டுவீசவேண்டிய ஜாகாக்களின் ஸர்வ அடையாளங்களேயும் தெரிந்துகொண்டு செல்வார்கள். பிரிடிஷ் விமானங்கள் மிகவும் கவனத்துடனும் அதி விமர்சையாகவும் தயார் செய்யப்பட்டவை. விமானிகளும் மிகவும் ஸாமர்த்தியசாலிகள்.

2. ஜெர்மன் ஆகாய விமானிகள் பிரிடிஷ் விமானிகளைக்காட்டிலும் பயிற்சிக் குறைவுள்ளவர்கள். பெரும்பாலும் தரைப் படையுடன் ஒத்தாசையாக உபயோகப் படுத்தவேண்டி ஜெர்மன் ஆகாயவிமானப் படை அமைக்கப்பட்டது.

3. ஜெர்மானியரின் எதிர்ப்பு அடிக்க முயற்சி செய்வதும், அடித்துவிட்டு திரும்பி ஓடுவதுமான விளையாட்டு. *துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் பகலில் தாக்கி, இங்கிலாந்தின்மேல் படையெடுப்புப் பயன்படாத பொழுது அவர்கள் பகலில் லண்டன்மீது ஏராளமான விமானங்களைக்கொண்டு குண்டு வீச ஆரம்பித்தார்கள். அதுவும் நிஷ்பலமாக ஆனவுடன் அவர்களுடைய யுத்த தந்திரத்தை மாற்றி இரவில் லண்டனையும் மற்ற பெரிய நகரங்களையும் கண் மூடித்தனமாய்த் தாக்கி பொது ஜனங்களின் மனோதைரியத்தைத்தளர்த்தவும் அந்தத் தேசங்களிலுள்ள யுத்த லக்ஷியங்களை அகஸ்மாத்தாகச் சேதப்படுத்தவும் முயன்றார்கள்.*

2. ஆங்கிலேய விமானிகள் யுத்த ஆரம்பத்தில் வெகுகாலம் துண்டு பிரசாரப் பத்திரிகைகள் போடுவதிலும், தூது செல்வதிலும் மிகுந்த அநுபவம் பெற்று நீண்ட பயிற்சி பெற்றவர்கள்.

3. பிரிடிஷ் விமானங்களின் எதிர்ப்பு நன்றாய் ஆலோசனை செய்து அதிலிருந்து கொஞ்சம்கூட மாறாதபடி நடத்தப்படுகிறது. அதாவது, 600 மைல் வரையிலிருக்கும் *பிரதேசங்களிலுள்ள முக்கியமான ராணுவ ஸ்தலங்களைத் தனிப்பட்ட பாம்பர்களால் தாக்குவதுதான். சத்துருக்களுடைய புதிதாகப் போடப்பட்ட ரயில் மார்க்கங்கள் பிரிடிஷ் விமானங்களால் தகர்த்தப் பட்ட பொழுது எதிரிகள் கால்வாய் வழியாக சாமான்களைக் கொண்டுபோக நேர்ந்தது. கால்வாய் வழியில் முக்கியமான இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. ஹாம் என்னும் இடத்திலிருந்த ராணுவ ஸ்தலத்துக்கு ஏற்பட்ட சேதத்தை ஒருவாறு திருத்திய பொழுது, மறுபடியும் அது தாக்கப் பட்டது. ஹாம்பர்க்கிலுள்ள கப்பல் கட்டும் நிலையம் உபயோகமற்றதாக செய்யப்பட்டபொழுது அதை மறுபடியும் தாக்கவில்லை. ரகசியமாகக் கட்டப் பட்டதும் நன்றாய்ப் பாதுகாக்கப் பட்டதுமான ஒரு வெடி மருந்து சாலையை வேலைதுவக்கின மூன்று மணிக்கெல்லாம், பிரிடிஷ் விமானங்கள் குண்டுகளால் தாக்கின.*

4. எட்டு மாதத்திய குண்டு வீச்சுகளால் ஏற்பட்ட நஷ்டத்தில் ஒரு ஆறு தடவைக்குமேல் போகாமல் ராணுவஸ்தலங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சேதம் ஏற்பட்டதென்று ஜெர்மானியர் ஒப்புக் கொள்ளுகிருர்கள். *சென்ற கோடை காலத்தில் அமெரிக்கா தேசத்துவாரன் இர்விங் என்பவர் ஜெர்மனியில் இருக்கும் நடுநிலைவகிக்கும் பத்திரிகை நிருபர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் வரம்பைப்பற்றி எழுதி யிருக்கிருர். "ஜெர்மானியர் இஷ்டப்படி நடப்பவர்கள் வெகுமதியடைவார்கள். அப்படிச் செய்யாதவர்கள் நிச்சயமாய்க் கண்டிக் கப்படுவார்கள்....................நாங்கள் எங்கள் பிரசுரங்களை மூன்று பரிசோதனை இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருந்தது." அது முதல் நாஸிகள் நடுநிலைபத்திரிகை நிருபர்களுக்கு ராணுவ ஸ்தலங்கள் அல்லது தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றி எழுதக்கூடாதென்று கட்டளை இட்டிருக்கிருர்கள்.*

அடிக்கடி எதிர்ப்பு லக்ஷியங்களை மாற்றி விமான எதிர்ப்புக்களை பயன்படச் செய்திருக்கும் பிரிடனுடைய குண்டுவீசும் விமானங்களைக் கவனியுங்கள்.

4. நடுநிலைவகிக்கும் சாக்ஷிகள் சொல்லுவதாவது "பிரிடிஷாரின் அறிக்கைகள் கூடியவரையில் உள்ளதை உள்ளபடி வெளியிடுகின்றன. (நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் ஜேம்ஸ் மாக்டனுல்ட் என்பவர் இதை வெளியிட்டிருக்கிருர்). உண்மையாக பிரிடிஷ் அறிக்கைகள் கூடியவரையில் சரியாக சம்பவங்களை வெளியிடுவதோடு பிரிடிஷார் ஜெர்மானியரைக்காட்டிலும் பெறும் அதிக லாபத்தைக் குறைத்தே சொல்லுகிருர்கள். (W. R. நிக்கர்பாக்கர், ஹெர்ஸ்ட் அச்சு நிலையம்). *பிரிடிஷ் அறிக்கைகள் சேதங்கள் ஏற்பட்ட உடன்காலத்திலேயே அவைகளில் எதிரிக்குச் சாதகமாக யிருக்கக்கூடியவைகளை மட்டும் தள்ளி மற்றவைகளை வெளியிடுகிருர்கள். 'பிரிடனுடைய தொழில் நிலையங்களில் நூற்றுக்கு ஒன்று வீதத்திற்குக் குறைவாகத்தான் ஜெர்மன் குண்டு வீச்சால் சேதமேற்பட்டிருக்கிறதென்று ஒரு நடுநிலை நிருபர் எழுதினுர்.*

ஜெர்மன் விமான எதிர்ப்புகள் எப்படி உபயோகமற்றவை என்பதற்கு, மேற்குப் பாலைவனத்திலுள்ள போர்முனைக்கு அனுப்பப்படும் யுத்த முஸ்தீபுகளைக் கவனியுங்கள்.

ஆங்கிலேய விமானப்படையெடுப்பின் நேர்மை. படையெடுப்பின் கால அளவையும், எதிர்க்கப்படும் ஸ்தானங்களையும் நிர்ணயிக்கும் முறைகள்.

[Wing Commander, எல். வி. ப்ரேஸரால் எழுதப்பட்டது.]

ஜெர்மானியர்கள், ஆகாயச்சண்டையில் ஒரு புது ஏற்பாடு துவக்கி இருப்பதாக சொல்லிக்கொள்ளுகிருர்கள். பிரிடிஷ் நகரங்கள் பேரில், யாதொரு வ்யவஸ்தை அன்னியில் கண்டா கண்டபடி பாம்கள் போடுகிறது என்பதே. ஆனல் அந்த முறையை ஆங்கிலேயர்கள் அனுஷ்டிக்கவில்லை. ஆகாய விமானச்சண்டையைத் தழுவின சாஸ்திர முறைகளைக் கையாடுவதிலிருந்து மாறுவதாக ஆங்கிலேயர்களின் நோக்கமில்லை.

ஆங்கிலேய விமானங்கள் ஜெர்மன் விமானங்களைக்காட்டிலும் அவைகளுடைய காரியங்களை ஸபலமாகச் செய்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, பிரிடிஷ் பாம்பர்கள் குறிதப்பாமல் பாம்கள் போடுகின்றன. இரண்டு, ஏற்கனவே தீர்க்காலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்ட பிளான் பிரகாரம் வேலை செய்கின்றன.

சென்ற குளிர் காலத்தில் ஆங்கிலேயே விமானங்கள் பலதடவை ஜெர்மன் தேசத்தின் பேரில் பறந்து துப்பறிந்து வந்திருக்கின்றன. சத்ரு தேசத்தின் ரஹஸ்ய அமைப்பை நன்ருய் அறிந்திருக்கின்றன. எந்த விதமான காலநிலையிலும் படையெடுக்கப் பயிற்சி பெற்றிருக்கிருர்கள். ஆங்கிலேய விமானங்களில் அமைக்கப்பட்டிருக்கும் யந்திரங்கள் நிகரற்ற பிரிடிஷ் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டவை.

ஜெர்மன் தேசத்தின் பேரில் முதல் முதலாக பாம்கள் போட துவக்கு முன்னமேயே, ஆங்கிலேய யுத்த மந்திரிகள் என்னென்ன காலங்களில் எந்த எந்த விமானங்கள் எவ்விதம் பாம் செய்யவேண்டுமென்கிற விதமெல்லாம் பிளான்கள் போட்டு, அவைகளை அனுசரித்தே ஜெர்மனியின் பேரில் படை எடுத்து வருகிருர்கள்.

ஜெர்மானியர்கள் என்ன செய்தாலும் சரி, மேற்கண்ட முறையில் இருந்து, ஆங்கிலேயர்கள், மாறப்போவதில்லை. ஆங்கிலேய யுத்த மந்திரிகளின் யுத்த தந்திரமும், யுத்த முறையும் மிகவும் சாதகத்தைக்கொடுத்துக்கொண்டிருப்பதில், அவைகளைக் கைவிட்டு, ஜெர்மானியர்களின் அவ்யவஸ்தையைக் கையாளுவது தப்பு என்று நன்கறிவார்கள்.

ஆங்கிலேயர்கள் பாம் போடும் முறை இவ்வளவுதான்; சத்ருவின் முக்கியமான யுத்த ஸம்பாரங்கள் இருக்கும் இடங்களின் பேரில், சரியான காலத்தில் சரியான மிகவும் சக்திவாய்ந்த பாம்களைப்போடுவதே. ஸ்தூலமாக பிளானின் நேர்மை இதுதான்.

ஆனல் ஒவ்வொரு அம்சத்தையும் கவனிக்கும்கால், அப்பொழுது தான் பிளான் போடுவதின் சிரமம் விளங்கும். முக்கியமாக சத்துருதேசத்து நடவடிக்கைகளின் உண்மையான தகவல் அறிந்துதான் பிளான் போடவேண்டும். தொழிற்சாலை இலாகா, பொருளாதார இலாகா நிபுணர்களும், விக்ஞான சாஸ்திரிகளும் அடிக்கடி கலந்து கொள்ளவேண்டும்.

கொக்குக்கு ஒன்றே மதி என்ற ஆகாய விமானிகள் செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஸமயோசிதம்போல், தங்களுடைய பிரயாணத்தை மாற்றி, சத்துருவை எதிர்க்க அவசியம் ஏற்பட்டாலும், தருணம் வாய்த்தாலும், அதைக் கைவிடாது உபயோகித்துக்கொள்ளவும், இவ்விதம் திடீரென்று ஏற்பட்ட காரியம் முடிந்தவுடன், மறுபடியும் குறிப்பிட்ட காரியத்தை முடித்துவிட வேண்டியது.

உதாரணமாக, சத்துருவின் கப்பல்கள் நமக்கு அபாயம் உண்டாக்கும் தருவாயில் இருந்தால், அவைகளைத் தாக்கவேண்டியது அவசியம். அல்லது, இங்கிலாந்தின் பேரில் படையெடுக்க ஆர்ப்பாடங்கள் நடப்பதாகத் தெரிய வந்தால், அம்முயற்சிகளை முன்னேறவிடாமல் முறியடிக்கவேண்டியது. இவை முடிந்ததும், ஜெர்மனியின் மர்மஸ்தானங்களின்பேரில் பாம்கள் போடும் தொழிலை நடத்த ஆரம்பிக்கவேண்டியது. மற்றும் பல விஷயங்களும் கவனிக்கும்படி ஏற்படலாம். ஏதேனும் ஒரு தொழிற்சாலையைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தால் அதின்பேரில் அடிக்கடி சாதரணமாக பாம் போட்டுவர வேண்டும். உதாரணமாக ஹாம்பர்க்கைக் கவனியுங்கள். புதுப்பிக்க, புதுப்பிக்க அதை ஆகாய விமானிகள் கவனித்து நாசம்செய்து விடவேண்டும். மேலும், சத்துரு தேசத்திலுள்ள தொழிற்சாலைகளின் இருப்பிடம், அவைகளின் உபயோகம், அவைகளை நாசம் செய்வதால் ஏற்படக்கூடிய லாபம், இதேமாதிரி, ராணுவஸ்தலங்கள், இத்தகையான விஷயங்கள் அடிக்கடி கவனித்தறிய வேண்டும்.

இவைகளை நோக்குங்கால், ஏராளமான பல விஷயங்கள் அறிந்த நிபுணர்களை அடிக்கடி ஆலோசித்து அடிக்கடி ஆகாய விமானிகளுக்கு அறிவித்துக்கொண்டு வரவேண்டும்.

பொருளாதார மந்திரி இலாகா, ஜெர்மானியர்களுடைய பொருளாதார நிலைமையையும் அதனால் ஏற்படும் நெருக்கடியையும் அறிந்து தினந்தோறும் ஆகாய விமான இலாகாவுக்கு உதவிசெய்து வருகிறது. புகைப்படம் எடுப்போர்கள், விமானங்களில் சென்று சத்துரு தேசத்தில் எந்த இடத்தில் எந்த சாலை ஸ்தாபிக்கிறார்கள், எந்தக் கப்பல் புதிதாகச் செய்கிறார்கள், அல்லது ஏற்கனவே பாம்களால்த் தாக்கப்பட்ட ராணுவ மர்மஸ்தானங்கள் என்ன நிலைமையில் இருக்கின்றன, இவைபோல் ஏராளமான தகவல்கள் அடிக்கடி சேகரித்து உதவி புரிகிறார்கள். இத்துடன், ரஹஸ்யமாய் சத்ரு தேசத்தில் நடக்கும் ஸம்பவங்களைக் கவனித்துவரும் உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் நடக்கவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்துக்கொடுப்பார்கள்.

இவ்விதமாக, ஆழ்ந்த தீர்க்காலாசோனையுடனும், தகுந்த நிபுணர்களுடைய ஒக்குமத்தின்பேரிலும், தயாரித்த ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு ஆகாய விமானிகள் செய்துவரும் மிகவும் அற்புதமான செயல்களையும், அவைகளின் வெற்றியையும் நாம் நன்கறிந்துவருகிறோம்.

ஜெர்மன் தேசத்திலுள்ள பெட்ரோல் டெப்போக்களை ஆங்கிலேய ஆகாய விமானிகள் இடைவிடாது தாக்கி, கடைசியாக பெட்ரோல் ஸப்ளை மிகவும் குறைந்து போகும்படி செய்துவிட்டார்கள். பெட்ரோல் இந்நவீன யுத்தத்தில் ஒரு முக்கியமான யுத்த ஸாதனம் என்பது தெரிந்த விஷயம். ஏற்கனவே யுத்தம் துவக்குமுன் ஜெர்மனியிலிருந்த பெட்ரோல் ஸ்தாபனங்களையும், ஜெர்மானியர்களால், தோற்கடிக்கப்பட்ட தேசங்களிலுள்ள பெட்ரோல் டெப்போக்களையும், ஜெர்மனியிலேயே பெட்ரோல் உண்டுபண்ணும் சாலைகளையும் ஆங்கிலேய ஆகாய விமானிகள் ஒரே பிடிவாதமாய்த் தாக்கி அவைகள்மீது பாம்கள் வீழ்த்தி அவைகளை முற்றிலும் நாசம் செய்து விட்டார்கள்.

ஆகையால் இந்த நஷ்டத்தை ஈடு செய்ய ஜெர்மனி ருமேனியாவில் இருந்து பெட்ரோல் இறக்குமதி செய்ய எத்தனித்தது. ஆங்கிலேய ஆகாய விமானிகள் விழித்த வண்ணமாய் இருந்து, ருமேனியாவில் இருந்து ஜெர்மனிக்குள் வரும் போக்குவரத்து ஸாதனங்களை நிரவிசாரித்துக் கொண்டார்கள். ரயில் பாதைகள், பாலங்கள், மற்றும் சாமான்கள் ஏராளமாகச் சேகரித்து வைக்கும் இடங்கள் இவைகளின் மீதும் இடைவிடாது பாம்கள் போட்டு போக்குவரத்து ஸாதனங்களின் நேர்மையையும் நாசம் செய்துவிட்டார்கள்.

ஜெர்மனியில் தொழிற்சாலைகள் நிறுத்தப்பட்டதாகவும், ரயில்வே ஸ்டேஷன்களில் சேமிக்கப்பட்டுள்ள உணவுப்பொருள்கள் அழுகிப் போவதாகவும், ஸாதாரணமான பிரயாணங்களின் காலவரை மிகவும் அதிகரித்து விட்டதாகவும் ஜெர்மனியிலிருந்து தகவல்கள் வந்துகொண்டேயிருப்பதைக் கவனிக்க ஆங்கிலேய ஆகாய விமானிகள் ஸாமர்த்தியம் நன்கு வெளியாகிறது.

ரயில் வண்டிகளும், ரயில் பாதைகளும் க்ஷீணித்துவர, உள்நாட்டிலுள்ள கால்வாய்களை ஜாஸ்தியாக உபயோகிக்க ஜெர்மானியர்கள் ஆரம்பித்தார்கள். அத்தகையான கால்வாய்களையும் ரைன் முதலிய நதிகளையும் அவைகளில் செல்லும் சிறிய கப்பல்களையும் ஆங்கிலேய ஆகாய விமானிகள் கவனித்து, சரியான நேரம் பார்த்து மிகவும் முக்கியமான டியூயிஸ் பர்க் ருரோர்ட் என்னும் துறைமுகத்தில் பாம்கள் போட்டு அதையும் நாசம் செய்து விட்டார்கள்.

ராணுவ ஸ்தானங்களின்மீதுதான் குண்டுகள் போடுவது நியாயமாய் இருக்க, ஜெர்மானியர்கள் நகரங்களில் உள்ள சாதாரண ஜனங்கள் வசிக்கும் வீடுகளின் மீது பாம்கள் போடுவதற்குக் காரணம் என்ன? அந்த ஜனங்களின் மனதை ஒடித்து, தைர்யத்தைக் குறைத்து அதன் மூலம் யுத்தத்தில் அவர்களுக்குள்ள உத்சாகத்தை நாசம் செய்யவேண்டும் என்பதுதான். ஆனால், நடப்பென்ன. இத்தகையான முறைமீறின நடத்தையானது, ஜனங்களுக்குள்ள உறுதியை விருத்திசெய்து, அதை மிகவும் திடமாக ஆக்கி விட்டது. இப்படிக்கிருக்க, ஜெர்மனியில் உள்ள மர்ம-ஸ்தாபனங்களின்மீது பாம்கள் போட்டு அவைகளை நாசம் செய்ததிலிருந்து ஜெர்மானியர்களுடைய தைரியமும், உத்ஸாகமும்தான் குறைந்துவிட்டன.

ஜெர்மானியர்களுடைய எண்ணை உற்பத்தி செய்யும் சாலைகளும், எண்ணைக் கிடங்குகளும் நாசம் செய்யப்பட்டதானது, அவர்களுடைய யுத்த பலத்தைக் குறைத்ததுமல்லாமல், தினந்தோறும், சாதாரண வாழ்க்கைக்கே பெரிய பங்கம் ஏற்படுத்திவிட்டது. இயற்கையான பிழைப்பிற்கே கேடு ஏற்பட்டுவிட்டது.

இம்மாதிரி ஆங்கிலேய ஆகாய விமானிகள் செய்துவரும் சூழ்ச்சியானது இறுதியில் ஜெர்மன் தேசத்தார்களுக்கு யுத்தத்தில் உள்ள உணர்ச்சியை பங்கப் படுத்தி, இச்சண்டையை மேல்நடத்துவதில் ஊக்கமில்லாதவர்களாகச் செய்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை. நிச்சயம் அவ்வண்ணமே முடியும்.

மாரிகாலத்தில் உள்ள நீண்ட இரவுகள் ஆங்கிலேய ஆகாய விமானிகள் தங்களுடைய பிளானைத்தீர நிறைவேற்றத்தகுந்த அவகாசம் கொடுத்தன.

இரவுகாலம் குறைந்து, பகல்காலம் ஜாஸ்தியாகும் தருவாயில், ஆகாய விமானங்கள் மறுபடியும் தங்கள் கடமையைச்செய்ய ஆரம்பிக்கும். இதுவரை பிரிடிஷ் பாம்பர்கள் சத்துருவுக்கு உணவுப்பொருள்கள் வகையறு கிடைக்காமல் இருக்க வேண்டி, அவைகளை ஏற்றிச்செல்லும் கப்பல்களையும், இதர வண்டிகளையும் தாக்கி, அவைகளை நாசம் செய்தன. மேலும் பொருள்கள் சேகரித்து வைத்திருக்கும் ஸ்தானங்களையும் தாக்கிவந்தன.

வரும் வஸந்தகாலத்தில் புதிதாக ஜெர்மனியின்பேரில் படையெடுத்து அவர்களைத் தோற்கடிக்க ஆரம்பிக்கப்போகிறார்கள். இதுகால் ஜெர்மானியர்கள் ஆங்கிலேயர்கள்பேரில் படையெடுத்து வந்ததாகப்பெயர் பண்ணிவந்ததுபோக, இனிமேல் தற்காப்பு செய்வதில் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

ஆங்கிலேய விமானிகளின் நோக்கம் என்ன. கடைசியாக ஜெர்மானியர்கள் தேசத்தின்பேரில் ஆகாய ஆதிக்கம்பெற்று, ஜெர்மானியர்களை முறியடித்து, இந்த யுத்தத்தையே பிரிடனுக்குச் சாதகமாகமுடியும்படி செய்வதே.

ஆர். ஏ. எப். க்கு சீர்திருத்தப்பட்ட விமான தினுசுகள்.
ஆகாயமந்திரியின் யோசனைகளைப்பற்றி அமெரிக்கன் சமாசாரப் பத்திரிகை.
"நாஸி யுத்தப்பக்ஷிகளுக்கு" தயாராகுதல்.
ஐக்கிய நாடுகளிலிருந்து தற்கால புதிய தினுசுகள்.

"பறத்தலும் வழக்கமான ஆகாய விமானச்செல்கை" என்ற அமெரிக்கன் சாஸ்திரார்த்த சமாசார பத்திரிகையில் லியோனார்டு எங்கல் எழுதிய நிருபத்திலிருந்து பொருக்கப்பட்ட அடியில்கண்ட விஷயங்களை டைம்ஸ் ஆகாய விமான நிருபர் எடுத்துக்காட்டியிருக்கிறார். இதில் காணப்பட்டிருக்கும் விவரங்கள் உத்தியோக ஆகாய மந்திரி சுற்றத்திலிருந்து ஊர்ஜிதமோ மறுத்தலோ செய்யப்படவில்லை.

சுழல் விமானங்கள், நெருப்புக்கக்கும் விமானங்கள், வெல்லிங்டன், விட்லி முதலானவைகளுக்கு பர்த்தியாக அதிசமீபத்தில் முழுவதும் புதுவிதமான எதிர்ப்பு விமானங்களை ஆகாய மந்திரி இலாகா தயாரித்துக்கொண்டிருக்கிறது. இந்த புது விமானம், ஒரு மணிக்கு 425-மைல் போகும் வேகமுள்ளதும், ரோல்ஸ் ராய்ஸ் பிராந்து இஞ்ஜின் அமைக்கப்பட்டு 2,000 குதிரை வேகமுள்ள ஹாக்கர் சுழல்காற்று ஓர் பீடமுள்ளதுமான சண்டை விமானம் ஒன்று; ரோல்ஸ்ராய்ஸ் மர்லின் இன்ஜின்களால் செல்லக்கூடியதும், ஒரு மணிக்கு 400-மைலுக்கு கொஞ்சம் மேல் போகும் வேகமுள்ளதும், வெஸ்ட்லாண்டு சுழல் காற்று இரண்டு இஞ்ஜின் அமைக்கப்பட்டுள்ள எதிர்ப்பு விமானம் ஒன்று; ஒரு மணிக்கு 325 மைல் வேகமுள்ளதும் பிராந்து இன்ஜினால் ஓடக்கூடியதுமான அவ்ரோமான்செஸ்டர் இரண்டு இன்ஜினுள்ள வெடிகுண்டெறியும் விமானம் ஒன்று; ஒரு ஷார்ட் ஸ்டர்லிங் நான்கு இன்ஜினுள்ள வெடிகுண்டு விமானமுமாகும்.

விக்கர்ஸ் வெல்லிங்டன், ஹாண்ட்லிபேஜ், ஹாம்ப்டன், ஆர்ம்ஸ்டாங்கு, விட்வோர்த், விட்லி இவைகளை மாற்றி புது யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

வெல்லிங்டன், விட்லி, இவைகளில் 1,000-குதிரை சக்திக்குப்பதிலாக 2,000-குதிரை வேகமுள்ள மோட்டார்களை வைக்கப்பட்டிருக்கிறது.

உபயோகத்திற்கு புதிய விமானங்கள் எவ்வளவு தயாராகயிருக்கிறதென்பதை நிச்சயமாக அறியக்கூடவில்லை. சுமார் 20 சண்டை வியூகங்கள் வகுக்கக்கூடிய-மொத்தம் கிட்டத்தட்ட 400 டார்னுடோ விமானங்கள் தயாரித்து முடித்து விட்டதாக தெரிகிறது. இது எழுதப்படும் டயத்தில் சுழல் காற்று விமானங்கள் அநேகம் செய்து முடித்தாகவில்லையென்றும், மான்செஸ்டர் விமானங்கள் வியூகம் வகிக்கும்படி அவ்வளவு முடிவடையவில்லையென்றும் தெரிகிறது. புது இன்ஜின் அமைக்கப்பட்ட வெல்லிங்டன்கள், விட்லிகள், ஹாம்டன்கள் இவைகளின் புது தினுசுகள் சென்ற நவம்பர் மாதம் வாக்கில்தான் முதலில் பரிசோதனை செய்யப்பட்டது.

எட்டு யந்திர துப்பாக்கிகள், மூன்று 20 மிலிமீட்டர் பீரங்கிகள் இவைகள் பொருந்திய சண்டமாருத விமானத்தின் கவசம் ஒன்றுதான் விரிவாகவும் மனதிற் பதியும்படியாகவும் தெரியச்செய்கிறது. சுழல்காற்று விமானத்தில் கவசமாக யந்திரசக்தியால் திருப்பக்கூடிய கோபுரம் அடங்கியிருப்பதாக நம்பப்படுகிறது. இதின் முதல் காரியம் ஜெர்மனியின் இரண்டு இன்ஜினுள்ள மெஸ்ஸர்ஷிமிட் 110-ஐ தாக்குதலேயாகும்.

இப்பொழுது செய்திருக்கிற மாறுதல்களால் வெல்லிங்டனை உன்னத வேகத்தில் ஒரு மணிக்கு 265 மைலிலிருந்து 325-மைலுக்கு அதிகப்படுத்தியும், புது இன்ஜின் வைக்கப்பட்ட முறையில் விட்லியின் வேகம் ஒரு மணிக்கு சுமார் 300-மைல் செய்ததுமாகும். ஹாம்டனுக்கு புது இன்ஜின் 2,000-குதிரை சக்தியுடையதாகயிருந்தால் ஒரு மணிக்கு 340-மைலும், 1,600-குதிரை சக்தியானல் ஒரு மணிக்கு 310-மைலுமாக்கப்பட்டிருக்கிறது.

ராஜீய ஆகாயப்படைகள் (R. A. F.) தங்கள் வியூகத்தில் ஐக்கிய நாடுகளிலிருந்துவரும் புதிய தினுசுகளையும் சேர்த்துக்கொள்ளுவார்கள். அமெரிக்கன் ஆகாயவிமானங்கள் அநேகமாய் மாதம் 1-க்கு 350-வீதம் இங்கிலாந்துக்கு போய்கொண்டிருக்கிறது. இந்த சங்கியை நிலையாக ஏறிவருகிறது. இந்த புதிய மாதிரிகளில் பிரான்ஸுக்கு கட்டப்பட்ட மணிக்கு 325-மைல் வேகமுள்ள லேட்பாம்பரைவிட ஜாஸ்தி பலமுள்ள டக்லஸ் டி. பி. 7. (Douglas D. B. 7.) விமானங்களும் இருக்கின்றன. இன்னும் இதர முக்கிய வகைகளான கன்ஸாலிடேடட் பி.24, போயிங் பி. 17, மார்டின் 167W(எதிர்க்கும் வெடிகுண்டு விமானம்) இவைகளும் செய்தனுப்ப உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மன் புது விமானங்களைப்பற்றி தர்க்கித்துப்பேசிய பின்னர், அந்த நிருபம் முடிவதாவது:—நாஸி சண்டை பக்ஷிகள் இங்கிலாந்தின் மேல் எந்தக் காலத்திலோ எந்த இடத்திலோ இப்பொழுது தலைகாட்டினால் இங்கிலாந்தில் அவைகளைவிட பலமும் வேகமும் உள்ள விமானங்களால் தாக்கி முறியடிப்பது நிச்சயம். இந்தச் சண்டையில் ராஜீய ஆகாயப்படைக்கு திறனுள்ள விமானங்கள் இல்லையென்ற சிரமம் கிடையாது. அந்த மாதிரி எக்காலத்திலும் ஏற்படும் சம்பாவிதமும் தோற்றவில்லை.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XXVIII.

1941—

					மணி.
ஜனவரி	25, சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
	26, ஞாயிற்றுக்கிழமை.	ராசியமங்கலம்	...	காலை	9.45
		நாஞ்சூர்	...	,,	9.45
		வயலோகம்	...	,,	9.45
	27, திங்கட்கிழமை ...	விராச்சிலை	...	மாலை	5.00
	28, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம்	...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை	...	,,	10.25
		புதுப்பட்டி (பொன்னமராவதி).		மாலை	5.30
		ஆதனக்கோட்டை	...	,,	5.30
		ராயவரம்	...	,,	5.30
	29, புதன்கிழமை ...	காலேஜ் (B) தமிழ்	...	காலை	10.25
		கீழாநிலை	...	மாலை	5.30
	31, வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம்	...	காலை	10.00

பிரஸங்கம் XXIX.

பிப்ரவரி	1, சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
	2, ஞாயிற்றுக்கிழமை.	வேங்கடக்குளம்	...	காலை	9.45
		புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.		மாலை	5.00
		திருவப்பூர்	...	,,	5.00
	3, திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ்	...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை	..	,,	10.25
		பனையபட்டி	...	மாலை	5.30
		அன்னவாசல்	...	,,	5.30
	4, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம்	...	காலை	10.25
		கீரனூர்	...	மாலை	5.30
		ஒடையாளிப்பட்டி	...	,,	5.30
	5, புதன்கிழமை ...	ஏம்பல்	...	,,	5.30
	6, வியாழக்கிழமை ...	வேகுபட்டி	...	,,	5.30
		அரிமளம்	...	,,	5.30
		புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.		,,	3.30
	7, வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம்	...	காலை	10.00

இந்தியாவின் பாதுகாப்புக்கு உதவுங்கள்

பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவருமல் வாங்குங்கள்.

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன் மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3¼ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—25-1-41.